# தமிழர் கட்டிடக்கலை

முனைவர் கோ. தெய்வநாயகம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# தமிழர் கட்டிடக்கலை

முனைவர் **கோ. தெய்வநாயகம்**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

முனைவர் செ. அரங்கநாயகம் அறக்கட்டளைச்
சொற்பொழிவு - ( 28, 29.11.1991 )

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tamilar Kattitakkalai |
| Author | : | Dr. G. Deivanayagam |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai-600 113 |
| Publication No. | : | 417 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 2002 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | x + 110 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 30/- (Rupees Thirty Only) |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004<br>PH. 4984693, 4661807 |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு
நிறுவனம் பொறுப்பல்ல

# உள்ளே


| | |
|---|---|
| அணிந்துரை | v |
| முகவுரை | ix |
| தமிழர் கட்டிடக்கலை | 1 |
| நகரின் தோற்றமும் வளர்ச்சியும் | 6 |
| திராவிடரும் கட்டிட நகரியத் திட்டமிடலும் | 11 |
| கோயிற்கட்டிடக்கலை | 16 |
| கோயிற்கட்டிடக் கலை வளர்ச்சி | 25 |
| கோயிற் கட்டிடக்கலையும் தத்துவ இலக்கியங்களும் | 36 |
| வாழ்வியற் கட்டிடக்கலையும் தமிழிலக்கியங்களும் | 40 |
| சுற்றுப்புறச் சூழலும் கட்டிடக்கலையும் | 45 |
| கட்டிடக்கலையும் கோளியல் இலக்கியங்களும் | 53 |
| கட்டிடக்கலை ஆய்வுக்களங்கள் | 62 |
| உலக மரபுச்சின்னப் பாதுகாப்பும் தமிழகத்தின் தனிப்பெரும் தகுதியும் (விளக்க அறிமுகம்) | 66 |
| பண்டைத் தமிழகச் சுருங்கைகள் | 90 |
| பின்னிணைப்பு (வரைபடங்கள்) | 98 |

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

# அணிந்துரை

கட்டிடக்கலையின் சிறப்பினை உணர்த்தத் தண்டமிழில் தகைசான்ற சான்றுகள் பல உண்டு. அவை சான்றுகளாக மட்டுமல்லாமல் காலத் தொன்மையையும் விளக்கி நிற்கின்றன. உலகில் மனிதன் தோன்றிய காலத்தில் தன் தற்காப்பிற்காகவும், தன் உணவு வேட்டைக்காகவும் கூரிய கற்களைப் பயன்படுத்தினான் என்னும் மானிடவரலாற்றின் தகவல் வெற்றுத்தகவல் மட்டுமன்று ; அது மனித நாகரிக காலத்தின் தொன்மையை விளக்கும் கற்காலம் என்ற சிறப்பினையுடைய தரவாகவும் விளங்குகிறது என்று வரலாற்று அறிஞர்கள் உறுதிசெய்துள்ளனர்.

நாகரிக உணர்வினை வாழ்க்கைச் செந்நெறியின் அடித்தளமாகக் கருதிய அன்றே, மனிதன் கல்லைக்கொண்டு கட்டிடம் கட்டும் கட்டிடக் கலைக்கு வித்திட்டு விட்டான். அத்தகைய கட்டிடக்கலைத் தொழில் நுட்பங்களைக் கண்டு, குறித்து, ஆய்ந்து அதன் முடிவாக நாம் பெருமிதம் கொண்டுள்ளோம். அன்று விண்ணுயர்ந்து நின்று, இன்று சிதைந்து காணப்படும் கட்டிடக் கலையின் சிந்தனை எச்சங்களை ஒன்று திரட்டி, வாழ்வாங்கு வாழ்ந்த நம் முன்னோர்தம் கலைநுணுக்க அறிவை எண்ணி எண்ணி வியக்கிறோம்.

கட்டிடக்கலை என்ற தலைப்பில் அமைந்த இந்நூல், உலகளாவிய கட்டிடக்கலையின் சிறப்புகளை எடுத்து விளக்குகின்றது. பேராசிரியர் முனைவர் கோ. தெய்வநாயகம் அவர்கள், தம் வித்தகத் திறத்தால் முயன்று விரித்துச் சொல்லியுள்ள கட்டிடக்கலை பற்றிய செய்திகள் அத்தனையும் தமிழுலகிற்குப் புதுமையானவை; பெருமை சேர்ப்பவை. இந்நூல் இரண்டு பகுப்பினைக் கொண்டதாக அமைகிறது. முதலில் தமிழகத்தின் கட்டிடக்கலை என்ற வகையில் `நகரின் தோற்றமும் வளர்ச்சியும்`, `திராவிடரும் கட்டிட நகரியத் திட்ட மிடலும்` என்ற பொதுக் கருத்தில் நின்று ஆய்வு செய்கிறது. அதன் பின்னர்த் தமிழர்தம் கட்டிடக்கலைக்குப் பெரும்புகழைத் தேடித்தரும் கோயிற் கட்டிடக்கலை, கோயிற் கட்டிடக்கலை வளர்ச்சி, கோயிற் கட்டிடக்கலையும் தத்துவ

இலக்கியங்களும் எனக் கட்டிடக்கலையின் தமிழகத்துப் பரிணாம வளர்ச்சியின் ஒரு பகுதியாக விளங்கும் கோயில் சார்ந்த கட்டிடக்கலையைச் சிறப்புற எடுத்துக் கூறுகிறது. 'வாழ்வியற் கட்டிடக்கலையும் தமிழிலக்கியங்களும்' என்ற பகுதி இலக்கியத்தரவுகளைக் கொண்டு, தமிழகத்தின் கட்டிடக்கலைச் சிறப்புகளைத் தொகுத்துக் கூறுகிறது.

இரண்டாம் நிலையில் ஐரோப்பிய நாடு தொடங்கி ஆப்பிரிக்க, ஆசிய, ஆஸ்திரேலிய கண்டங்களில் சிறப்புற்று விளங்கிய கிரேக்க, ரோமானிய, எகிப்திய, சுமேரிய, காந்தார, கிழக்காசிய நாடுகளின் பண்பாடுகளை எடுத்துக்காட்டும் காலக் கண்ணாடிகளாக விளங்கும் கட்டிடக்கலைச் சிறப்புகளை, உலக மரபுச் சின்னப் பாதுகாப்பு என்ற பெயரில் பிற நாடுகளில் பாதுகாக்கப்பட்டு வரும் பலவேறுபட்ட தொல்லியல் கூறுகளை இந்நூலாசிரியர் செம்மையுற அழகு தமிழில் தொகுத்துப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

இதுமட்டுமன்றித் தமிழர்தம், கட்டிடக்கலையின் சிறப்பை எடுத்துக் காட்டும் வகையில் 'பண்டைத் தமிழகச் சுருங்கைகள்' என்ற பகுதியில், சங்க காலம் தொடங்கித் தஞ்சை மராத்திய மன்னர் காலம் வரை அமைந்த சுருங்கை அமைப்புத் தொழில் நுட்பங்களை ஆசிரியர் மிகத் தெளிவாக வெளிக் கொணர்ந்துள்ளார். வரலாற்று மாணவர் மற்றும் தொல்லியல் ஆர்வலர் போன்றோர்க்கு இந்நூல் பெரிதும் பயன்தரும். தமிழில் கட்டிடக்கலை பற்றிய ஆய்வில் பலநூல்கள் வெளிவந்துள்ளன. அவை பெரும்பாலும் கோயிற் கட்டிடக்கலை சார்ந்தனவாகவே அமைந்துள்ளன. ஆனால், இந்நூல் சற்று மாறுபட்டுக் கட்டிடக்கலை தொடர்பான ஒரு வரலாற்றுப் பார்வையில் அமைந்துள்ளமை இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

முனைவர் செ. அரங்கநாயகம் அறக்கட்டளைச் சொற்பொழிவில் பேராசிரியர் முனைவர் கோ. தெய்வநாயகம் *1991* ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் *28, 29* ஆகிய நாள்களில் ஆற்றிய சொற்பொழிவு பத்தாண்டுகளுக்குப் பிறகு இன்று நூலாக வெளிவருகிறது,

இந்நூலின் அச்சுப்படிகளைத் திருத்திச் செம்மை செய்து உதவிய திரு த.பூமிநாகநாதன் (ஆராய்ச்சி உதவியாளர்) அவர்களுக்கு எனது பாராட்டுகள். இந்நூலிற்கு ஒளியச்சுக் கோப்புச் செய்து தந்த நிறுவனக் கணிப்பொறி உதவியாளர் திருமதி பி. கௌசல்யா அவர்களுக்கு எனது வாழ்த்துகள்.

இந்நிறுவனச் செயல்கள் அனைத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் நிறுவனத்தலைவர் மாண்புமிகு கல்வி அமைச்சர் முனைவர் மு. தம்பிதுரை அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திரு பி.ஏ. இராமையா, இ.ஆ.ப அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத்துறைக் கூடுதல் செயலாளர் திரு. தா. சந்திரசேகரன், இ.ஆ.ப அவர்களுக்கும் நன்றி என்றும் உரியது.

இந்நூலினை விரைவாக அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் நன்றி

**இயக்குநர்**

# முகவுரை

"உலக அதிசயங்கள்" என்று மக்கள் சமுதாயத்தால் போற்றப் படுபவை யாவும் கட்டிடக்கலைச் செல்வங்களேயாகும். மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு, உறையுள், உடை ஆகிய மூன்றனுள் நடுவணது உறையுள். இதன் விளைவே கட்டுமானங்கள். அவையே காலத்தை வென்று மனித நாகரிக வரலாற்றை நின்று காட்டும் சான்றாதாரங்களாக விளங்குகின்றன. இயற்கையாக அமைந்த ஒரு வெற்றிடத்தை, மலைமுழைஞ்சினை, மரப்பொந்தினை அல்லது பிலத்துப் புழையினை மனிதன் தன் தேவைக்கேற்ப ஆற்றலுக்கேற்பத் தனது அழகுணர்ச்சிக்கேற்ப வடிவாக்கம் செய்து வாழிடமாக அமைத்துக் கொண்ட உறைவிடங்களே கட்டிடக்கலைச் சின்னங்கள்.

கட்டுவதற்கு வெறும் கலையுணர்வு மட்டும் போதாது. பொறியியற் திறமும் வேண்டும். கட்டுதற்கான இடம், பொருள், ஏவல் ஆகிய மூன்று அடிப்படைக் காரணங்கள் பற்றிய தெள்ளிய அறிவு கொண்டிருந்தாலன்றிக் கட்டிடத்தைக் கலையுணர்வுடன் படைத்துக் கட்டிடக்கலைச் சின்னமாக உருவாக்க இயலாது. தொழில் நுட்பமும் கலைநுட்பமும் இணைந்து உருவாக்கப்படுவதே கட்டிடக்கலை.

இதன் செம்பொருள் உணர்ந்த மூத்த குடி உலகில் தமிழ்க்குடியே. உலகின் தலைசிறந்த கட்டிடக்கலை வல்லுநர்களாகத் தமிழர் விளங்கி உள்ளனர். எனவேதான் பிரித்தானியக் கலைக் களஞ்சியம் தமிழர்களைத் தலை சிறந்த 'கோயிற்கட்டிடக்கலைக் கட்டுநர்கள்' எனக் குறிக்கின்றது. வாழ்வியல் மற்றும் சமயஞ்சார் கட்டிடக்கலையின் எழிலார்ந்த வடிவாக்கங்களைத் தமிழர்கள் தொன்று தொட்டே ஆளுமையுடன் படைத்துச் சிறந்தமையை இன்றும் தமிழகத்தின் ஊர்களிலும் கோயில்களிலும் கண்டு மகிழலாம்.

கட்டிடக்கலையின் அடிப்படைக் காரணங்களாகக் காணலாகும் நிலவியல், வானியல், தட்ப வெப்ப இயல் போன்றவற்றின் இயல்பிற்கேற்ப கட்டுமானங்களைப் படைத்துச் சிறந்த 'கொத்தர்களை'த் தமிழர்

'நூலறிபுலவர்' எனச் சிறப்பித்துள்ளனர். இந்நூல் என்பது நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் நூற்கயிறுதான். நூற்கயிற்றின் துணைக் கொண்டு அற்புத வடிவாக்கங்களைப் படைத்து வரும் எளிய ஆனால் அரிய கட்டுமானக் கலையின் விற்பன்னர்கள் தமிழராவர்.

தமிழரின் கட்டிடக்கலை அறிவு தொடர்பான ஓர் அறிமுகமாக அமைவது 'தமிழர் கட்டிடக்கலை' என்ற இந்த நூல் ஆகும். இந்நூல் அமைவதற்குத் தமிழகவரசின் முன்னாள் கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் பெயரால் அமைந்துள்ள அறக்கட்டளை வழி உரையாற்றச் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாய்ப்பளித்தது. பத்தாண்டுகட்கு முன்னராற்றிய இவ்வுரைப் பொழிவு இன்று நூல் வடிவு பெறுவது மிகுந்த மகிழ்வு தருகிறது. இந் நிறுவனத்திலேயே அளிக்கப் பெற்ற ஆய்வுரைகளும் இணைந்து வருவது பயன் தருவதாகும்.

இச்செயன்மைக்குரிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மேனாள் இயக்குநர் பொறுப்பு முனைவர் அன்னிதாமசு அவர்களுக்கும், முன்னாள் இயக்குநர் முனைவர் இராமர் இளங்கோ அவர்களுக்கும், அறக்கட்டளைப் பொறுப்பாற்றிய முனைவர் ச. சிவகாமி அவர்கட்கும் நிறுவன நண்பர்கள் அத்துணை பேர்க்கும் எம் நன்றி.

இதுகாறும் அச்சிடப் பெறாமல் தேங்கிக் கிடந்த இந்நூலை அச்சில் கொணர வேண்டும் என்ற ஆர்வத்தோடு முயன்று இப்பொழுது வெளிக் கொணர்ந்துதவிய இந்நாள் இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கு என் நன்றி என்றும் உரியது.

என்னை இப்பணிக்கு இப்படி ஆளாக்கிய பெருமை அண்ணல் முனைவர் ச.வே. சுப்பிரமணியனாரைச் சாரும். அவர்களது ஆசியுடன் இந்நூல் இப்போது வெளிவருவது எம் பேறு.

வாழிய தமிழகம்

அன்புடன்

***(கோ. தெய்வநாயகம்)***

*12.03.2002*

# தமிழர் கட்டிடக்கலை

கட்டு-இடம் என்ற சொல் அமைப்பு 'கட்டப்பெற்ற' இடம் என்ற பொருளில் அமைந்துள்ளமை தெள்ளிது. இச்சொல் 'அளவுக்கு உட்பட்ட இடம்' அல்லது 'கட்டுமானம் பெற்ற இடம்' என்ற பொருளுடையது. வழக்கில் வழங்கும், எத்தனைக்கட்டு வீடு ? பின்கட்டு, முன்கட்டு போன்ற சொற்களும் " கட்டவை மூன்றும் எரித்த பிரான்" (தேவாரம் *386 : 7)* என்ற இலக்கியச் சான்றுகளும் "கட்டிடம்" என்ற பழஞ் சொல்லாட்சியினைத் தருகின்றன. பிங்கல நிகண்டும் இச் சொல்லாட்சியைப் பதிவு செய்துள்ளது. ஆயின் கட்டிடம் என்ற சொல்லுக்குரிய அதே பொருளில் மயக்கு வழக்காகக் கட்டடம் என்ற சொல் தமிழ்ப் பேரகராதியில் எவ்வாறோ இடம்பெற்றமையால் "கட்டட" ஆட்சி இன்று தமிழில் அதிகமாகக் காணப்படுகிறது.

கட்டுதல் எனும் தொழில் கட்டிடக் கலையின் அடிப்படையாகவுள்ளமை உணரத்தக்கது. இடவரையறை, விடுபறித்தல், அடிப்படை அமைத்தல், கட்டிடம் எழுப்புதல் என அமையும் தொழில் முறைகளை,

> **"கல்லடித்து அடுக்கிவாய் பளிங்கரிந்து கட்டி மீது**
> **எல்லுடைப் பசும்பொன் வைத்து இலங்கு பல் மணிக்குலம்**
> **வில்லிடக் குயிற்றி வாள் விரிக்கும் வெள்ளி மாமரம்**
> **புல்லிடக் கிடத்தி வச்சிரத்த கால் பொருத்தியே "** *(கம்ப : 116)*

போன்ற இலக்கியப்பாடல்கள் இனங்காட்டுகின்றன.

மனிதனுடைய நல்வாழ்விற்கு உதவுகிற எல்லாத் தொழில்களையும் கலைகள் என்று கூறலாம். அவ்வகையில் மனிதனின் அடிப்படைத் தேவையான உண்டி, உறையுள், உடை என்ற மூன்று தேவைகளுள் உறையுளை நிறைவு செய்துதரும் தொழில் மனிதனது உணர்வுகளுக்கேற்ப வடிவம் பெற்றுத் தோன்றுவது கட்டிடக்கலையில்தான் எனலாம். இவ்வாறு தொழில் நுட்பமும் முருகியலுணர்வும் ஒருங்கிணைந்து காணப்படும் திட்பம் கட்டிடக்கலையியலின் அடிப்படை அமைப்பாகும்.

வீடுகள், மாளிகைகள், அரண்மனைகள், கோட்டைகள், பாலங்கள், அணைக்கட்டுகள், பொதுமன்றங்கள், கோயில்கள் போல்வன கல், மண், சுதை இவற்றைக் கொண்டு உருவாக்கப்பெறும் கட்டிடங்களாகும்.

உலோகங்கள், மரங்கள், பிறபொருட்களைக் கொண்டு தளவாடச்சாமான்கள், ஊர்திகள், எந்திரங்கள் முதலியவற்றைக் கட்டி உருவாக்குவதும் கட்டிடக்கலையேயாகும்.

கட்டிடக்கலையின் முன் நிகழ்வென அமைவது நிலவியற் கட்டிடக்கலையாகும் ( Landscape Architecture ). அதனடிப்படையில் கிராம உருவாக்கம், நகர் உருவாக்கம் ( Town Planning ) என்ற செயற்பாடுகள் அமைகின்றன. அவற்றின் மேலாக மனைகோலுதல் அல்லது சதுரித்தல் அதற்கான காலம், நேரம், முறைகள், அளவீடு, இடத்தேர்ச்சி முதலிய வாஸ்துசாத்திரம், மனையடி சாத்திரங்கள் புகல்கின்ற நுட்பங்கள் மேற்கொள்ளப்பெறுகின்றன.

குடியிருப்புக் கட்டுமானங்களோ, கோயில்களோ அன்றி எவ்வகைக் கட்டுமானமாயினும் சரி அவை சுற்றுப்புறச் சூழலுக்கேற்பவே உருவாக்கம் பெறுகின்றன. இவ்வகையில் கட்டுமான அளவு, முறை, அமை பொருட்கள், வடிவம் முதலியன உருப்பெறுகின்றன.

மழை நிரம்பிய மலைச்சரிவுப்பகுதிகளில் உருப்பெறும் கட்டுமானங்கள் சரிவுக்கூரைகளைப் பெரும்பான்மை பெறுகின்றன. அடர்ந்த பெருங்காட்டு உருப்பெறுவன மரத்தால் ஆக்கம் பெறுகின்றன. வளவிய நிலப்பகுதியிலோ செங்கல், சுண்ணம் இவற்றால் உருவாக்கம் : கல் மலைகளை அடுத்த பகுதிகளில் கருங்கற்பணிகள் போல்வன தெள்ளியது.

வட்டம், சதுரம், நீள்சதுரம் ஆகிய வடிவமைதிகள் காற்றின் இயக்கம், அழுத்தம், சூரிய சந்திர ஒளி, பருவக்காற்றுகளின் விளைவாகிய மழைவீச்சு இவற்றைப் பொறுத்தமைகின்றன.

கட்டுப் பெறும் இடத்தின் நில இயல்பிற்கேற்பத் தளம் அமைக்கப்பெற்றுக் கட்டிடம் உருவாவது இயற்கை. இவ்வாறாகத் தொழில் நுட்பமும் முருகியலுணர்வும் ஒருங்கிணைந்து சூழலடிப்படையில் உருவாக்கம் பெறும் கட்டிடக்கலையியல் மனிதனது அடிப்படைத் தேவையுள் ஒன்றாதலின் அதனை நன்கறிவது நன்று.

உலகில் முன்தோன்றி மூத்த குடியெனச் சிறப்புறும் தமிழ்மக்கள் இக்கட்டிடக்கலையில் மிகச் சிறந்த தேர்ச்சியினை வரலாற்றிற்கும் முந்திய காலமுதலே பெற்றுச் சிறந்துள்ளனர். கிடைக்கக்கூடிய சங்க கால இலக்கியச் சான்றுகளும், தொல்பொருளாய்வுகளும் தமிழினம் இக்கலைப்படைப்புகளில் மிக உயர்ந்த ஆற்றல் பெற்றிருந்த காலச் சான்றுகளாகத் தரவுகளைத் தருகின்றன. அவ்வகையில் காணலாகும்.

### 1. தமிழிலக்கியங்களும் கட்டிடக்கலையும்

ஊரமைப்பு பற்றிய விளக்கமாகக் காடு, சோலைகள், பூங்கா, ஊர்ப்பொது முன்றில், முப்புறம் நீர்ப்பெருக்குத் தழுவிய நிலப்பரப்பு, (துருத்தி), ஆறு, குளம், கேணி, ஊருணி, சதுக்கங்கள், சந்திகள், மன்றங்கள் முதலிய அங்கங்கள்

உடைய, ஒரூரின் அமைப்பினைத் *திருமுருகாற்றுப்படை* கீழ்வருமாறு விளக்குகிறது:

**" வேலன் றைஇய வெறியயர் களனும்**
**காடுங் காவும் கவின்பெறு துருத்தியும்**
**யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்**
**சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்**
**மன்றமும் பொதுயிலும் கந்துடை நிலையினும் "** *(222-226)*

இத்தொடர்களின் முன்னிரு தொடர்கள் மிகுந்த நுட்பம் வாய்ந்தவை ஆகும். அவை :

**" ஊரூர் கொண்ட சீரிகெழு விழவினும்**
**ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும் "** *(220-221)*

இதில் ஊரூர் என்ற சொல் நகரமைப்பு ( Town Planning ) என்ற பொருளில் ஆளப்பெற்று வல்லார் பலரும் புகழ்ந்து ஏத்தும் வகையில் கற்றுப்புறச் சூழலடிப்படையில் அமைந்துள்ளது. தமிழ் மரபிற்கேற்ப அந்நகர்

வேலன் றைஇய வெறியயர் களன்

என்ற உறுப்பைக் கெண்டு குறிஞ்சியையும், காடு என்றமைதிகொண்டு முல்லையையும், கா, துருத்தி இவற்றால் மருதத்தையும், வேறுபல்வைப்பு என்பதால் பாலையையும், சதுக்கம் சந்தி இவற்றால் நெய்தலையும், தம்மகத்தே ஒருங்குகொண்டு திகழ்ந்ததை உணர்த்துவதுதெள்ளிது. இதனால் பண்டைத் தமிழர் தாம் நகரமைப்புத் திட்டத்தில் ஐவகைத் திணைக் கூறுகளையடக்கியே கண்டனர் என்ற மெய்ம்மையும் அவ்வகை இணக்கமே (திணை இணைப்பே) ஒரு நகரமைப்பின் இலக்கணமாகவும் அங்கு வாழ் மக்களுக்குப் பயனுடைய அமைப்பு எனவும் உணர்த்தும் நுட்பம் புலப்படும். இது நகரமைப்புத்திட்ட வல்லுநர் வியக்கும் தொழில்நுட்ப அறிவியல் செய்தியாகும். பட்டினப்பாலையின்,

**" காடுகொன்று நாடாக்கிக்**
**குளந்தொட்டு வளம்பெருக்கி**
**பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்**
**கோயிலோடு குடிநீரீஇ**
**வாயிலோடு புழையமைத்து**
**ஞாயிறொறும் புதைநீரீஇ "** *(283-88)*

என்ற தொடர்களில் முல்லை நில மொன்று, நகரமைப்புத் திட்டத்தின்கீழ் அழகிய நகரமாக உருப்பெற்ற பழந்தமிழகத் தொழில்நுட்ப விளக்கமாக உள்ளமை கண்கூடு. குறிப்பிட்டஅளவிற்குக் காட்டை அழித்தலும் முன்னுள்ள குளங்களை ஆழப்படுத்தலும், அடுக்குமாடிக் கட்டிடங்களைக் கட்டுதலும், அரண்மனை, குடிமக்கள் குடியிருப்புங் கண்டு நகரைச் சுற்றிக் காவல், அரண், மதில் கண்டு அவற்றில் வாயிலும் வாயிலுக்கும் மேலாகச் கருங்கைப் புழைகளும் உருவாக்கி நெடுமதிலரண்களில் புழைகள் கண்டும் உருவாக்கம்

செய்வதே நகரமைப்பு என்பதனை இப்பண்டைத் தமிழிலக்கிய வரிகள் சுட்டுகின்றன.

இம்முறை திருவிளையாடற்புராணம் எழுதிய பரஞ்சோதி முனிவர் காலத்திலும் பழக்கத்தில் இருந்தமையினை அவரது படைப்பு வரிகள் கீழ்வருமாறு உணர்த்துகின்றன.

அ. **“ பாய வேலையினார்த்தனர் வழிக்கோடு படர்ந்தார்**
**சேய காடெறிந் தணிநகர் செய்தொழில் மாக்கள் ”** *(3:32)*

ஆ. **“ களைந்து நீணிலந் திருத்திச்செந் நெறிபடக் கண்டு**
**வளைந்து நன்னகரெடுப்ப தெவ் வாறு ?”**

அவ்வாறமைந்த நகர் எவ்வகைக் கட்டுமானங்களைக் கொண்டன என்பதற்கும் நம் தமிழிலக்கியங்கள் சான்று பகர்கின்றன. வளைந்த மதில்கள், கோபுரங்கள், தடாகங்கள், மாடங்கள், கூடங்கள், மண்டபங்கள், உயர்ந்த இஞ்சிகள், அகன்ற வீதிகள், வாயில்கள், மன்றுகள், பூம்பொழில்கள் முதலியன அமைக்கப்பெற்ற திறத்தை உரிய இயல்பை விளக்கமாக,

**“ வளைமதில்கண்டராம் மறுகுகோ புரந்தடாகம்**
**கிளரொளி மாடங்கூட மண்டபங் கெருடி மற்றும் ”**
**(வேம்பத்தூரார் திருவிளையாடல் *47:12*)**

**“ தொல்லை மரபின் மணிமாடங்கட்ட மஞ்சு தோயிஞ்சி**
**மல்லல் வீதி மடங் கழக மற்றுந் திருத்தி மாறின்றி ”**
**(வேம்பத்தூரார் திருவிளையாடல் *43:15*)**

**“ கடிகொள் பூம்பொழி லின்னவும் பதியவாக் கண்டு ”**
**(பரஞ்சோதி திருவிளையாடற் புராணம் *49:27*)**

**“ வீதியுங் கவலையு மிகவளம் புகன்று ”** *(**கல்லாடம்** 43)*

**“ யாறுகிடந்தன்ன அகனெடுந் தெரு ”** *(**மதுரைக்** 359)*

**“ நால்வேறு தெருவு ”** *(**மதுரைக்** 520)*

**“ உயர்பூரிம விழுத் தெருவு ”** *(**மதுரைக்** 18)*

**“ ஓவுக் கண்டன்ன விருபெரு நியமத்து ”** *(**மதுரைக்**365)*

**“ வையை யன்னவழக்குடை வாயில் ”** *(**மதுரைக்** 355)*

**“ வேழம் சென்றுபுக**
**குன்று குயின்றன்ன ஓங்குநிலை வாயில் ”** *(**நெடுநல்வாடை** 87-88)*

**“ காழ் சாய்த்து**
**நொடை நவில் நெடுங்கடை அடைத்து ”** *(**மதுரைக்** 621-622)*

என்பன அமைகின்றன. இயன்றவரை மதில்கள் நேருற அமைதலே சிறப்பு. இன்றேல் அதற்குறும் குறையே ஊர்ப்பெயராகவும் அமையும். இவ்வாறே

ஏனைய நகர உறுப்புக்களுக்கும் அமையும். இதனை

> **" மதில் திருக்காற்**
> **பின்னரும் பதியை நல்லோர் பெயர் திருமுடங்கலென்றார்"**
> *(வேம்பத்தூரர் திருவிளையாடல் 47:14)*

என ஒரு சான்று விளக்கும்.

எத்துணை மக்களும் வளமொடு வாழத்தக்க வசதிகளை (சாலை, குடிநீர், நீர்நிலைகள், காற்றோட்டம், சுகாதாரம், நல்ல வசதியான வீடுகள் கூட்டம் கூடத்தக்க பரப்பு கொண்டிருக்கவேண்டும் என்ற நகரமைப்புத் திட்டக் கொள்கை கீழ்வரும் இலக்கியச் சான்றிலும் காணப்படுகிறது.

> **" இத்தனை மாக்களும் இருக்கத் தக்கதாப்**
> **பத்தனங் காணவிப் பதிக்கண் "**
> *(பரஞ்சோதி திருவிளையாடற் புராணம் 49:18)*

> **" உரைசால் சிறப்பின் அரைசுவிழை திருவிற்**
> **பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்**
> **முழுங்கு கடன் ஞால முழுவதும் வரினும்**
> **வழுங்கத் தவாஅ வளத்ததாகி "** *( சிலம்பு 1:2:1-5)*

இவ்விலக்கியத் தொடர்கள் " குடியிருப்பும் அதன் அடிப்படைத் தேவைகளும்" என்ற கொள்கையையும் விளக்குவதாக உள்ளன.

நகரமைப்பு நிறைவுற்றுக் குடிமக்கள் நெருங்கி வாழ்ந்து வளமுற, குடிமக்கள் எண்ணிக்கை பெருகியும் இருப்பிடம் முதலிய வாய்ப்புகள் குறைந்தும் இருக்கும் நிலையில், இன்றைய " புறநகர் விரிவாக்கம் " போன்ற விரிவாக்க அமைப்புகளைத் தமிழகத்தின் பண்டைய தலைநகரங்கள் பெற்றிருந்தமையினை நன்கு அறியமுடிகிறது.

அவ்வகையில் சோழரின் உறையூருக்குப் புறநகர் இருந்தமையினை,

> **" முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கிய**
> **புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென் "** *(10:247-48)*

என்ற தொடராலும் பாண்டியரின் மதுரைக்குப் புறநகர் இருந்தமையினைப் புறஞ்சேரி இறுத்த காதையாலும் சிலம்பு உணர்த்துகிறது. சேரரின் வஞ்சிக்கும் புறநகர் இருந்தமையினைச் சிலம்பும் மணிமேகலையும் நன்கு புலனாக்குகின்றன.

# நகரின் தோற்றமும் வளர்ச்சியும்

பண்டைய மனிதன் தம் சொந்த முயற்சியில் கட்டுமானமாகக் கொண்ட ஓர் உறையுள், தேவைகருதி எண்ணிக்கையில் பெருகிக் "குறும்பு" ஆகும். நடமாட்டத்திற்கு வாய்ப்பாகவும் பாதுகாப்பு அமைப்பினை உறுதி பெறச் செய்வதற்குமாக இருப்பிடக் கட்டுமானங்களை ஒழுங்குற நெட்டுவாக்கில் இடையே அகலமாக இடைவெளிவிட்டு எதிருற அமைத்துச் சுற்றிலும் வேலி அமைத்துக் கொண்டதனைக் "காவற்குறும்பு" எனவும் கடிநகர் எனவும் நம் தமிழ் மரபு சுட்டுகிறது. இவ்வாறு ஒரு வீடு பெருகிப் பெருக்கத்திற்கேற்ப ஒழுங்கு பெற்றுக் காவலுடன் அமைந்து, அவ்வகை அமைவுகளும் இடப்பரப்பால் பெருகிச் சிறந்தது நகர் வளர்ச்சி எனலாம். இவ்வளர்ச்சி முறையினைப் பண்டைத் தமிழிலக்கியங்கள் நன்கு சுட்டுகின்றன.

**" பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர் "** *(298)*

என்ற *பெரும்பாணாற்றுப்படையின்* தொடரில் காணப்பெறும் நகர் என்ற சொல் "வீடு" என்பதனைச் சுட்டுகிறது. அதே இலக்கியத்தின்

**" பொன் துஞ்சு வியனகர் "** *(440)*

என்ற தொடரில் காணலாகும் "நகர்" என்ற சொல் "பெரும் வீடு" அல்லது அரண்மனை என்ற பொருளில் காணப்படுகிறது.

மதுரைக்காஞ்சியின்

**" நெடு நகர் வீழ்ந்த கரிகுதிர்ப்பள்ளி "** *(169)*

என்ற தொடர் சுட்டும் "நகர்" நகரம் என்ற பொருளில் விளங்குவது கண்கூடு. இவ்வாறு வீடு, பெரும் மாளிகைகள் நிறைந்திருக்கும் இடம் "நகர்" என வழங்கப்பெற்றமை ஆழ்ந்து நோக்கத்தக்கது.

மனிதனது அடிப்படைத் தேவையாகிய " வீடு" அவனுக்கு ஒப்வுக்குரியதாக அமைதி, வசதி, நிழல் இவற்றைத் தருவதுடன் பாதுகாப்பினையும் தரத்தக்கதாக இருப்பது நோக்கற்குரியது. முடிவுறக் கூறப்புகின் பாதுகாப்பும் வசதியும் கொண்டது "வீடு" : அதுவே "நகர்" அந்நகர் நிறைந்து காணப்பெறுவதும் நகரே.

புறநகர் அமைக்கும் முயற்சியில் காடுகொன்று நாடாக்கி "நகர்" கண்ட தமிழரின் இயல்பை,

**" பாய வேலையி னார்த்தனர் வழிக்கொடு படர்ந்தார்**
**சேய காடெறிந் தணிநகர் செய்தொழின் மாக்கள் "**

(பரஞ். திரு. *3:26*)

**" களைந்து நீணிலந் திருத்திச்செந் நெறிபடக் கண்டு**
**வளைந்து நன்னகரெடுப்ப தெவ்வாறு "** (பரஞ். திரு. 3:32)

என்ற இலக்கியத் தொடர்கள் புலனாக்குகின்றன. அவ்வாறமைக்கப் பெறும் கிராமங்கள் அல்லது நகரங்கள் எவ்வளவு பரப்பு உடையனவாக இருத்தல் வேண்டும் என்ற அளவீடுகள் இருந்தமையினைச் "சிற்ப நூற்கள்" தெளிவுறச் சுட்டுகின்றன. அதனை,

**" கம்பிய நூல் தொல் வரம்பெல்லை கண்டமைத்தான் "**

(பரஞ். திரு. *3:38*)

என்ற இலக்கியத் தொடர் உணர்த்துகின்றது. எவ்வகைக் கட்டுமானங்கள் எவ்வெத்திசையில் ஒரு நகரில் அமையவேண்டும் என்ற வாஸ்து விதி உணர்த்தும் தமிழ் இலக்கியச் சான்றுகளையும் காணமுடிகிறது. அவ்வகையில்

**" மாளிகை தனக்கம் மாநகர் வடகுணபாற் கண்டு "**

(பரஞ். திரு. *3:41*)

என்ற தொடர் இலங்குகின்றது. அவ்வாறே கோயில் ஒன்று நகரின் நடுவே இருந்தமையினை " நடுவூர்க் கோயில்" எனக் கலித்தொகை *(5:14)* சுட்டுகிறது. அத்தகு கட்டுமானத் தொழில் நுட்ப நூல்களைக் கற்றுணர்ந்த "புலவர்" பலர் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டிருந்தமையினை *நெடுநல்வாடை*

**" நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டு**
**தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி "** *(76-77)*

என்ற தொடரால் அறிவுறுத்துகின்றது

கால வளர்ச்சியில் "பாதுகாப்பு" என்ற நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் தகுதி மிக, தமிழகத்தில் பல்வேறு நகரங்கள்,

**" கடைகாப் பமைந்த காவலாளர்**
**மிடைகொண் டியங்கும் வியன்மலி மறுகும் "** (மணி *28-1, 29-30*)

என்ற இலக்கியத் தொடர்கள் சுட்டுவது போல் பல்வகை அரண்களைக் கொண்டு திகழ்ந்துள்ளன.

அரணாக எழுப்பப்பெற்ற சுவர்கள் நகரமைவுக்கு ஏற்ப வளைந்தும் நெளிந்தும் இருந்தமையால் " இஞ்சி " என வழங்கப் பெற்றுள்ளன. இவ்விஞ்சிகள் மிக்க உயரம் கொண்டவையாகத் திகழ்ந்துள்ளன. இதனை,

**" சுடுமண் ஓங்கிய நெடுநகர் "** (பெரும் *405*)

என இலக்கியம் சுட்டும். திருக்குறள் தரும் விளக்கம் வியப்பானது.

**" உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கும்**
**அமைவரண் என்றுரைக்கும் நூல் "** *(743)*

திண்மைக்கும் அருமைக்குமுரிய வகையில், "மறுவலிவூட்டப் பெற்ற பற்றாசு" முறையில் இரும்புக் கம்பிகளை ஊடமைத்து, பரற்கல்-சிமெண்ட் கலவையைக் கொண்டுபற்றாசிட்டு அமைக்கும் இற்றைய சுவர் முறையினை ஒத்து, இரும்புக் கம்பிகட்குப் பதிலாகச் செம்புக் கம்பிகளை ஊடமைத்துப் பற்றாசிட்டுக் கட்டிய வலிய அரண் சுவர்கள் பற்றியும் தமிழிலக்கியங்கள் கீழ்வருமாறு சுவைபட எடுத்துரைக்கின்றன.

1. **" கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சி**
   **செம்புறழ் புரிசைச் செம்மல் மூதூர் "** *(புறம். 37:10-11)*
2. **" செம்பு புனைந்தியற்றிய சேணெடும் புரிசை**
   **உவரா வீகைத் துவரை "** *(புறம். 201:9-10)*
3. **" செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர் "** *(கம்ப:7431)*
4. **" செம்புறழ் புரிசைப் பாழி "** *(அகம். 375:13)*
5. **" செம்பியன்றன்ன செய்வுறு நெடுஞ்சுவர் "** *(நெடு:112)*
6. **" செம்பியன்றன்ன செஞ்சுவர் "** *(மதுரை:485)*

இம்முறையில் வன்மைமிக்க இம் மதிலரண்களில் பல்வேறு தாக்குதல் பொறிகள் பொருத்தப் பெற்றிருந்த அருமையினை

**" வந்தெறி பொறிகள் வகைமாண் புடைய கடிமதில் "** *(28:1,23-24)*

என மணிமேகலை சுட்டுகிறது.

"வரைபோலிஞ்சி" என்று பதிற்றுப்பத்துப் பதிகம் பாடுகிறது. மிளை எனும் காட்டரண், கிடங்கு எனும் (அகழி) நீரரண், இஞ்சி எனும் மதிலரண், காவல், காவற்பொறிகள் எனும் இயங்கு அரண்களைப் பெற்றதாகத் தமிழகத்தின் பண்டைய நகரங்கள் தோற்றங்கொண்டிருந்தன.

இந்நகர்களில் அமைந்திருந்த வீதிகள், மன்றுகள், வணிக மையங்கள், மாளிகைகள், அரண்மனைகள், காவலரிருப்புகள், பல்வேறு தொழிற்பிரிவினரின் குடியிருப்புகள் இவைபற்றிச் சிலப்பதிகாரமும், மதுரைக்காஞ்சியும், பட்டினப்பாலையும் மணிமேகலையும் தெளிவுற விளக்குகின்றன.

சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களிலும் முறையே புகார், மதுரை, வஞ்சி நகரமைப்பு பற்றிய விளக்கங்களைக் காணமுடிகிறது. இந்நகர அமைப்புகளை நுணுகி நோக்கும்போது பண்டைத் தமிழரின் நகரியத் திட்டமிடல், திணை அமைவிற்கேற்ப அமைந்த திறம் தெளிவாகின்றது. முதல், கரு, உரிப்பொருள்களே நகரிய அமைவுத் திட்டத்திற்கும் அமைவிற்கும் மூலங்களாகியுள்ளன. புகார் நகர் அமைப்பு விளக்கம் ஒரு நெய்தல் திணை நகரம் எவ்வாறமையவேண்டும் என்பதனையும், மதுரை நகர அமைப்பு விளக்கம்

ஒரு முல்லைத்திணை நகரம் எவ்வாறமையவேண்டும் என்பதனையும், வஞ்சி நகர் அமைப்பு விளக்கம் ஒரு குறிஞ்சித்திணை நகரம் எவ்வாறமையவேண்டும் என்பதனையும் தெளிவாகச் சுட்டுகின்றன.

**" பூவிரி படப்பைப் புகார் "** *(சிலம்பு 6:32)* எனப் போற்றப் பெறும் புகார் நகரம்,

**" நீரினின்று நிலத்தேற்றவும்**
**நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்**
**அளந்தறியாப் பலபண்டம்**
**வரம்பறியாமை வந்தீண்டி**
**அருங்கடிப் பெருங்காப்பின்**
**வலியுடை வில்லணங்கினோன்**
**புலிபொறித்துப் புறம் போக்கி "** *(பட்டின: 129-135)*

என்ற இலக்கியத் தொடர்களால் அரச நகரம் என்பதும், கடல்படு வணிகமே அதன் பெருவாழ்வியலின் அடிப்படை என்பதும் பெறப்படுகின்றன. **" இருபெருவேந்தர் முனையிடம் போல "** *(சிலம்பு 5:56)* மருவூர்ப் பாக்கம், பட்டினப்பாக்கம் என்றிரு நகர்ப்பிரிவுகள் புகாரில் இருந்தமையும் அவற்றிடையே,

**" இருபாற் பகுதியின் இடைநில மாகிய**
**கடை கால்யாத்த மிடைமரச் சோலை "** *(சிலம்பு 5:57-58)*

இருந்தமையும் நாளங்காடி, அல்லங்காடிகளும் இருந்தமையினையும் அறிய நேர்கிறது.

**" சிறுகுறுங் கைவினைப் பிறவினை யாளரொடு**
**மறுவின்றி விளங்கு மருவூர்ப் பாக்கமும் "** *(சிலம்பு 5:40)*

என்ற தொடர் முதலிய விளக்கங்களும் மக்களது தொழில், பொருளாதார நிலைக்கு ஏற்ப நகரமைப்பில் இடங்காணப்பட்ட சூழலை விளக்குகின்றன.

அரசர், அரசவை அலுவலர், படைத்தலைவர், பெரும் செல்வர், வணிகர் செறிந்து வாழ்ந்த பகுதி அகன்ற வீதிகளையும் ஓங்கிய மாட மாளிகைகளையும் கொண்டு திகழ்ந்துள்ளது. தொழிலாளர், படை ஏவலர் போன்றோர் செறிந்து வாழ்ந்த பகுதி நெருக்கமுற அமைந்து உள்ளது. இவை இரண்டிற்குமிடையே வணிக மையங்கள் பொதுவாக அமைந்திருந்துள்ளன. வேறுபட்டிருப்பினும் இவை இரண்டும் கோட்டைக்குள்ளே மதிலரணுக்குள்ளே இடங்கண்டுள்ளன.

பிற நாட்டு வணிகர் முதலானோர் பல்கோடிப் பயன் விளைவிப் பவராயினும் நகரின் புறத்தே தனித்தனிப் புறநகர் கண்டே இருந்துள்ளமையினை,

**" பயனற வறியா யவனர் இருக்கையும் "** *(சிலம்பு 5:10)*

என்ற தொடர் இனிது புலப்படுத்துகின்றது. இம்முறை தமிழகத்தின் பண்டைய நகரமைப்பு யாவற்றிலும் காணத்தக்கதாயுள்ளமை இன்றைய சூழலில் மிகவும் சிந்திக்கத் தக்கதாயுளது.

எவ்வெத் தொழிலாளர் எவ்வெப் பகுதிகளில் இடம்படுத்தப் பட்டுள்ளனர் என்ற இருப்பிட அமைவுகளை நுணுகிநோக்குமிடத்து ஆண்டமைந்துள்ள அறிவியல் நோக்கு, பண்டைத் தமிழரின் நகரியத் திட்டமிடலில் அமைந்துள்ள திறம் நன்கறியத்தக்கதாபுளது. இவ்வாறே மதுரையும் வஞ்சியும் அமைந்துள்ள திறத்தைச் சிலம்பு நன்கு புலப்படுத்துகிறது.

சிலம்பு புகலும் “ ஐவகை மன்றத்து அமைதிகள் ” ஒரு பெரு நகரத்திற்குத் தவிர்க்க இயலா உறுப்புகளாகும். இலஞ்சி மன்றமும், வெள்ளிடை மன்றமும், நெடுங்கல் மன்றமும், பூத சதுக்கமும் நகர்வாழ் மக்களுக்கு அரசு அமைத்துக் கொடுக்கும் இன்றைய பொதுக் குளியலறைகள், சேம அறைகள், காவலிருப்புகள் போன்ற அமைதியுடையனவாகும். ஒரு நகரின் பெருமை அங்கு வரும் புதியவரின் மனநிறைவு மற்றும் பாதுகாப்பியலில் தான் உருப்பெறுகிறது என்ற சிந்தனையைப் பண்டைத் தமிழக மக்கள் கொண்டிருந்தமை இச்சிலம்புக் குறிப்பால் புலனாகிறது.

இவ்வாறே பண்டைத் தமிழக நகரம், கிராமம், குடியிருப்புகள் பற்றிய ஆயிரக்கணக்கான குறிப்புகளைக் கால வளர்ச்சிக்கேற்பத் தமிழிலக்கியங்கள் சுட்டுகின்றன.

இவ்வடிப்படையில் தமிழகத்தில் கிடைக்கக் கூடிய சில்ப சாத்திரங்கள் (“சில்ப” என்ற சமஸ்கிருத சொல் “ஆழ்ந்த தொழில் நுட்பம்” என்ற பொருள் தருவதாகும்) நகரமைப்புகளைப் பத்து வகையில் அடக்கிக் கேடம், சதுர்முகம், நந்தியா வர்தம், கர்வடம், கார்முகம், தண்டகம், சர்வதோ பத்ரம், சுவஸ்திகம், பிரஸ்தரம், பத்மகம் என அறிமுகப்படுத்துகிறது. அவற்றின் நிலவியற்கேற்ற வடிவமைப்புகளை இணைப்பில் கண்டு சிறப்பு உணரலாம்.

# திராவிடரும் கட்டிட நகரியத் திட்டமிடலும்

இந்தியாவின் இயற்கை அமைப்பு விந்தையான சிறப்பு மிக்கது. வடக்கே இமயமும், தெற்கே முப்புறக் கடல்நீர்ப் பரப்பும், ஆரவள்ளி, சக்யாத்ரி, விந்திய சாத்பூரா, மேற்கு கிழக்குத் தொடர்ச்சி மலைத் தொடர்களும் இங்கு வாழ்ந்த பழங்குடி மக்களுக்கு இயற்கை அளித்த பாதுகாப்பு அரண்களாகத் திகழ்ந்துள்ளன. தட்பவெப்பச் சூழலும் அதுபோன்றே. எனவே "பாதுகாப்பு" என்பது பற்றிய சிந்தனையின்றி இம்மக்களது கட்டுமானங்களும் குடியேற்றங்களும் அமைந்துள்ளன. எனவேதான் எங்கிருந்தோ வந்து ஊடுருவிய நாகரிகமற்ற வந்தேறிகளால் இவர்களை எளிதில் வென்றழிக்க முடிந்தது.

சிந்துவெளி நாகரிகம் இத்தகைய ஊடுருவல்களால் கி.மு. *2000* அளவில் அழிக்கப்பெற்றது. மிக உயர்ந்த நாகரிகம், நகரியப் படைப்புகளுடன் வாழ்ந்த சிந்து சமவெளி மக்கள் காவலைப் பெருக்காமல் இருந்தமையால்தான் இந்த ஊடுருவல்காரரால் முற்றிலுமாக அழிக்கப் பெற்றனர். இவ்வூடுருவல்காரர் மத்திய ஆசியாவின் புல்வெளிகளில் மாடுமேய்த்துக் கொண்டு திரிந்த நாடோடிகளாவர்; இவர்களை ஆரியர் என அறிஞர் சுட்டுவர். இவ்வெற்றியாளர்க்கும் தோல்வியுற்ற நாகரிகத்தார்க்கும் இடையே இருந்த வேறுபாடுகள்தான் உடனடியாக இந்தியாவில் வர்ணாசிரம தர்மத்திற்கு வழிகண்டிருக்கிறது. இவ்வடிப்படையில் அவ் ஆரியர் அடுத்த *2000* ஆண்டுகளில் தம் கருத்துப்படி சமூக வாழ்வியல் அடிப்படை நெறி முறைகளைப் படைத்தும் வாழ்ந்தும் வந்துள்ளனர்.

இயற்கையை வழிபட்டுவந்த ஆரியர், முன்னோரைக் கல்லெடுத்து வணங்கி வந்த இம் மண்ணின் மைந்தருடன் கலந்து வாழ்ந்தமையினால் எழுந்த சிக்கலான மரபுகளும் சமய நெறிகளும் சுருங்க விளக்க இயலாதவை. இதனால் பழைய நாகரிகமழிந்து முற்றிலும் புதிய பண்பாடு இம்மண்ணில் தோன்றி வளர்ந்துள்ளது. இவ்வாரியர் வருகையினால் விளைந்த விளைவு " ஒரிடத்தில் அகன்ற தெருக்கள், பாதைகள் என அமைத்துக் கொண்டு உயர்ந்த நாகரிகத்துடன் வாழ்ந்த பண்பாடு அழிந்து போனதுதான்". இத்தகைய நகர அமைப்புகளும் 'இருந்து' வாழும் வாழ்க்கை முறையும் வந்தேறிய

ஆரியருக்கு ஏற்றதாக அமையாததால் அந்நகரங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ளன. இவ்வழிவு ஆரியத் தாக்கத்தால்தான் அமைந்தது என்பதனை அங்கு அலங்கோலமாகவும், சிதைந்தும் கிடந்த, அகழாய்வில் கண்டுபிடிக்கப் பெற்ற மனித எலும்புக் கூடுகளால் அறிய முடிகிறது. இவ் ஆரியர் தமது தெய்வமான இந்திரனை "நகரங்களை அழிப்பவன்" எனத் தமது மரபுள் அழைப்பதும், இம்மரபை அடியொற்றிய பிற்கால வளர்ச்சியெனச் சிவனைத் "திரிபுராந்தகன்" "முப்புரமெரித்தான்" என உருவகப் படுத்தியவமைப்பும் உணரற்பாலது. நகர அமைப்புகளைச் செம்மையுறக் கொண்டு வாழ்ந்த பழுப்புநிறத் தோலுடைய மண்ணின் மைந்தர்கள் வெளிர்நிறத் தோலுடைய ஆரியரால் அரக்கராகவும் சூத்திரராகவும் குறிக்கப்பட்ட செயலை நன்கு உணரமுடிகிறது. இதுவரை தொல்காப்பியவழி நாமறிந்துள்ள தொழில் அடிப்படையிலான வருணங்கள் பிற்கால உருவாக்கம் என்பதும் இதன் முந்துவடிவம் தோலின் நிறம்பற்றியதே என்பதும் நுண்ணிதின் ஆய்ந்து பெறலாகும். ஓரினத்தை ஓரினம் அடிமைப்படுத்துங்கால் அதனால் பல்வகைக் கலப்பினங்கள் எழுவது அன்றும் இன்றும் என்றும் மாறாத ஒரு நிகழ்வே.

இத்தகைய கலப்பு நிலையில் நாடோடி வாழ்க்கை வாழ்ந்த ஆரியர் சில நூற்றாண்டுகளில் ஓரிடத்தில் இருந்து விவசாயம் செய்து வாழும் இயல்பைப் பெற்றாலும், அதிலும் சில பிரிவினர் குடில்களமைத்துக் கூடி வாழும் சூழலை விரும்பித் தனித்தனிக் "குடும்பு"களைக் கண்டுள்ளனர். இத்தகைய சூழலே "ரிக்" வேதத்துள் காணப்படுகிறது. காலவளர்ச்சியில் குடும்புகளை வளர்த்துப் பெரும் கிராமங்களை அவர்கள் கண்டார்களே ஒழிய, தம் முன்னோரால் அளிக்கப்பெற்ற சிறந்த நகர அமைப்புகளைப் போல அவர்களால் படைக்க இயலாமலே போயிற்றெனலாம்.

அந்தப் பழுப்புத் தோலினம் கண்ட, ஆரியர்க்கு முற்பட்ட நகரக் கட்டட அமைப்புத் திட்டம் வியத்தகு நுட்பம் வாய்ந்தது. மொகஞ்சதாரோ, அரப்பா நகரங்கள் நீள் செவ்வக வடிவில் திட்டமிடப்பட்டு ஒரே சமயத்தில் உருவாக்கப் பெற்றுள்ளமை உணரத்தக்கது. இக்காலம் கி.மு. 7ஆம் நூற்றாண்டளவினது என்பது கருதத்தக்கது. இந்நகர அழிபாடுகளின் புலப்பாடுகள் யாவும் மேற்படி அளவில் அகழ்வில் புலனானவையே தவிர, தண்ணீர் ஊற்றம் கருதி அடிப்படைவரை காணப்படாத ஒன்று என்பதனை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். சர் ஜான் மார்சல் கருத்துக்களைச் சேகரித்து, சில அறிஞர் இப்புலப்பாடுகளை மெசபடோமிய நகர அழிபாடுகளுடன் ஒப்பிடுவது தவறானது. இந்நகர அமைப்புகள் கிராமமாக ஆற்றங்கரை ஓரமாகத் தோன்றி மெல்ல மெல்ல வளர்ந்து பெருகிய ஒன்றன்று. ஒரே நேரத்தில் நல்ல தேர்ந்த நகரியத் திட்டத்தின்படி அமைவுபெற்ற ஒன்று என்பதனை நுண்ணிதின் உணரலாம்.

நேருற அமைந்த அகன்ற சாலைகள் இணையாக நகரி அமைப்பினைச் செவ்வகவடிவிற்குள்ளடக்குவதும், அச்சாலைகளின்றும் நேர்க் கோணங்களில் பிரிந்து சாலைக்கிடைப்பட்ட கட்டடப் பரப்பினை ஊடறுத்துச் செல்லும் தெருக்களும் இணையுறவே காணப்படுகின்றன. இத்தெருக்களின்றும்

கிளைத்துச் செல்லும் நெருக்கமான சந்துகளும், வீட்டிற்கான பாதைகளும் மிகத்தேர்ந்த திட்டப்பணியாகத்தான் அமைய நேருமேயொழிய வேறாகாது.

செங்கற் கட்டுமானமாகத் திகழும் இவ்வீடுகளை நுண்ணிதின் ஆய்ந்தால் புலப்படும் உண்மைகள் பல.

இவ்வீடுகளில் தெருப்புறச் சுவர்களில் சாளரங்கள் இன்மைச் சூழல் சிந்திக்கத்தக்கது. ஒவ்வொரு வீடும் தம்பரப்பின் நடுவே முற்றம் ஒன்றனைக் கொண்டு இருப்பதும் அம்முற்றத்தை ஒட்டி உள்ளே படுக்கை அறையும் கூடமும் அமைக்கப்பட்டுள்ள நுட்பமும் நம் சிந்தனையை எங்கோ கொண்டு செல்வது உண்மை. ஒப்பனைக் கூறுகள் அதிகமின்றி வாழ்வியல் வசதிக் கூறுகளையே இக்கட்டிடங்கள் தம்மகத்தில் கொண்டுள்ளமை., இங்கு வாழ்ந்த மக்களின் அடிப்படை உணர்வின் உணரத்தக்க சான்றாயுள்ளது.

ஒரே மட்டம் உடையவையாக அவ்வளவு கட்டுமானங்களும் காணப்படுகின்றன. செல்வர்களின் வீடுகள் அகல நீளத்தில் பெரியனவாக உள்ளனவே ஒழிய உயரத்தில் அல்ல. குளியல் மற்றும் கழிப்பறை வசதிகள் இவ்வீடுகளில் உள்ளன. சாய்க்கடை ஒழுங்கு கருதத்தக்கது. இருப்பினும் நகரத்தின் நடுநடுவே நன்கு உருவாக்கம் பெற்ற பொதுக்குளங்களும், தானிய சேமிப்புக் கலங்களும், மன்றுகளும் பூங்காப் பரப்புகளும் இங்கு வாழ்ந்த மக்களின் பிணைப்புப் பெற்ற வாழ்க்கையைச் சுட்டுவதோடு அவர்தம் பொதுச் சுகாதார உணர்வையும் புலப்படுத்துகின்றன.

சுமேரிய நாகரிகத்துடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்கும் அறிஞர் இங்குக் காணப்பெறும் நீர்ப்புழக்க அமைப்புகளைக் கருதுவதில்லை. இத்தகு அமைப்புகள் ரோம் நாகரிகத்துள் மட்டுமே இருப்பது கருதத் தக்கதாகும். இங்கு வாழ்ந்த மக்கள் வெண்கல உலோகத்தால் பாத்திரங்களையும், உருவங்களையும் செய்து புழங்கிய சான்றுகளும் பயன்படுத்திய குறியீடுகளும், கருவிகளும் இவர்தம் பழுநிய நாகரிகத்தைப் பறைசாற்றுவனவாம். இந்நகர அமைப்புள் பெரும் அரண்மனைப் பகுதி இதுவரை காணப்படாமை இம்மக்கள் வாழ்ந்த சுதந்திர வாழ்வியலைப் புலப்படுத்துகிறது. இவர்கள் வாழ்ந்த மொகஞ்சதாரோ, அரப்பாவிற்கு அருகிலே பலுசிஸ்தானம். அங்கு வழங்கும் பிராகுவி மொழி, திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததல்ல *?* இப்போது ஒரு சேர நோக்குவோம்.

மொகஞ்சதாரோ, அரப்பாவில் வாழ்ந்த மக்கள் கருப்புத்தோலர். நகரமைப்புக் கலையில் தேர்ந்தவர். நனிநாகரிக வாழ்வு வாழ்ந்தவர். உலோகப் பயன்பாடுடையவர்.

முன்னோர் ஆவி வழிபாடுடையவர். ஆரியரால் அரக்கர் அல்லது சூத்திரர் என அழைக்கப்பட்டவர். இந்த அடிப்படைத் தகவல்களுக்கு மேலாகச் சங்க இலக்கியங்களையும் நம் தமிழகப் பண்டைய நகர அமைப்புச் சுவடுகளையும் சிந்திப்போம். மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிக கால அளவில் இவை இல்லை. ஆனாலும், மிகவும் பிந்தியது எனக் கூறுதற்கில்லை.

இடைவெளி, சங்க இலக்கியத்துள் மிகப்பழைய இலக்கியக் குறிப்பிற்கு இடைப்பட்டதாகச் சுமார் *500* ஆண்டுகள் அமையலாம். இக்காலம் வரலாற்றுத் தொல்லியலாய்வுகளில் ஒரு பெரும் இடைவெளி அல்ல. சங்க இலக்கியம் குறித்திடும் புகார், மதுரை, வஞ்சி, நாகை, முசிறி, தொண்டி போன்ற நகர அமைப்புகளும் வளமும் அமைவும் இலக்கிய மிகைக்கூறுகள் அல்ல. உள்ளதன் நுணுக்கங்களே. தாலமியின் எரித்ரையன் கடற்குறிப்புகளும் பெரிப்ளூஸ் குறிப்புகளும் இருப்பதால் இச்சங்க இலக்கியக் குறிப்புகள் ஓரளவு மதிக்கப் பெறுகின்றன. இன்றேல் இவையெல்லாம் புனை கதைகள் என உடன் கூறுவோர் அதிகம். பட்டின அருவூர்ப்பாக்கங்களும், இடைமரக்காக்களும், யவனர்பாடிகளும் சதுக்கங்களும், மன்றுகளும், மாளிகை அரண்களும் நிறைந்த 'புகார்' தமிழரின் நாகரிக அடையாளமன்றோ ? தொல்பொருள் ஆய்வுகள் சம்பாபதிக் கோயிலையும் சதுக்கப் பூதத்தையும், பௌத்தப் பள்ளியையும் படகுத் துறையினையும் எச்சங்களாக அடையாளங்காட்ட, அண்மையில் உற்ற நீரகழாய்வு கடலுள் இருக்கும் கட்டடப் புகாரைச் சுட்டிக்காட்டுகிறது.

காவேரிச் சமவெளி பல்வேறு வெள்ள அழிபாடுகளைக் கொண்டழிந்து இருந்தாலும் இன்னும் மிக நெருக்கமான பழங்குடியிருப்புகளைப் பெற்றிருப்பது ஒன்று போதாதா, இதன் பழமைக்கும் வளமைக்கும். இச்சிறப்பின் அடிப்படை என வெள்ளையர் தெற்கிலும் மேற்கொண்ட ஆதிச்ச நல்லூர் அகழ்வாய்வுகள் தமிழினப் பழமையினையும் நாகரிகச் சிறப்பினையும் புலப்படுத்துவது கண்கூடு. ஆதிச்ச நல்லூரில் கிடைத்த தொல்பொருள்களை மொகஞ்சதாரோ, அரப்பா நகரப் பொருட்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து ஆய்வு செய்யும் முயற்சிகூட இன்னும் எழாமை வருந்தத்தக்கது. கேடம் முதலாக பத்மகம் ஈறாக நமது சாத்திரங்கள் கூறும் நகர வடிவமைவுகள் யாவும் தமிழகத்திலன்றி வேறெங்கு காணவியலும்?

இந்திய நாகரிகத்தை மொகஞ்சதாரோ அரப்பாவிலிருந்து வடமேற்கில் இருந்து தொடங்கித் தெற்கே குமரி வரை எழுதியது. வெள்ளையர் யாருடைய கருத்துக்களின் கோர்வையில் இம்முயற்சியை செய்தளித்தனர் ? நாமறியோம். 'அவர்கள்' அன்றைய அறிவு ஜீவிகள். இன்று நாம் அறிவு ஜீவிகளாக வாழ்ந்துகொண்டிருந்தும் பழைய பஞ்சாங்கம்தானா ?

சுற்றுக்கட்டு வீடுகளில் முற்றத்தை ஒட்டிய படுக்கை அறையில் படுத்தும் வாழ்ந்தும் வரும் தமிழருள் இந்திய நாகரிக வரலாற்றின் ஏடுகளை மாற்றி எழுதும் துணிவு வாராமைக்கு என்ன காரணம் ? "காசுபணங் காணில் உனை விற்பார்" என்ற பொருள் வரும்படியான வாழ்வியலா ?

இந்திய நாகரிக வரலாற்றைத் தெற்கே லெமூரியாவை ஆய்வது கடுமையாதலின், இருக்கும் தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகத்திலிருந்து தொடங்கி "கில்பர்ட் சிலேட்டர்" கண்ட திராவிட இனப்பெயர்ச்சி முறையில் இந்தியாவின் வடக்கு நோக்கி நகர்த்தி மொகஞ்சதாரோ அரப்பா - சிந்து

சமவெளி நாகரிகம் வரை சென்று கண்டால் புரியாதன எல்லாம் புரியும்; இடைவெளிகள் இருக்காது.

மொகஞ்சதாரோ அரப்பா நாகரிகம் சுவடுகள் இவைகுறித்த மழுப்பல்ஆய்வுகளில் முகத்திரை கிழிந்து தொங்க, உண்மைகள் உலகிற்குப் புலனாகும். அவை சென்று தேய்ந்து இற்ற கதை. அப்போது.

**“ கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு**
**முன்தோன்றி மூத்த குடி”** எனத் தமிழினப் புகழ்பாடும் அரிய உண்மையைக் கூட நையாண்டி பேசமாட்டார்கள். இது மெய்ம்மை.

# கோயிற்கட்டிடக்கலை

தமிழகம் தெய்வநலம் நிறைந்த திருநாடாகும். தமிழகத்தில் கருங்கற்களால் அமைக்கப்பட்டுள்ள கோயில்களே பல்லாயிரக்கணக்கில் உள்ளன. அவற்றுள், சைவ வைணவக் கோயில்களுள், பல, காலத்தாலும் சமயத்தாலும் உயர் சிறப்புடையனவாகும். தேவாரத்திருப்பதிகங்களால் குறிப்பிடப்பட்ட சிவன் கோயில்களும் பழமைக்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

**இறையகத் தோற்றம் - ஒரு விளக்கம்**

பண்டைய காலத்தில் மரத்தாலும், செங்கற்களாலும் இடமும் தளமும் கோலியவகையில் தோற்றங்கொண்டிருந்த தமிழகக் கோயில்களுள், அக்காலச் சோழர், பாண்டியர் ஆகிய மன்னர்களும் அவர்கள் வழித்தோன்றல்களும், பின்னர்த் தொடர்ந்த சரித்திரகாலப் பல்லவ பாண்டிய சோழர்களும் கோயில்களைப் பெரிதாக்கியும், புதுப்பித்தும், புதிய கோயில்களை எழுப்பியும் உள்ளனர்.

பழைய கோயில்களுள் சில திருச்சுற்று, மதிள், எழுநிலைமாடம் (கோபுரம்) விமானம் முதலான அங்கங்களுடன், சிறப்புப் பெயர்களைக் கொண்டனவாகவும் இருந்துள்ளதனைத் தேவாரப் பாடல்களாலும், ஆழ்வார்களின் பாசுரங்களாலும் அறியமுடிகிறது.

பல்லவர் காலம் முதலாகக் கட்டப்பெற்ற கோயில்கள், கட்டிடக் கலை வளர்ச்சியாகவும், சிற்பக்கலை வளர்ச்சியாகவும், ஒப்பனைத்திறம் பெற்ற பாகுபாட்டுடன் அமைக்கப்பட்டுள்ளன. இதனால், அக்கால அரசும் மக்களும் சமய நெறியில் இறையுணர்வினையும் கலையார்வத்தினையும் கோயில்களில் நிலை நாட்டியுள்ளமை புலனாகின்றது. தமிழகத்தில் வளர்ச்சி பெற்றுள்ள கருங்கற் கட்டிடக்கலைக்கமைந்த கற்றளிகள் கலைக்கருவூலமாகவும், வரலாற்றுச் சான்றாகவும் அமைந்துள்ளன.

இத்தகைய கட்டிடக்கலை வளர்ச்சிப்பணியில் பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும் ஆர்வங்காட்டியுள்ளனர். வடபுலத்தே மேலைச்சாளுக்கியர், இராட்டிரகூடர், ஒப்சளர் ஆகிய மன்னர்களும் அவர்களின் மரபினரும் கோயிற் கட்டிடக்கலை வளர்ச்சியில் மிகுந்த பற்றுடையவர்களாக இருந்துள்ளதனை, அவர்களால் எழுப்பப்பட்ட கற்றளிகள் எடுத்துக்காட்டுகின்றன.

**புதுமைத்தோற்றம்**

கோயில்களின் பழமையான தோற்றம் எவ்வாறு இருந்திருக்கக் கூடுமென்று, தமிழ் இலக்கியங்கள் தரும் செய்திகளைக் கொண்டும், பழமையான கோயில் தடங்களைக் கொண்டும் ஆய்ந்து அறிகின்ற போது, கிராமங்களின் தலைப்பிடம், பக்கச்சார்பிடங்கள், குன்றின் அடிவாரம், குன்றிலமைந்த குகைகள், குன்றின் மேல்தளம், ஆற்றங்கரை, சோலை, காட்டகம், மேட்டிடம் ஆகிய பகுதிகளில் புதுமையும் கவர்ச்சியும் தனித் தன்மையும் பொருந்திய இயற்கைச் சூழல்களின் நடுவிடத்திலேயும், தோற்றப்பொலிவும், பயனும்பெற்ற மரங்களின் அடியிடத்திலேயும், தரைமட்டத்திலும், மேடையமைப்பிலும் கருதிய தெய்வவுருவத்தினையோ அன்றி அறிகுறியாகும் பொருளினையோ நிலைப்படுத்தி அக்கால மக்கள் வழிபட்டுள்ளமை புலனாகின்றது.

அறிகுறிச்சின்னம் ‘கந்து’ என்ற பெயரால் சுட்டப்பெற்றுள்ளது. அதை நிறுத்திய மேடை மன்று, பொதியில் என்ற பெயர்களைப் பெற்றுள்ளது. பொதியில் பக்கச்சுவரால் கோலிய மேடையாகவும் வளர்ந்துள்ளது. அன்று அமைக்கப்பட்ட தெய்வவழிபாட்டுக்குரிய பொதியில், கால வளர்ச்சியில் இறையகமாக உருப்பெற்றுள்ளது. அதுவே கருவறை, மூலத்தானம் என்றெல்லாம் குறிப்பிடப்பெறுவதாகும். கோயிலின் முதலிடமும் தலைமைப் பகுதியும் இதுவேயாகும்.

இப்பகுதி அக்காலத்தில் தரைமட்டத்திற்கு மேல் மண்மேடையாகவும், செங்கற்களால் கட்டப்பட்ட தளமாகவும், மரங்களை அறுத்துச் செப்பனிட்டு அளவுடன் அமைக்கப்பட்ட கோப்புத்தளமாகவும் இருந்திருக்கலாகும். இத்தகைய கட்டுமானங்கள் தட்ப வெப்பத்தாலும் காலச்சூழலாலும் எளிதில் மாற்றமும் அழிவும் பெறக்கூடியவை. எனவே, வலிமையும் கட்டுக்கோப்பும் திண்மையும் பொருந்திய திண்ணையாக, சுண்ணக்கலவையுடன் செங்கற்களால் கட்டப்பெற்ற உருமாற்றம் நிகழ்ந்துள்ளன. இவ்வுருமாற்ற வளர்ச்சியில், கட்டிடக்கலைஞர் பல முறைகளைப் பட்டறிவால் தேர்ந்து கற்பித்துக் கட்டும் திறமையில் கை தேர்ந்தவர்களாக விளங்கியுள்ளனர்.

**கட்டிட அமைவியல்**

இவ்வளவில் கருவறை அளவிலான பகுதியே கோயில்களின் தோற்றக்கால வடிவமைப்பாகுமென்பது குறிக்கப்பெற்றதாம். செங்கற் கட்டிடக் கோயில்கள் கலைஞரின் அறிவியல் வளர்ச்சிக்கேற்பப் பல அங்கங்களுடன் தேவைகளுக்கேற்பப் பெருக்கம் பெற்றன. இந்நிலையினின்றும் கருங்கற் கட்டிட வளர்ச்சியாகக் கோயில்கள் தோன்றியபோதும், உருமாற்றம் பெற்றபோதும், கலைஞர் கட்டிடக் கலைக்கென அனுபவமாகவும் மரபுநிலையாகவும் பொருத்தமாகவும் பல பெயர்களையும் திட்டங்களையும் நிலைப்படுத்தியுள்ளனர்.

கோயில் எழுப்பத் தேர்ந்த நிலப்பரப்பிடத்தில் அளவிட்டுச் சதுரித்து அகழ்ந்த பகுதியில் நிலத்தின் தன்மைக்கேற்ப அடிப்படையிட்டு, அதன்மேல்

திண்மையும் சமன்பாடும் பொருந்திய அடுக்குக்கோப்பாக எழுப்பப்பெறும் கருங்கற் கட்டிடப்பகுதி உபானம் எனப்பட்டது. உபானத்தினை அடிப்படையின் ஒழுங்கான முகப்பென்றும் கூறலாகும்.

இதன்மேல் கட்டப்பெறும் கருவறையின் அங்கங்களை முறையே, அடிப்படை, மேல் கட்டுமானம், விமானம் என்ற முப்பெரும் பிரிவுகளாகக் கண்டுள்ளனர். கோயிலின் வடிவுப்பெருக்க அளவிற்கேற்பவும், தாங்குதளங்களாகப் பீடம், உபபீடம் ஆகியவை தேவைகட்கேற்ப அதிட்டானத்தின் கீழ்த்தாங்கல்களாக அமைக்கப்பெற்றுள்ளன. கருவறைச் சுவர்ப்பகுதிகளும், தூண், கோஷ்டம், பஞ்சரம் ஆகிய அங்கங்களை ஒப்பனைக் கோலங்களாகவே பெற்றுள்ளன. விமானமும் பலதளங்களைக் கொண்டதாக உருவாக்கம் பெற்றுள்ளது. பொதுவாக அதிட்டானத்தின் கீழ்க்காலாக அமைக்கப் பெறும் பகுதிகளில், பீடம், உபபீடம், உபாங்கபீடம் ஆகிய கட்டுமானங்கள், கட்டிட அங்கப்பெருக்கப் படைப்பிற்கேற்ப அமைக்கப்பெறுதலால், ஒருவகையில் இப்பகுதிகளை அதிட்டானத்தின் பங்காகவே காணமுடிகிறது.

**அதிட்டானம்**

அதிட்டானத்தின் முதல் கணிப்பு, கருவறைச் சுவர்க்காலின் கீழும் உபானத்தின் மேலும் அமைந்த, கட்டுமானப் பகுதியாகும். அதிட்டானத்தின் மேல்தளம் கருவறை அமைப்புக்குரியதாகும். கருவறையில் அமைக்கப்பெறும் திருமேனியின் இருக்கையிடமாகவே அதிட்டானத்தின் அமைப்புப் பொருந்தியிருப்பதால் இதனை இருக்கைத் திட்டமைப்பு என்றும் சுட்டலாகும். இது உபானத்தின் மேல் நிறுவப் பெறுவதாலும் மேல் மிகுதித் தொடர்ச்சிக் சுட்டிடமாக அமைவதாலும், கருவறைக்கட்டுமான அடிப்படை நிறுவகம் என்றும் சுட்டலாகும். இப்பொருளமைதி “அதிட்டானம்” என்ற பெயர்ப் பொருளுக்கு ஒத்ததாகுமென்று கருதப்பெறுகின்றது. மற்றும் அதிட்டானம் என்பதற்கு “இருக்கைத் திட்ட அமைப்பு ” என்றும் கூறலாகும். இதனை, பழமையிற் சிறந்த சித்தன்னவாசல் மலைப்பாழியில் உள்ள கல்லிருக்கையில் பொறிக்கப்பட்டுள்ள பிராமிக்கல்வெட்டு இவ்வதிட்டானம் என்று குறிப்பிடுவதைக் கொண்டு அறியமுடிகின்றது. மற்றும் கட்டிடப் பாகுபாட்டால், அதிட்டானத்தில் கீழ்நிலைப்பகுதிகள் பல பெயர்களால் சுட்டப் பெறினும், மேல் எழுப்பப்பெறும் கருவறை விமானம் ஆகியவற்றின் கூடிய பளுவைத் தாங்கும் கட்டுக்கோப்புத் தாங்கலாகவே இவை அனைத்தும் அமைகின்றன. உபானத்தின் மேலீடாகக் கட்டப்பெறும் உயரடுக்கு களாகவும் அளவிட்ட உட்புரைத்தாங்கு தளங்களாகவும் இவை அமைதலின் பொது நோக்கில் பீடம் உபபீடம் என்பதினின்றும் அதிட்டானத்தின் பங்கு வேறல்ல என்பதும் பெறப்படுகிறது. *(பார்க்க படம் 1)* நுணுகிக்காணின் அவை அதிட்டான அடிப்படை அங்கங்களே யாகுமென்பதும் இப்பெயர்கள் கருங்கற் கோயிற்கட்டிடக் கலைஞர் தொழில் நோக்கிற்குக் கற்பித்துக்கொண்ட பாகுபாட்டறிகுறி என்பதும் பெறப்படும்.

அதிட்டானக் கட்டுமானம் வலிமையான கட்டுக்கோப்புடன் அமைக்கப் பெறுவதாகும். சிற்பியர் தமது கைத்திறனை இக்கட்டமைப்பில் களிப்புடன் கண்டுள்ளனர். அழகுக் கலையாகும் சிற்பக்கலைத்திறனைச் சிற்பியர் இக்கட்டமைப்பில் ஒழுங்கான அடுக்கமைக்காட்சியாக அமைக்கும் கட்டுமானத்தில் வெளிநீட்சியாகவும் புடைப்பாகவும், உள்புரைக்காலாகவும், கண்டமாகவும், முகப்பாகவும், கோப்புநிலை அழகிற்கு ஆக்கமாகவும், வடிவங்களையும் கொடிக்கருக்கு வேலைப்பாடுகளையும் காட்டுதலோடு, அவற்றில் பத்மம், பிரபை, வரிநிலை, இதழ்நிலை, தரும்பு, அரும்பு, வரும்பு ஆகிய ஒப்பனைக்காட்சிகளால் அழகுபடுத்தி வைப்பது கலைத்திறனாகும். *(பார்க்க படம்)* இவ்வொப்பனையின் கீழ்ப்பாகத்தில், ஒரே சீரான வடிவில் முப்புறமும் சூழ்ந்து நெடிதோடிய பாங்கில் கோடி இடங்களில் கட்டுப் பிணிப்புத் தோற்றமாக அமைப்பதுவே 'பந்தம்' எனப்படும்.

இப்பந்தக் கட்டுமானம், மகரம், யாளம், நாகம் என்ற முத்திற வடிவங்களிலொன்றினைக் கொண்டதாக அமையும். இப்பந்தம், திரணை வரியாகவும் அமைதலுண்டு. இவ்வாறமையும் அடித்தானத்தை உபானம், ஜகதி, குமுதம், பத்மம், அந்தரி, வாஜனம், பட்டிகை என்ற உறுப்புகளை உடையதாகக் குறிப்பதே பெரும்பான்மை. இவ்வுறுப்புகளைத் தேவைக்கு ஏற்ப மாற்றிமாற்றி அமைப்பதால் பல்வேறுவகை அதிட்டானங்களை அமைக்கலாகும். அவ்வகையில்,

1. பாதபந்தஅதிட்டானம் *(பாதக்கட்டு)* *(பார்க்க படம்)*
2. பத்ம பந்த அதிட்டானம் *(தாமரைக்கட்டு)* *(பார்க்க படம்)*

என்பன தமிழகக் கோயில்களில் குறிப்பிடத்தக்கவையாகும். சில நேரங்களில் மாடக்கோயில்கள் எனப்பெறும் அமைப்பில் விமான எழுச்சியை அதிகப்படுத்தும் வண்ணம் " உபபீடம்" அமைக்கப்பெறுவது இயல்பு.

அதிட்டானத்தின் மேலே 'சுவர்' அல்லது 'கால்' எனப்படுகின்ற உறுப்பு அமையும். இச்சுவரை அழகுபடுத்தும் ஒப்பனைக் கூறுகளாக அரைத்தூண்களும், தெய்வமாடங்களும், பஞ்சர, கும்பப்பஞ்சரங்களும், மகர தோரணங்களும் இப்பகுதியில் இடம் பெறுகின்றன. கருவறைப் பகுதியில் எவ்வெத்திசையில் எவ்வெத் தெய்வமாடங்களில் எவ்வெத் தெய்வச் சிற்பங்களை இடம்படுத்த வேண்டும் என்ற முறையில் ஒப்பனை முறையும் காணப்படுகின்றன. *(பார்க்க படம் எண்:6)*

இவ்வமைப்பின் மீது பிரஸ்தரம் எனப்படும் கூரை அமையும். இவ்வமைப்பு பூதவவரி, கொடுங்கை, யாளவரி என்ற பகுதிகளையும் அதன்மேல் தளங்களையும் பெறுவதுண்டு. சுவர்ப்பகுதிக்குமேலே அமைவுபெறும் தளம் ஒன்று முதல் *13* வரை இடம் பெறுவதுண்டு, ஒன்றன் மேலொன்றாகும் அத்தளவடுக்கு 'பிரமிடு' வடிவத்தில் அடி அகன்றும் மேல் சற்றுக் குறுகியும் அமைக்கப்பெறும் அமைவு பெறும். தள எண்ணிக்கைக்குத்தக அக்கோயில்

வழங்கப்பெறும். ஒரு தளம் உள்ள விமானமுடைய கோயில் 'சிறுகோயில்' எனப்பெறும். இதுபோன்றே இருதளவிமானம், முத்தளவிமானம் என வழங்கப்பெறும்.

இம்முறையிலேயே வாயில்கள் மீது எழுப்பப்பெறும் உயர்ந்த கட்டுமானங்களாகிய கோபுர அமைப்பு 'தட்டு' அல்லது 'நிலை' என்ற அடுக்குகளையும் அம்முறையில் கட்டைக்கோபுரம், இருநிலைக்கோபுரம், மூன்று நிலைக்கோபுரம் எனவும் வழங்கப்பெறும்.

விமானத் தளங்களில் நாற்புற முகப்புகளிலும் சாலை, கூடம், மாடம், நாசி, பஞ்சரம் என்ற கட்டிட ஒப்பனைக் கூறுகள் தேவையான இடைவெளியில் அமைவதுண்டு. இக்கூரையின்மீது " கீரீவம்" எனப் பெறும் " கழுத்து" அமையும். இதன் வடிவம் தலையின் அமைப்பிற் கேற்ப மாறுபட்ட வடிவத்தில் சதுரமாகவோ, உருளையாகவோ அமையும். நான்கு திசைகளிலும் திருவாசிமாடங்களும் அவ்வவ் திக்குக்குரிய பெருந்தெய்வ வடிவங்களோடு இடம்பெறும். இம்முறையில் பெரும்பாலும் கிழக்கே இந்திரனும், தெற்கே சிவனும், மேற்கே மாலும், வடக்கே பிரமாவும் இடம்பெறுவது இயற்கை. இடைப்பட்ட கோணப் பகுதிகளில் நந்தி, பூதம், திக்குக்காவல் தெய்வங்கள் போன்ற வடிவங்கள் இடம் பெறுவதுமுண்டு.

இவ்வமைப்பின்மீது சிகரம் எனப்பெறும் தலை காணப்பெறும். இதன் அடிப்படை வடிவம் தமிழகத்தைப் பொறுத்தவரை அரை அல்லது முக்காற்கோள வடிவமேயாகும். இதன் புறத்தோற்றம் சதுரம், நீள் சதுரம் ஆகும். அது எண்பட்டை, வட்டம், அரைவட்டம், நீள்வட்டம் (தூங்கானை) ஆகிய அமைப்பில் இலங்கும். சிகரத்தின்மேல் கலசம் எனும் குடம் நிறுவப்பெறும். இது பெரும்பாலும் " செம்பொன்" உலோகத்தால் வடிவமைக்கப் பெறுதல் வழக்கு. குடம்போன்றும் மேலே குவிந்த் தாமரைபோன்றும் அமைந்திடுவது இவ்வடிவாக்கத் திறமாகும். இது கல், சுதை, மரம் ஆகிய பொருட்களாலும் அமைக்கப்பெறுதல் உண்டு.

கருவறை அமைப்புக்களைக் கருத்தில் கொண்டு கோயில்கள் பெயரிடப் பெறுதலுண்டு. அம்முறையில் கருவறையும் அதன்மேல் தளங்களில் மேலும் சில கருவறைகளும் இடம்படுத்தப்பெற்ற அமைப்பு " அட்டாங்க விமானம் " எனப்பெறும். மாமல்லபுரத்து தர்மராச ரதம், காஞ்சி வைகுந்தநாதர் கோயில், உத்திரமேரூர் சுந்தரவரதர் கோயில், திருக்கோட்டியூர் பெருமாள் கோயில், மதுரை கூடல் அழகர் கோயில் முதலியன இவ்வகையில் அமைந்துள்ளன.

அடித்தளத்தில் கருவறையின்றி மேல்தளத்தில் கருவறை இடம்பெற்றால் அது மாடக்கோயில் எனப்பெறும். பின்புறம் அரைக்கோளமாகவும் முன் தோன்றும் அக்கோள வெட்டின் இருபுற நீள் சவுக்கமாயும் அமைவது " தூங்கானை மாடம்" எனப்பெறும். இவைபோன்ற விமான அமைப்பால் பெயரிடப்பெற்ற எண்வகைக் கோயில் அமைப்பினை நாவுக்கரசு நாயனார்,

**பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்**
**பெருங்கோயில் எழுபதினோடெட்டு மற்றும்**
**கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில்**
**கருப்பறியல் பொருண்பனைய கொகுடிக்கோயில்**
**இருக்கோதிமறையவர்கள் வழிபட்டேத்தும்**
**இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்**
**திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து**
**தாழ்ந்திரைஞ்சத் தீவினைகள் தீருமன்றே** 6-71-5 *(தேவாரம்)*

எனக் குறிப்பிடுக்கின்றார். இத்தாண்டகப் பாவழி, கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தமிழகத்தில் விளங்கிய பெருங்கோயில், கரக்கோயில், ஞாழற் கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என்றவகைத் திருக்கோயில்கள் சிவன்கோயில்களாக அமைந்திருந்தமை கருதத்தக்கது.

இவ்விமான வேறுபாடுகள் இறையகத்தின் ஒளி, ஒலி அமைவியல் திட்டத்திற்கு ஏற்ப வடிவாக்கம் பெற்றுள்ளமை கருதத்தக்கது.

இவ்வகை விமான வேறுபாடுகளை வடமொழியில் எழுதப்பெற்றுள்ள திராவிடக் கலைநூல்களும் ஆகமங்களும் காட்டுகின்றன.

ஸ்ரீவிஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிசாலம், ஸ்ரீஸ்கந்தகாந்தம், ஸ்ரீகரம், ஸ்ரீஹத்தி பிருட்டம், ஸ்ரீகேசரம் என சில்ப சாத்திரங்களும் காமிகாகமும் வழங்குகின்றன.

இவ்வாறு மரத்தடி நிழல் முதல் மாபெரும் கோயில்கள் வரை கால வளர்ச்சியில் தமிழகம் கண்டுள்ள கோயிற்கட்டிடக்கலை பற்றித் தமிழிலக்கியச் சான்றுகள் சங்க இலக்கியம் முதல் பிற்கால இலக்கியம் வரை ஆயிரக்கணக்கில் உள்ளன. அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

கோயில் என்ற சொல்லாட்சி, கோ இல் அதாவது அரசனது இல்லம் என்ற பொருளில் வழங்கியுள்ளது. இப்பொருளிற்கேற்ப அரசன் வாழ்ந்த பெருமாளிகை அமைப்பிலே ஆண்டவனுக்கும் உறையுள் கண்டமை போதரும். அரசனைத் தெய்வமாகவும் தெய்வத்தின் மரபுளோனாயும் காண்பது பழம் பெருங்குடியியல்பு. இதுகருதியே, " திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே " என ஆழ்வார் புகன்றனர். இக்கருத்தின் காட்சிச் சான்றென மாவலிபுரத்து தர்மராஜரதத்தின் முதல் தளத்துக் காணப்படும் மாட அமைப்புகளில் அரச மக்கள் தோற்றங்காணப்பெறுவது கருதத்தக்கதாகும்.

இவ்வாறாகக் கோயில் எனும் சொல் அரசனுக்குரியதாகப் புறநானூற்றில் *(378)* சோழன் கோயில் என ஆளப்பெற்றுள்ளது.

**" கோயிலுள் கண்டார் நகாமை "** *(கலி. 94)*

**" சிலம்பின் சிலம்புங் கோயில் "** *(நெடு. 100)*

**" அண்ணல் கோயில் "** *(பரிதி 8-4)*

**" திருக்கிளர் கோயில் ஒருசிறை "** *(பொருந.- 90)*

**" உறந்தை போக்கிக் கோயிலொடு "** *(பட்டினப் 285-286)*

**" வெண்கோயில் மாசு ஊட்டும் "** *(பட்டினப். 50)*

என்ற இலக்கியத் தொடர்களும் இப்பொருள் சுட்டுவது நோக்கற்குரியது.

வளையப்பெற்ற நிலம், இடம், என்ற பொருளிலும் அடைப்புச் சுவர்கட்குட்பட்டது என்ற பொருளிலும் 'வளைவுடைய கட்டுமானம்' என்ற பொருளிலும் 'கோட்டம்' என்ற சொல்லாட்சி தமிழிலக்கியங்களில் தெய்வ இருப்பிடங்களைச் சுட்டுவனவாக உள்ளன.

**"அணங்குடை முருகன் கோட்டத்து"** *(புறம். 299)*

என்ற தொடர் குறிஞ்சி நிலத் தெய்வமான வேலனின் கோட்டத்தைச் சுட்டுகிறது.

கண்ணகிக்கோட்டத்தைச் சிலம்பு சுட்டும்.

கோயில்களை "அம்பலம்" என்றதொரு சொல்லும் சுட்டியுள்ளது. பொது இல் *(பொதியில்)* என்ற பொருளுடைய இச் சொல்.

**" உண்மை அம்பலமானது "**
**" அம்பலத்துள் ஆடுதல் "**

போன்ற வழக்கு வன்மையால் "வெளிப்பட்டது", "மறைவற்றது", "யாவருங்காணக்கூடிய அமைப்புடையது" என்ற பொருளில் உள்ளது. "கோட்டம்பலம்" *(கோட்டம்பலத்துத் துஞ்சிய கோதை)* என்ற சங்கச் சொல் உயர்ந்த மன்றினைச் சுட்டுகிறது. இதனைச் சிலம்பு "அரமியம்" என்று குறிக்கிறது.

சிதம்பரம் எனப்படும் சித்தர் அம்பலத்தின் பொன்னம்பலம் மேடை அமைப்புடன் தொடக்கக்காலத்தில் நாற்புறமும் திறந்த "வெள்ளிடை மன்றாக" இருந்தமையாலேயே "அம்பலம்" என வழங்கப் பெற்றுள்ளது. அம்பலம் தில்லையில் உள்ளதால் தில்லைச் சிற்றம்பலம், "திருச்சிற்றம்பலம்" எனத் தேவாரக்குறிப்புகள் இனங்காட்டுகின்றன. இவ்வமைப்பு சேரநாட்டுக் கோயிலமைப்பே. இன்றும் கேரள நாட்டில் அம்பலங்களே வழிபாட்டில் உள்ளமை அறியத்தக்கது.

திருமந்திரத்தில் இவ்வாட்சி மிக அதிகமாகக் காணப்பெறுவதும் *(652, 886, 887, 1726, 2653, 2722, 2744)* ஆய்வாளர் நுணுகி ஆயத்தக்க செய்தியாகும்.

இத்திருமந்திரத்துள் ஆலயங்காண்பதும் அருமையுடையதாகும்.

**"ஐந்தின் பெருமையே ஆலயமாவதும்"** **(960)**
**"ஊனுடம்பு ஆலயம்"** **(1804)**

என்ற தொடர்களில் சுட்டப்பெறும், ஆலயம் ஐம்பொறிகளோடு தொடர்புடையதாக விளக்கம் பெறுவதும் 'கோயில்' வேறுபட்டு உளம் சார்ந்ததாக உரைக்கப் பெறுவதும் தத்துவ அடிப்படையில் மட்டுமல்ல, கட்டுமானத் தொழில் நுட்ப அடிப்படையிலும் ஆழநோக்கவேண்டிய கருத்தேயாகும்.

கோயில் குறியீடு 'தளி' என்ற சொல்லாலும் குறிபெறுகிறது.

"ஆரூர்ப் பரவையுண் மண்தளி" (தேவாரம்) என்பது திருவாரூரில் மண்ணால் ஆக்கம் பெற்றிருந்த இறையகமொன்றைச் சுட்டுகிறது. இதுவே சுந்தரமூர்த்தி நாயனார் பெரிதும் போற்றிய பரவையாரின் இல்லமென மொழிவாருமுளர். முதல் இராசராசன் கல்வெட்டுக்கள் உணர்த்தும் தளி கற்கோயில்களே.

மண்தளிகள் பின்னர்ச் 'சுடுமண்' ஓங்கிய நெடுநகராயினமையும் தமிழிலக்கியக் குறிப்புகளுள் காணப்பெறுகின்றன. 'சுடுமண்' ஆகிய செங்கற்களை மண் அல்லது சுண்ணக்கலவை கொண்டு அடுக்கி, எழுந்த சுவர்களைக் கொண்டு ஆக்கம் பெற்றுள்ள இச்செங்கற்களை இட்டிகை என்பது பண்டை வழங்கு, இதனை

**" இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென**
**மணிப்புறாத் துறந்த மரஞ்சேர் மாடக்**
**கெழுதணி கடவுள் போகலின் "** (அகம். 167)

**" கல்லும் இட்டிகையும் பெய்து குற்றுச்**
**செய்யப்பெற்ற நிலம் "** **(தொல். சொல். சேனாவரையம். 10)**

என்ற தொடர்கள் விளக்கும்.

செங்கற்களைக் கொண்டு விளைந்த அமைப்பில் தாமரைப் பொகுடு போலும் உயர்கோள அமைப்புடைய கட்டிடங்கள் பல அமைந்திருந்தமையினைப் பெரும்பாணாற்றுப்படையின்,

**" தாமரைப் பொகுட்டில் காண்வரத்தோன்றி**
**சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின் "** (404-405)

என்ற தொடர் குறிக்கின்றது.

இவ்வணம் தாமரைப் பொகுடுபோன்ற அமைப்பில் அறநிலையம் ஒன்றினை அருட்பெருஞ்செல்வர், திருமிகு, பொள்ளாச்சிப் புரவலர் அவர்கள் கருத்துவழி சுவாமிகள் ஒருவர் அமெரிக்காவில் அண்மையில் சிமிண்ட் கான்கீரீட் அமைப்பில் கண்டுள்ளமை ஒப்பிடத்தக்கதாகும்.

மணிமேகலையும் செங்கற் சுவர்களைக் கொண்டிருந்த தெய்வ இருப்பிடங்களைச் "சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்" எனச் சுட்டுகிறது.

இவ்வகைக் கோயில்களின் பல்வேறு உறுப்புகளைப் பற்றிப் பக்தி இலக்கியங்கள் பேசுவதைக் காணலாம்.

திருமந்திரம் கோயில் சிவலிங்கம், நந்தி, பலிபீடம் ஆகியவற்றைச் சுட்டுகிறது. நாவுக்கரசரின்

**" ஆக்கையாற்பயனென் அரன் கோயில் வலம் வந்து**
**பூக்கையா லட்டிப் போற்றி என்னாத . . . . "** (4-9-8)

என்ற பாடல் தொடர் திருச்சுற்று, கோபுரம் இவற்றைச் சுட்டுவதும் கண்கூடு.

இவ்வாறாகத் தமிழிலக்கியங்கள் தமிழகக் கோயிற் கட்டிடக் கலையியல் பற்றிய அரிய குறிப்புக்களைத் தந்து நம்மனோர்க்கு ஆய்பொருள் களத்தினைத் தந்துள்ளன. ஆய்வதும், அறிவதும், உரைப்பதும், படைப்பதும், பயன்பெறுவதும் நம்கடன். மேலும் "எளிமை பெருமை" என்பதே பண்டைய தொழில் நுட்பம் என்பதனை இக்குறிப்புகளை ஒருசேர நோக்குவார் காணமுடியும்.

# கோயிற்கட்டிடக் கலை வளர்ச்சி

**ஏழு விமானங்கள்**

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அப்பரடிகள் பாடிய திருத்தாண்டகத்துள் பலவகைக் கோயில்களின் கட்டிட அமைப்புப் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. அப்பாடல்,

**“ பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்**
**பெருங்கோயில் எழுபதினோடெட்டு மற்றும்**
**கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்,**
**கருப்பறிய பொருப்பனைய கொகுடிக் கோயில்**
**இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்**
**இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்**
**திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து**
**தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே**
**(திருத்தாண்டகம் ”** 6-71-5)

என்பதாகும்.

செங்கற்களினாலோ, கருங்கற்களினாலோ கட்டப்பட்டு இருந்த இத்தகைய கோயில்கட்கு அமைந்த தமிழ்ப் பெயர்கள், விமானத்தின் அமைப்பினையும் வடிவினையும் கொண்டே குறிக்கப்பட்டுள்ளதென்பதை அறிய முடிகிறது. அப்பரடிகள் காலத்தில் தமிழகத்தில் இருந்த கோயில்களின் பெயர்கள் இவ்வாறாக விமானத்தின் அமைப்பினைக் கொண்டு சுட்டப்பட்டிருக்கும்போது வடமொழியிலமைந்த சிற்ப நூல்களும், காமிகாகமம் போன்ற ஆகமநூல்களும், கோயில்களின் விமான வகைகளை ஸ்ரீவிஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிலாசம், ஸ்கந்தகாந்தம், ஸ்ரீகரம், ஹஸ்தி பிருஷ்டம், கேசரம் என்னும் ஏழு வகையாகக் குறித்துள்ளன (வேங்கடசாமி சீனி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், பக்.25).

தென்னிந்தியாவில் சமய வளர்ச்சியின் முயற்சியாக வந்த சமண முனிவர்கள் திகம்பரர்களாதலின் பெரும்பான்மையும் மலைகளில் இயற்கையாக அமைந்திருந்த குகைகளிலும், பாழிகளிலும் வாழ்ந்திருந்து சமயத்தை வளர்த்துள்ளனர். அவர்களது கொள்கைகளை மேற்கொண்ட சமண மக்கள்,

சிறிய வடிவில் கோயில்களை ஆக்கிக் கொண்டுள்ளனர். சமணத் துறவிகள், பாழிகளின் சுவராகும் பாறைமுகப்பிலோ அன்றி உட்புறமோ, புடைப்புச் சிற்பமாகத் தாம் வழிபடும் தீர்த்தங்கரர்கட்குச் சிலையமைத்து வழிபட்டுள்ளனர். இதனைக் கழுகுமலை, மதுரை சமணர் குன்றுகள், அழகர்மலை, திருப்பரங்குன்றம், கொங்கர் புளியங்குளம், கீழைவளவு, முத்துப்பட்டி, நாகமலை, சித்தர்மலை முதலிய குன்றுகளிலுள்ள குகைப் பாறைகளில் காணப்படும் புடைப்புச் சிற்பத் திருமேனிகளைக் கொண்டு அறிய முடிகிறது.

அதே சமயத்தில் பௌத்த சமயம் தென்னிந்தியாவில் பரவி நின்ற இடங்களில் அசோக மன்னன் காலத்தில் இருந்து தூபிகள், விகாரைகள் ஆகிய இரண்டு வகையிலேயே பெரும்பாலும் பௌத்தச் சின்னங்கள் கருங்கற்களாலும், செங்கற்களாலும் அமைக்கப்பட்டுள்ளன. பௌத்தத் தூபிகள் கல்தூண்களாகும். அதில் பௌத்த சமய அறங்களும் பொறிக்கப் பட்டிருந்திருக்கலாம். விகாரைகளில் புத்தரின் பாத பீடிகையோ அன்றி, புத்தரின் சாம்பல், எலும்பு ஆகியவற்றின் சிறுபகுதி வைக்கப்பெற்ற உலோகப் பேழையோ வைத்து வணங்கப்பட்டுள்ளது.

சிற்ப நூல்களும், ஆகமங்களும் வடமொழியில் குறிக்கும் கோயில்கட்குரிய பெயர்களாகக் குறித்திடும் விஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிசாலம், ஸ்கந்தகாந்தம், ஸ்ரீகரம், ஹஸ்திபிருஷ்டம், கேசரம் எனும் ஏழு வகைப் பெயர்களின் அமைப்பினையும், சொல்லில் பொருந்திய அல்லது சொல்லால் அறியப்பெறும் பொருளினையும் நுணுகி ஆய்கின்ற போது அவை கட்டிடக் கலையமைப்பில் விமான வடிவங்களைக் குறிப்பனவல்ல என்பது புலனாகிறது.

'விஜயம்' என்ற சொல் தமிழில் 'வருகை' என்னும் பொருள் தருவதாகும். "சிறந்த ஒருவர் வருகைபுரிந்த இடம்" என்ற விரிந்த கருத்தினைக் கொண்டுள்ளது. இத்தகு கருத்தமைந்த சொற்களாகவே மேலே காட்டிய எழு பெயர்களும் காணப்படுகின்றன. நுண்ணிதின் ஆராயின் இச்சொற்களை, பௌத்தர்கள் தாமமைத்த விகாரைகளின் தனிச் சிறப்பினைச் சுட்டும் பெயராகவே குறித்துள்ளமை வெளிப்படுகிறது. சிற்ப ஆகம சாத்திரங்கள் வடமொழியில் குறிப்பிடும் இவ்வேழு பெயர்களும் பௌத்தர்கள் முன்னர் விகாரைகட்கு இட்டு வழங்கிய பெயர்களாகவே இருத்தற்குரியன என்று குறிப்பிட முடிகின்றது.

'இந்திர விகாரம் ஏழு' எனச் சிலப்பதிகாரம் சுட்டுகிறது *(10:11-14)*. இக்குறிப்பினால், புகாரின் இவ்வாறு ஏழு வகையான சிறப்புடன் அடுத்தடுத்து விளங்கிய பௌத்தக் கோயில்களையே *(விகாரைகள்)* கண்ணகியும்-கோவலனும் கடந்து சென்றுள்ளனர் எனத் தோன்றுகின்றது.

'முதற்கண் விஜயம்' - என்ற பெயரின் பொருளால் சிறந்த பௌத்த தேரர் வருகை தந்த இடம் என்ற பொருள் பிறக்கின்றது.

'ஸ்ரீ போகம்' - என்னும் போது தேரரிலும் மேம்பட்ட பௌத்த சங்கத் தலைமையாளர் தங்கியிருந்து அறம் வழங்கிய இடம் என்ற பொருள் பிறக்கிறது.

'ஸ்ரீ விசாலம்' - என்பது பௌத்த சங்கம் கூடுமிடத்ததாகப் பரந்த இடத்தினைக் கொண்ட பௌத்தக் கோயில் என்னும் பொருளுடன் காணப்படுகின்றது.

'ஸ்கந்த காந்தம்' - என்பது அழகு பொருந்திய பளிங்குக் கல்லால் ஆக்கப்பட்ட விகாரை என்பதாம். *(ஸ்கந்தம் - அழகு, காந்தம் - பளிங்கு)* மணிமேகலைக் காப்பியத்துள் காணப்படும் 'பளிக்கறை' *(4:87)* இதுவேயாதல் வேண்டும்.

'ஸ்ரீகரம்' - என்பது மங்கலம் நிறைந்தது என்னும் பொருளமைதி பெறுவதாகும். 'ஹஸ்தி பிருஷ்டம்' - புத்தரின் எலும்பு, சாம்பல் இவற்றின் ஒரு பகுதி வைக்கப்பட்ட பொற்கலசம். இத்தெய்வீகக் கலசம் வைக்கப்பட்டு விளங்கும் விகாரை.

'கேசரம்' - மேலே உயர்ந்து முகடிட்டு முக்குடையுடன் விளங்கும் விகாரை என்ற பொருள் தருகின்றது.

இவ்வடமொழிப் பெயர்கள் ஏழும் விகாரையின் தனிச் சிறப்பினால் பெறப்பட்டதாகத் தெரிகின்றதே தவிர, கட்டிட அமைப்பு அல்லது விமானத் தோற்றத்திற்குரிய பெயர்களாகக் குறிக்கப்பட்டவையாகத் தெரிதற்கில்லை.

அப்பரடிகள் திருத்தாண்டகத்துள் கூறியுள்ள பெருங்கோயில் முதலான ஏழு கோயிற்பெயர்களோ கோயில் கட்டிட விமான அமைப்பினைக் கொண்டு குறித்துக் கூறிடும் பெயர்களாக உள்ளன.

கோயில்களின் வகையினைக் குறிக்கும் இத்தமிழ்ப் பெயர்கட்குரிய பொருளமைதியோடு வடமொழியிலமைந்த சிற்ப நூல்கள் கூறும் 'விஜயம்' முதலான பெயர்கள் பொருள் ஒப்புமை உடையனவாக இல்லாததுடன் பெயர்க் காரணத்தாலும் வேறுபட்டுள்ளன.

எனவே, தமிழகத்தில் தற்போது கிடைக்கக்கூடிய சிற்ப ஆகம நூல்கள் குறிக்கும் கோயிற்கட்டிடக் கலைப்பெயர்கள், பௌத்த விகாரைகளாகப் பல்வகைத் திறத்துடன் இலங்கிய பண்டைத் தமிழக விகாரங்களின் பெயர்களை அப்படியே எடுத்துக்கொண்டு, அதற்குரிய பொருளினையும், கட்டிட விளக்கத்தினையும் வேறுபட்ட நிலையில் கூறப்பட்டவையே என்பது புலனாகிறது.

ஆதலின் தமிழகத்தில் அப்பரடிகள் காலத்திற்கு முன்பே சிறப்புற்றுப் பல்வகை விமானங்களுடன் எட்டு வகைக் கோயில்களும், ஏழு வகை பௌத்த விகாரங்களும் இருந்துள்ளமை புலப்படுகிறது. அவை சிறப்பாக வழியினைப் பின்பற்றி அமைக்கப்பட்டவை அல்ல என்பதும் இதனாற் போதரும் உண்மையாகும்.

சங்க இலக்கியங்கள் காட்டும் மாடமாளிகைகள், அரண்மனைகள், பளிங்கு மண்டபங்கள், பல்வகைத் தெய்வங்களின் கோட்டங்கள்

முதலியவற்றைத் தமிழகத்துச் சிற்பியரும், மனைநூலறி புலவரும், நுண்வினை, கைவினைக் கம்மியரும் பரம்பரையாக வந்துற்ற தந்நாட்டு அமைப்புடன், அவ்வக் காலத்துத் தமிழகம் போந்த புதிய கலைகளது சிறப்புக் கூறுகளையும் இணைத்தே எழுப்பிச் சிறக்கச் செய்துள்ளனர். மலைகளேதுமற்ற சோழ நாட்டில் இவர்கள் சுண்ணச் சாந்தினைக் கொண்டு செங்கற்களினிடையே ‘பற்றாசு’ இட்டுக் கட்டிடங்களைக் கட்டியுள்ளதுடன் சுண்ணச்சாந்து கொண்டே சிற்ப உருவங்களையும் படைத்துள்ளனர். இதனை ‘வெண்சுதை விளக்கம்’, சுடுமண் ஓங்கிய நெடுநிலைக்கோட்டம் எனும் மணிமேகலைத் தொடர்கள் *(6.59)* குறிப்பிடுகின்றன.

**காந்தாரக் கலையின் வரவும் திரிபும்**

தமிழ்நாட்டின் சிற்பியரும் கட்டிடக்கலையில் வல்ல கொற்றரும் சிறந்த முறையில் கோயிற் கட்டிடக் கலையினைப் படைத்து வளர்த்த காலம் கி.மு. இரண்டு முதலே தோற்றம் கொண்டுள்ளது என்பதனைத் தொல்பொருட் சான்றுகள் உறுதி செய்கின்றன.

வடபுலத்தில் கி.மு.*326*-இல் படையெடுத்து வந்து சிந்துநதிக் கரையில் ஆட்சியும் செய்த கிரேக்கர்கள், தாம் ஆட்சி செய்த காந்தார நாட்டில், தமது தாய்நாட்டில் கி.மு. *3000* முதலாக வளர்ச்சி பெற்றிருந்த சிற்பக்கலை, கட்டிடக்கலை, ஓவியக்கலை ஆகியவற்றை இங்கு வளர்ச்சி பெற்றிருந்த கலைகளுடன் கலந்து ‘காந்தாரக் கலை’ என்ற புதிய கலையினை உருவாக்கியுள்ளனர். இக்கலையினைப் பௌத்தமே ஏற்றுள்ளது.

இக்காந்தாரக் கலையின் தனிச்சிறப்பு மனித வடிவினைக் கொண்டு காட்டப்பெறும் தெய்வீக வடிவமாகும். அதன் உயர்மதிப்பீடு உடல்வளர்ச்சி, அங்க அழகு நிலையும், மெல்லிய உடைகளது தோற்றமும், பூரித்துப் பொருந்திய கவர்ச்சியும் பொருந்தியதாகும்.

குப்த வாகடர்கள் காலத்தில் பெருவளர்ச்சி பெற்ற இக்கலையினை, பௌத்த சிற்பங்களோடு ஓராற்றான் ஒப்புமையுடைய நிலையில் சமணமும் ஏற்றுள்ளது. அப்படி அமைந்த பௌத்தச் சிற்பங்களில் மிகுந்த புகழ் பெறுவன ‘அமராவதி’ என்ற இடத்திலுள்ளவையேயாகும். இதனை ‘அமராவதி சிற்பக்கலை’ என அழைக்கும் மரபு உண்டு.

பௌத்த, சமண, வைதீக நெறிகளின் சார்புவழி, குப்த, நந்த, வாகட, இராட்டிரகூட அரசர்கள் படைத்துள்ள எல்லோரா, எலிபெண்டா, அஜந்தா, காந்தாரம் ஆகிய பௌத்தக் கலைகளின் சிறந்த முறைகளை, ஏற்ற இடங்களில் இணைத்துத் தமிழகக் கலைகளை மேலும் அழகூட்டிப் படைத்துள்ளனர். குடைவரைக் கலைகளாக அமைந்த அஜந்தா, எல்லோராக் கலையின் வளர்ச்சியெனவே, பல்லவர் காலக் கோயிற்கலை அமைந்துள்ளது எனலாகும்.

மகாபலிபுரத்தில் உருவாகி நிற்கும் மலைச்சரிவுகளில் முகப்புப் பாறையினைக் குடைந்து உருவாக்கப்பட்டிருக்கும் குகைக்கோயில்களின்

அமைப்பையும், அவற்றில் உயிர்ப்பும், சிறப்பும் பொருந்தப் புடைப்புச் சிற்பங்களாக உருவாக்கப் பெற்றிருக்கும் வடிவங்களையும் இத்தகைய வளர்ச்சி நிலைக் கலையெனவே மதிப்பிட முடிகின்றது.

தனித்தனியே நின்ற பெரும்பாறைகளில் பல்லவர் காலச் சிற்பியர் உருவாக்கிக் காட்டியுள்ள 'ஏழு ரதங்கள்' எனக் கூறப்படும் ஒற்றைக்கல் கோயில்களின் அமைப்பே தொடர்ந்து நாட்டில் வளர்ச்சி பெற்றுள்ளது. ஏழுவகை இந்திர விமானங்களான 'விஜயம்' முதலாயின இவைதானோ என எண்ணத் தோன்றும் இக்கோயில்களின் அங்கங்களுடன் கூரையாக உருவாக்கிக் காட்டப்பட்டுள்ள விமான வகைகளே தமிழக விமானக் கட்டிடக்கலை வளர்ச்சிக்கு அடிப்படையான கருவூலங்கள் எனக் கருதலாகும்.

இராசசிம்ம பல்லவனால் மகாபலிபுரத்துக் கடற்கரையில் கட்டப்பட்டுள்ள தலசயனப் பெருமாள் கோயிலின் விமானமும், அதன் பெருக்கமாக அவனே காஞ்சியில் எழுப்பியுள்ள கைலாசநாதர், வைகுந்தப் பெருமாள்கோயில்களின் விமானங்களும், அதனை ஒட்டி எழுந்துள்ள திருவதிகைக் கோயில் விமானமும் கருவறையின் மேல் தளத்திலிருந்து வானளாவி உயர்ந்து நிற்கும் விமானங்களுடன் கோயில்களைப் பிற்காலச் சோழர்கள் படைத்திடுதற்குக் கருவூலமாக அமைந்துள்ளன.

விமானங்கள் யாவும் கருவறையின் அடிப்படை, சுவர்ப்பகுதியின் தலைப்பாகம் வரி, துலாம், கொடுங்கை ஆகியவற்றின் மேல்மட்டமாக அமைக்கப்பெறுவதாகும்.

உயர்ந்து செல்லும்போது, அதனமைப்பு, மேலே செல்லச் செல்ல வடிவில் குறுகிப் பல அடுக்குகளாக உயர்ந்து உச்சிப் பரப்பாகி, அதன்மேல் சிகரம் உருவாக்கப்பட்டு அதன் உச்சியில் கும்பம் நிறுத்துவதாக அமையும். விமான உயர்ச்சிக்குரியதாக ஒன்றன்மேல் ஒன்றென அமையும் அடுக்குகளையே சிற்பியர் கையாண்டுள்ளனர்.

இராச சிம்ம பல்லவன், கருங்கற்களைக் கொண்டு முறைப்படி ஒழுங்குபடுத்தி அடுக்கிச் சேர்த்து உயர்ந்த சிற்ப ஒப்பனைகளுடன் உருவாக்கும் கோயிற்கலையினை மாமல்லபுரம் கடற்கரையில் அமைத்துக் காட்டியதற்கு விளக்கமாய் அமைந்த "விமானக்கோயில்" காஞ்சி கைலாசநாதர் கோயில் எனலாகும். இவ்விரண்டு கோயில்களின் விமானங்களும் தருமராஜ ரதத்தின் வடிவ அடிப்படையில் சிறுத்து உயரும் தட்டுக்களைக் கொண்டவையாகும். இதன் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

விமானங்களும் பெரும்பாலும் நான்கு பட்டையாகவே எழுப்பப் பெற்றுள்ளதோடு வரிமானம், கூடதளம், சாலை, கால் என்ற கட்டிடக் கலைக்கமைந்த உறுப்பு நிலைகளால் உயர்த்தப்பட்டு வெளி ஒப்பனையாகத் தெய்வச் சிற்பங்களை எதிரீட்டு அளவை இடங்களில் அமைத்தும் உருவாக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலச் சிற்பங்கள் அனைத்தும் அஜந்தா, எல்லோரா, அமராவதி ஆகிய சிற்ப முறையினையே தழுவியுள்ளன.

இவ்வமைப்பினைத் தனிப்பு, தொகுப்பு, காட்சி என முத்திறப்படுத்தலாம்.

**தனிப்பு:** தனியொரு தெய்வ வடிவத்தினை அல்லது அரசன், அரசி வடிவங்களைக் காட்டுவது. (சிம்ம விஷ்ணு, மகேந்திரவர்மன் ஆகியோரது உருவங்களை அவரவர் தேவியருடன் படைப்பது. இது காந்தாரக்கலையின் தனிச் சிறப்பாகும்.

**தொகுப்பு:** ஒரு நிகழ்ச்சியைச் சித்திரிக்கும் பாங்கில் அதற்குரிய பலதிறப்பட்ட உருவங்களைப் பொருள் பொருந்த ஓரிடத்தில் உருவாக்கிக் காட்டுவது. மகிடாசுரமர்த்தினி, குடைவரை மன்றிலுள்ள கொற்றவையின் சீற்றக்காட்சி போல்வன. அமராவதிக் கலைகளைப் போலச் சிறப்புறும் இக்கலைகளைச் சோழநாட்டில் படைத்து மகிழ்ந்த போது, அவ்வகைக் கலைகளைப் படைத்த கலைஞர் வாழ்ந்த காரணத்தாலோ என்னவோ, தஞ்சை மாவட்டத்தில், குடவாயிலுக்கண்மையில் ஓரூர் ‘அமராவதி’ எனவழைக்கப்பட்டு இன்றும் வழங்கி வருகின்றது.

**காட்சி:** நடுவே திருமேனிகளை உருவாக்கி அதன்பக்கங்களிலும், மேலும், பீடத்திலும் கந்தருவர், குடை, கவரி, பிரபை, மகரவளைவு, கொடிநிலை ஆகியவற்றால் தோற்றப் பொலிவு கவர்ச்சியாக அமைய ஒப்பனை செய்து காட்டுதல்.

**சோழர் கலைப்பாணி**

இவ்வணம் பௌத்தக் கலையின் வளர்ச்சியெனவளர்ந்து தனித்திறம் பெற்ற பல்லவரின் கோயிற்கலையினைப் பின்பற்றிய நிலையில், பிற்காலச் சோழரின் முதல்வன் விஜயாலய சோழன், புதுக்கோட்டை நார்த்தாமலையின் வடக்குப் பகுதியில் ‘மேலைமலை’ என்னும் இடத்தில் மலையின்மேல் உயர் பரப்பிடத்தில் ‘விசயாலய சோழீச்சரம்’ என்றொரு கற்றளியினை எடுப்பித்துள்ளான்.

கி.பி. *846*-இல் முத்தரையரிடமிருந்து தஞ்சை, வல்லக் கோட்டையினைக் கைப்பற்றி ஆட்சியைத் தொடங்கிய பரகேசரி விஜயாலய சோழனது மகன்வழி நேராட்சி கி.பி. *1070*-இல் பரகேசரி அதிராசேந்திரனுக்கு வாரிசில்லாத சூழலில் *225* ஆண்டுகளில் தொடர்ந்த அரசின் நிறைவாக அமைந்துள்ளது. தொடர்ந்து சோழப் பரம்பரையினர் ஆட்சியும் கி.பி.*1279*-இல் நிறைவு பெற்றிடக் கூடுதல் *433* ஆண்டுகள் தமிழகத்தில் பிற்காலச் சோழராட்சி பேரரசாக அரசோச்சியுள்ளது.

ஆட்சிப் பரப்பினை விரிவுபடுத்தும் தொடர்ந்த படை எடுப்புகளும், பிறநாட்டு மன்னர்களிடம் கொண்ட மணவினைத் தொடர்புகளும், கி.பி. *11*-ஆம் நூற்றாண்டில் சோழராட்சிப் பரப்பினைத் தமிழகத்திற்கு வடக்கே விந்தியமலை வரையிலும், அதற்கப்பால் ஆங்காங்கும், கடல்கடந்த கடாரம், இலங்கை, லட்சத்தீவுகள், நக்கவாரம், சாவா, சுமத்திரா, மலேசியா போன்ற நாடுகளிலும் விரிவுபடுத்திப் பேரரசாகத் திகழ்ந்திட வழிவகுத்துள்ளன.

பெருவீரம் படைத்த சோழ மன்னர்களது அடுத்தடுத்த ஆட்சியும், தொடர்ந்த பிறநாட்டு வெற்றிகள் அளித்த பெருஞ்செல்வமும், பண்டு தொட்டு வளர்ந்து, சோழப் பேரரசின் கடலாதிக்கத்தால் ஆதிக்கம் பெற்ற அவரது கடல்வணிகமும், இயல்பான கலையுள்ளமும் இணைந்தே ஒப்புயர்வற்ற சோழர் கலையினைத் தோற்றியுள்ளது.

படையெடுப்பு நடத்தி, வெற்றிபெற்று, வெற்றிகொண்ட நாடுகளின்றும் பெருஞ்செல்வங்களைப் பறித்து வந்ததுடன் ஆங்காங்கிருந்த கலைச்சின்னங்களைக் கண்டு போற்றியும், எடுத்துவரத் தக்கதாயின் அவற்றை அப்படியே தம் தாய் நாட்டிற்குக் கொண்டு வரும் கலையார்வமும் மிக்கோராய்ச் சோழர் விளங்கியுள்ளனர்.

தஞ்சைக் கலைக்கூடத்தில் விஜயராஜேந்திர சோழன் தமது வெற்றியின் அறிகுறியாக "கல்யாணி"யிலிருந்து கொண்டுவந்த துவாரபாலகர் சிலையில் கீழே இத்தகைய செய்தியடங்கிய கல்வெட்டுள்ளது.

வெற்றிகண்ட நாடுகளில் சிறந்திருந்த கலை நுட்பங்களைத் தந்நாட்டகத்துத் தாம் எடுப்பிக்கும் கலைப்படைப்பில் வேண்டியாங்குக் கலந்து, அரிய, அழகிய, சிறந்த கலைப் படைப்புகளைத் தோற்றியுள்ளனர். அப்படைப்புகளைச் சோழநாட்டு மரபுவழிக் கலைஞரைக் கொண்டும், வெற்றிகண்ட நாடுகளினின்றும் கைதியராகவோ அன்றி விருந்தினராகவோ அழைத்து வந்த கலைஞர்களைக் கொண்டும் சோழப் பேரரசர்கள் படைத்துள்ளனர்.

சோழநாட்டிற்கென்று உள்ள இயல்பான கட்டிடக்கலைகளூடே சங்க காலம் முதல் தாக்கம் செய்து வளர்ச்சி பெற்றிருந்த பௌத்தக் கட்டிடக் கலையும், சிற்பக்கலையும் அதிலும் குறிப்பாக மகாயானப் பௌத்தக்கலைச் சிறப்பினையுமே சோழநாட்டுக் கலைஞர் தேர்ந்து தெளிந்திருத்தல் வேண்டும்.

கடல் வணிகமும், கப்பற்படை வெற்றியும் முதற்பராந்தக சோழன் முதலாத் தோன்றி, முதல் இராசராசன், முதல் இராசேந்திரன் ஆட்சிக் காலத்தில் மிக அதிகமாகவே, கடல்வழி வந்துற்ற யவன, கிரேக்க, கடார, சாவக, இலங்கை, சீனக் கலைப்பாடுகளும், பண்பாடுகளும் சோழநாட்டில் பல்கியுள்ளன.

**கோயிற்கலை வளர்ச்சி**

பிற்காலச் சோழ அரசர்கள் அனைவரும் வைதீக நெறியினராகவே இருந்துள்ளனர். அதிலும் குறிப்பாகச் சைவ நெறியினைப் பின்பிற்றியுள்ளனர். தம் நெறிக்கமைந்த பண்டைக் கோயில்கள் மரத்தாலும், செங்கற்களாலும் செய்யப்பட்டிருந்தனவாதலின், காலத்தால் சிதைந்து நின்ற அவற்றைக் கருங்கற் றிருப்பணி செய்து கற்றளிகளாகப் புதுப்பித்துள்ளனர்.

அசோகர் காலமுதல் எழுப்பப்பட்டுக் கல்கட்டிட விகாரைகளாகவும், பௌத்தப்பள்ளியின் வட்ட வடிவக் கட்டிட அமைப்பாகவும் நிலைபெற்ற கோயிற்கலைச் சிறப்பைக் கண்டே கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பல்லவ

மன்னர்கள் அம்முறையைப் பின்பற்றியதோடு, இராட்டிரகூட மன்னர்கள் மலைகளைக் குடைந்து அமைத்த அஜந்தா, எல்லோரா குடைவரைக் கோயில் முறைகளையும் பின்பற்றியதாகப் பல குடைவரைக் கோயில்களை ஆக்கியுள்ளனர்.

மகாபலிபுரக் கல் ரதங்களும், கடற்கரைக் கோயிலும், காஞ்சி கைலாசநாதர் கற்றளியும், கருங்கற்றளினாலேயே விமானங்களையும் பெற்று ஒப்புயர்வற்ற கற்றளித் திறத்தின் தோற்றுவாயென அமைந்துள்ளன. பல்லவர்களின் முயற்சியால் தொண்டைநாட்டில் கருங்கற்களால் கட்டப்பட்ட கோயில்கள் பல தோன்றியுள்ளன. இப்பல்லவர்களைத் தொடர்ந்து செல்வாக்குப் பெற்ற சோழரும் இக்கட்டிடக்கலை வள்ர்ச்சியைத் தொடர்ந்ததோடு தம் கலையார்வத்தால் தாம்நேரிற்கண்டு, அல்லது கேட்டு விழைந்த கலை வடிவங்களையும் இவற்றுடன் ஏற்புவழி இணைத்து, அக்கலை பல்லாற்றனும் விரிவுபெற்றுச் சிறப்புடன் திகழ ஆவன செய்தள்ளனர்.

சோழன் விஜயாலயன் தான் பாண்டியரையும், முத்தரையரையும் வெற்றி கொண்டதற்கு அறிகுறியாக மலைகளேதுமற்ற தமதுதலைநகராகத் திகழ்ந்த தஞ்சையில் நிசும்பசூதனி எனும் கொற்றவைக்குக் கற்றளியொன்றை எழுப்பியுள்ளான். அவனது ஆட்சியில் சோழநாட்டின் தென் எல்லைப்புறமாக விளங்கிய நாரத்தாமலைத் தொடரின் மேலைப் பகுதியில், மலைத் தளத்தில் விசயாலய சோழீச்சுரம் என்னும் அழகிய கோயில் விமானத்துடன் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. அதே காலத்தில் அப்பகுதியில் சிற்றண்ணல்வாயில் மலைக்கு மேற்குப்புறத்திலுள்ள பனங்குடி என்னும் ஊரில் சிறிய அளவில் சிவன்கோயில் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

விசாயலயசோழனின் மகன் ‘ஆதித்தன்’ தனது திருப்புறம்பியப் போரின் வெற்றிச் சின்னமாக, அவ்வூரில் ‘ஆதித்தேச்சுரம்’ என்னும் பெயரால் பெருங்கற்றளியொன்றினை எடுப்பித்துள்ளான். திருச்சேலூர், காருக்குறிச்சி, திருஎறும்பியூர் மலை ஆகிய இடங்களில் இருந்த பழைய சிவன் கோயில்களையும், காவிரியின் இரு கரைகளிலும் அமைந்திருந்த கோயில்களையும் (இம்மன்னன்) கற்றளிகளாகச் செய்வித்தான் என அன்பிற்செப்பேடுகள் கூறுகின்றன.

முதல் இராசராசனுடைய தந்தை சுந்தரசோழன் திருவிசலூரில் சினுயோகநாதசுவாமி கோயிலைக் கட்டத் தொடங்கினான். உத்தமசோழன் ஆவடுதுறை, திருவாரூர் ஆகிய இடங்களில் கற்றளிகள் எடுத்துள்ளான்.

இவ்வாறாகச் சோழமன்னர்கள் சைவசமயச் சார்புடையவர்களாகத் திகழ்ந்ததோடு, சிவன் கோயில்களைக் கற்றளிகளாகப் புதுக்கியும், புதிய கற்றளிகளை உருவாக்கியும் மகிழ்ந்துள்ளனர்.

இவர்கள் உருவாக்கிய சமய வளர்ச்சி, கோயிற் கட்டிடக்கலையின் பெருவளர்ச்சியாகவும் அமைந்தது. கோயில்களில் தெய்வத்திருமேனிகளை

உருவாக்கும் சிற்பக்கலையும் பல்திறன் பெற்றதோர் உயர்வுடன் 'சோழர் காலக் கலை' என்ற கலைத்திறத்துடன் உருவாகிச் சிறப்புப் பெற்றது. இதன் கால அளவு கி.பி. *846* முதல் கி.பி. *985* எனலாகும்.

இக்கலை வளர்ச்சியில், பல்லவர் காலத்தில் மகாபலிபுரக் கல் இரதங்களை ஆக்கிய சிற்பியர் வழியினரும் காஞ்சி கைலாசநாதர் கோயில், கடற்கரைத் தலசயனப் பெருமாள் கோயில் ஆகிய கோயில்களைக் கற்றளியாகச் சமைத்த சிற்பியர் வழியினருமாகிய சிற்பிகளும், கல் தச்சர்களும், கட்டிடக் கலைஞராகிய கொற்றரும் பங்கேற்றிருக்க முடியும்.

இவ்விமான முறை, மாமல்லபுர ஒற்றைக் கல் இரதங்களுள் தருமராச ரதத்தினையும், எல்லோரா கைலாசநாதர் கோயில் விமானத்தினையும், பாண்டி நாட்டுக் கழுகுமலை வெட்டுவான் கோயில் விமானத்தினையும், பொதுத் தோற்றத்தால் ஒத்ததாயினும், கட்டிடக் கலையில் புதியதொரு வடிவத்தையும் ஈந்துள்ளது.

அடிப்படையிலிருந்து கொடுங்கை வரையில் சதுரமாகச் சென்ற அமைப்பின்மேல், திரிப்பு, முறையாக, வட்டமிட்ட வடிவை அமைத்து மேலெழும்பும் இம்முறை புதிய முறையாகும். இப்புதிய முறையினைத் தமிழகக் கல்தச்சர்கள் குறிப்பாகச் சோழநாட்டுச் சிற்பியரும், கல்தச்சரும், கொற்றரும் கூடி நாரத்தமலையில் ஆக்கிப் படைத்துள்ளனர்.

இத்தகைய விமானக் கற்றளிகள் உருவாவதற்குச் சோழநாட்டில் தக்க இடமாக விசயாலய சோழனால் முதற்கண் இந்நாரத்தா மலைப் பகுதியே தேர்ந்து கொள்ளப்பட்டது. ஏனெனில் அவனது ஆட்சியில் கற்றளிகளை உருவாக்குதற்கான கருங்கற்கள் அமைத்துக் கொள்ளப் பாறைப் பகுதியாக விளங்கும் சோழநாட்டுப் பகுதியாகத் தஞ்சைக்கு அண்மையில் அமைந்த பகுதி இதுவேயாகும். அதே கால அளவில் இம்மலைத் தொடரின் தென்கோடியைச் சார்ந்த 'சிற்றண்ணவாயில்' குன்றிற்கு எதிர்ப்புறம், ஒரு கல் தொலைவில் பனங்குடி என்ற 'சிற்றூரில்' அங்குள்ள பாறைகளை உடைத்தெடுத்து ஒரு தளக்கோயிலும் கட்டப்பட்டுள்ளது.

இன்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலத்தடங்கள் பாறையாகவே படர்ந்து தொடர்ந்து நிற்பது இயற்கையின் சிறப்பாகவே உள்ளது. இப்பாறைகள் ஒரு சில இடங்களில் வலிமை பெறாத உருக்குப் பாறையாகவும், செம்மண் கப்பிப் பாறையாகவும் உள்ளன. இருப்பினும் பல பகுதிகளிலும் குன்றுகளாகத் தொடர்ந்துள்ளவை திண்மையும் வன்மையும் பொருந்திய பாறையாகும். குறுக்கு ரேகையும், பிறப்பு வெடிப்புச் சுவடுகளும், பாளப் பாறைகளுமாய்ச் சிற்சில இடங்களில் காணப்படுகின்றன. ஆயின் மேலைமலை, நாரத்தாமலை, ஆளுருட்டி மலை, கடம்பர் மலை ஆகியவை இத்தகைய குற்றங்களற்று, நன்கு வளர்ச்சி பெற்ற பெரும் பாறைகளாகவும், கோயில் கட்டிடச் சிற்ப வேலைக்குரிய தகுதியுடையன எனக் கொள்ளக்கூடியனவாகவும் உள்ளன.

இக்காலத்திலும் சோழநாட்டில் பெரும்பான்மையும் இம்மலைப் பகுதியிலிருந்தே அம்மி, குடைகல், திரிகை, குழவிகள் ஆகியன கல்தச்சர்களால் படைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

விசயாலயசோழீச்சரத்தின் காலத்தினைத் தொடர்ந்து சோழ நாட்டிலும் பிற நாடுகளிலும் கருங்கற்கோயில்கள் பல மன்னர்களாலும், அரசியலதிகாரிகளாலும், அறிவுள்ளம் படைத்தோராலும் தோற்றம் பெற்றுள்ளன.

'விக்கிரமகேசரிபூதி' எனும் வேளிர்குல மன்னனால் கொடும்பாளூரில் மூன்று கோயில்கள் ஒரே பரப்பிடத்தில் வரிசையாகக் கருங்கற்றளிகளாயும், விமானங்களைக் கொண்டனவாகவும் கட்டப்பட்டுள்ளன. இக்கோயில்களைக் கட்டுதற்குரிய கற்கள் நார்த்தாமலைத் தொடரிலிருந்தே எடுக்கப் பட்டுள்ளமையினை அறிய முடிகிறது. இம்மலைக் கற்களின் அமைப்பும் திறனும் இக்கருத்தினை அரண் செய்கின்றன.

அக்கால அளவில், வெள்ளாற்றின் வடகரைப் பகுதிகளில் சோழ நாட்டின் தென்புற எல்லைப் பகுதிகளில் சமண சமயம் ஆங்காங்கே பெருவாழ்வு பெற்றுள்ளது. சமண முனிவர்கள் வழிவழியாகத் தங்கி வந்துள்ள சிற்றண்ணல்வாயில் குன்றின் மேற்புறத்திலுள்ள சமணர் பாழியும், கீரனூர் முதலிய பகுதிகளும் சான்றெனத் திகழ்கின்றன. ஆங்காங்கே அழிவுகளாகவும், இடிபாடுகளாகவும் காணப்படும் சமணச் சார்புடைய கற்றளிகளினின்றும் பிரித்துணரவியலா நிலையில் பௌத்தச் சின்னங்கள் உள்ளமையினைச் சூழ்நிலையினைக் கொண்டு உணரமுடிகிறது.

கொடும்பாளூர் மூவர்கோயில், திருமெய்யம் குடைவரைக் கோயில்கள், குடுமியான்மலைக் குடைவரைக் கோயில்கள் ஆகியவை அக்காலத்தில் சைவ, வைணவச் சமயங்கட்கு உட்பட்டுள்ளன.

முதற்பராந்தகசோழன் காலம் முதலே வலிமைமிக்க சோழக் கடற் படையளித்த பாதுகாப்பினால், சோழநாட்டுக் கடற்கரையூர்கள் அயல்நாட்டு வணிகவழி நிறைந்த பெருவளத்தையும், கலைச் செல்வங்களையும் ஈட்டியுள்ளன. சங்க கால அளவிலேயே கிழக்காசிய நாடுகளில் பரவிய பௌத்தமும், பௌத்தக் கலைகளும் அந்த அந்த நாட்டுக் கலைகளுடன் இணைந்து பெருவளர்ச்சி பெற்றிருந்த சூழலில் இவ்வணிகம் நிகழ்ந்துள்ளது. பர்மாவும், மலேயாத் தீவுகளும், சாவா, சுமத்ரா, இலங்கை, சைனா போன்ற நாடுகளும் முழுமையான பௌத்தக் கலைகளைக் கொண்டு திகழ்ந்த சூழலில், அந்நாட்டார் சோழநாட்டிற்கு வணிகத்தின் பொருட்டும், சமயத்தின் பொருட்டும் வருகை தந்துள்ளனர். அப்படி வந்த சீனர்கள் சோழநாட்டில் பௌத்த மடாலயங்களிலேயே தங்கியுள்ளனர். நாகப்பட்டினத்திலிருந்த விகாரத்தில் சீனர் கோயில் என வழங்கும் வழக்கு பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே இருந்துள்ளமையினை மார்க்கோபோலோ குறித்துள்ளார்.

சோழநாட்டின் தென்புற எல்லைப் பகுதிகளில் வெள்ளனூர், செட்டிபட்டி, ஆலங்குடி முதலிய ஊர்களில் புத்தர் சிலைகளும், சிறிய கற்றளி விகாரைகளின் அடிப்படைகளும் கிடைத்துள்ளன.

இவற்றால் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் நலிவு பெற்ற பௌத்தம், பிற்காலச் சோழர் காலத்தில் அவர்களைப் போன்றே மறுமலர்ச்சி பெற்றுள்ளமை புலனாகிறது. பௌத்தத் துறவியர் அமைதியான வாழ்வு பெற்று இலக்கிய இலக்கணங்களைத் தமிழில் தந்துள்ள காலச் சூழலும், வீரசோழியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை போன்ற நூல்களைக் கொண்டு உணர முடிகிறது.

இந்நிலையில் சோழநாட்டில் சங்க காலம் முதல் வளர்ச்சி பெற்றிருந்த மகத, குப்த, வாகடக்கலைகளும், கடல் வணிகத்தால் வந்துற்ற யவன, கிரேக்க, கிழக்காசிய நாட்டுக் கலைகளும், இலங்கையின் நுண்கலைகளும் பிற்காலச் சோழர் காலத்தில், பௌத்த அடிப்படையில் மெல்லெனச்சார்ந்து அழகுணர்வால் ஏற்கப்பட்டுச், சோழநாட்டிற்கேயுரிய பழங்கோயிற்கலை அமைதிகளோடு விளக்கம் பெறுவதற்குத் தஞ்சையே தகுதியுடனும், அரசியல் செல்வாக்குடனும் திகழ்ந்துள்ளது. இவ்வண்ணம் படைக்கப்பட்ட, கலைப் படைப்புகளே வியப்பூட்டும் வனப்புடைய சோழர் கலைப்பாணியாக அமைந்துள்ளன.

# கோயிற்கட்டிடக்கலையும் தத்துவ இலக்கியங்களும்

**'ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே'** என்பது சைவ சித்தாந்தம். சைவ சித்தாந்தத்தின் பிழிவெனத் திகழும் பன்னிரு சூத்திரங்களைக் கொண்ட *சிவஞான போதத்தின்* நிறைவு நூற்பா இக்கருத்தைப் புகல்கிறது. அதனுள்ளும்

**" செம்மலர் நோற்றாள் சேர லொட்டா**
**அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ**
**மாலறநேயமும் மலிந்தவர் வேடமும்**
**ஆலயந் தானும் அரனெனத் தொழுமே "** *(சிவ.போ. - 12)*

எனப் பசு பதியை எட்டுவதற்காகப் பாசத்தைக் களையும் நிலைகளை 'மலங்கழீஇ' என வென்றும், அவற்றுக்காம் சாதனங்களும் 'அன்பரொடு மரீஇ' என வென்றும், 'மாலறநேயம்' பூண்க, 'மலிந்தவர் வேடம்' தொழுக, என்று வரிசை முறையாகவே ஒன்றன் மேல் ஒன்று கூறி இறுதியாகத் தலைமைக் கருத்தென "ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என அறிவுறுத்தும் அளவில் சைவ சித்தாந்தத் தலைமை நூலாம் சிவஞான போதத்தின் நூற்பாக்களும் நிறைவுறுகின்றன. ஆதலின் சைவ சித்தாந்தம் நெறிப்படுத்தும் பதியை எட்டுவதற்குப் பசுவிற்குப் பயன்தரத்தக்க தலைமையான முதன்மைச் சான்று ஆலயங்களே : அவற்றை அரன் வடிவங்கள் என உணர்ந்து வழிபடுவதேயாம். அவ்வளவில் சைவ சித்தாந்தத்தின் காட்சி விளக்கமாக ஆலய அமைப்புகள் அமைந்துள்ளன எனில் அது மிகையன்று.

தமிழகத்தில் சைவம், சைவ சித்தாந்தப் பெருவளர்ச்சி பெற்ற சூழலைச் சோழர் காலம் முதலாகவே (கி.பி. *11*-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னாக) உணர முடிகின்றது. ஆதலின் கி.பி. *12*-ஆம் நூற்றாண்டு அளவிலும் அதற்குப் பின்னாகவும் எழுப்பப் பெற்ற ஆலயங்களின்அமைப்பினைச் சைவ சித்தாந்தக் கருத்துப் பொருளின் காட்சி விளக்க வடிவாக்கங்கள் என்று கூறுதல் சாலப் பொருந்தும் கருத்தாகும்.

சைவத்தின் நுட்ப விளக்கம் சிவ வடிவ விளக்கமேயாம். சிந்திதனாயும், அசிந்திததனாயும் வடிவுடைய சிவபிரானின் வடிவத்தினை வாக்கு மனோகோசரமாய் உலகில் காட்சிப் படுத்திய ஒப்புயர்வற்ற சித்தாந்த முயற்சியே

ஆலயங்களின் அமைப்பாகச் சோழர் காலத்தில் அமைந்திருக்கின்றன. அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமான ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்த சிவதத்துவத்தை உருவகப்படுத்தி ஒருருக்குள் அடக்கி உலகத்தார் உய்யும் பொருட்டாகச் சிவாலயங்கள் உருவாக்கம் பெற்றிருக்கின்றன. பசுக்கள் பாசமலம் நீங்கிப் பதியைச் சேர்வதற்கான தலைமைச் சாதனமென ஆலயங்களின் அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. சத்துப்பொருளாம்பதியைச் சதசத்து *(ஆன்மா)* அசத்தினைக் களைந்து *(பாசங்கள்)* அடைவதற்குச் சில சோபான முறைகளின் வழிப் பரிபக்குவத்தினை அடைய வேண்டி உள்ளது. அத்தகைய பரிபக்குவ நிலைகளைத் தாமாகவும் குருவழிப்பட்டும் இறையருளால் ஆன்மா உணர்ந்து, நீக்கி அறிந்து அடைவது சிவானந்த நிலை. இவற்றை ஆலயங்களின் நுழைவாயில் முதலாக இறையக அறைவரையில் அமைந்துள்ள வாயில், கோபுரம், முற்றம், பலிபீடம், நந்தி, கொடிமரம், மண்டபங்கள், வாயிற்படிகள், இறையகம், விமானம், திருச்சுற்றுக்கள் என்ற அமைப்புகளில் பொருத்திக் காணமுடியும்.

ஆன்மா ஆர்வத்தில் உந்துதலில் பதியைப் பற்றிய ஆர்வம் கொள்ளுதற்கு விழையும் வாயில் ஆலயத்தின் நுழைவாயில் எனலாம். இந்நுழைவாயிலைத் "தோரணவாயில்" என்பது மரபு. இது ஆலய வளாகத் திருச்சுற்று மதிள் அமைப்பிற்குச் சற்றுத் தள்ளிப் பெரும்பான்மை கிழக்கு முகப்பில் உயர்ந்து காணப்படும் அமைப்புடையதாகும். சின்னேரங்களில் எளிமையுறத் தளக்கல் அளவில் அமைவதும் உண்டு. இத்தோரண வாயிலின் தோற்றம் மாலற நேயம் பூண்ட உயிர்களின் உயர்வினை உணர்த்துவதாக அமைவதாகும். 'சதசத்து' ஆகலின் சத்திற்குரிய வளையத்தினின்றும் சற்றுத் தள்ளியே இருப்பிடம் கொண்டுள்ளது. எனினும் சத்தின் நேர் பார்வையில் ஒளிப்பட இது அமைவு பெறுகின்றது. வெட்ட வெளியில் *(அசத்துப் பகுதியில்)* இடங் கொள்வதாயினும் படி முறை வளர்ச்சியாக ஆன்ம பலம் பெற்றுச் சிவசத்தியை நோக்குவதாகத் தோரணவாயில் அமைந்திருப்பது நோக்கத்தக்கது. இத்தகைய தோரணவாயில் அமைப்பு பெரும்பான்மை வடக்குத் தெற்காக நீட்சி உடைய நீள் சதுர வடிவமாக அடிப்படைக் கட்டுமானத்தைக் கொண்டதன் மேலே ஒன்றின் மேல் ஒன்றாகக் குறுகி எழும் செவ்வக அடுக்குநிலைகளைக் கொண்டு அமைவதாகும். அவற்றின் மேலாக அமைந்து கழுத்துப் பகுதியின் மேல் நீள் செவ்வக சரிவுக் கூரையெனத் தலைப்பகுதி அமைகின்றது. இத்தலைப்பகுதியின் நீட்சிக்குத் தக ஐந்தெனவும், ஏழெனவும், ஒன்பதெனவும், பதின் மூன்றெனவும் கலசங்கள் அமைக்கப்பெறும். இவை ஆன்மா சகசமலத்தின் கண் நீங்கிப் பெற்றுள்ள உயர்வைக் குறிப்பதாக அமைவதெனலாம்.

இனித் 'திருமாளிகைத் திருவாசகம்' என்ற கோயில் வளாகத்தின் திருச்சுற்று வாயில் கோபுரம் அமைகின்றது. இவ்விரு கோபுரங்களுக்குமிடையே கோயில் வளாகத்தைச் சுற்றி அமைந்துள்ள இடப்பரப்பினைப் 'புறத்திருச்சுற்று' எனலாம். இது உலகாயத வாழ்வின் பந்தங்களைச் சுட்டும் வெளியென

அமைகின்றது. இவ்வெளியில் திருமுன்னாக அமைந்துள்ள ஆன்மாக்கள் தம்மைப் புறவெளியில் தூய்மைப்படுத்திக் கொள்ளும் சின்னமென விளங்குவது ஆகும். இவ்வளவில் சிவாச்சாரியர் தம் மெய் கழுவிச் சிவச்சின்னங்களை அணிந்து தீர்த்தம் அருந்துவதாக நியமம் செய்வது தமது புறத்தையும் அகத்தையும் தூய்மை செய்வதை உணர்த்துவதாகும். இதனைக் கிரியைகளுள் ஒன்றெனக் கருதலாம். தம்மைப் புறந்தூய்மை செய்து கொண்ட ஆன்மா கோயிலினுள் புகுந்து (துரியம் முதலான) இடைவெளி கடந்து முன்னதாயிருக்கும். தனது மனம், புத்தி, சித்தம், அகங்காரங்களைப் பலியிட வேண்டும் என்பதன் அறிகுறியெனப் பலிபீடங்கள் இடம்பெறுகின்றன. அவ்வளவில் அசுத்தத் தத்துவங்கள் இருபத்து நான்கினையும் கடந்து ஆன்மா (பசு) வித்யா தத்துவத்தினைப் பெறுகின்றது.

காலம், நியதி, கலை, வித்தை, ராகம், புருடன், மாயை என அதற்கும் (பசுவிற்கும்) இறைவனுக்கும் (பதிக்கும்) இடையுள்ள வெளிகளை அளவிடலாகும். அவ்வளவில் திருச்சுற்றுக்கள் ஒன்றெனவும், மூன்றெனவும், ஐந்தெனவும், ஏழெனவும் அமைந்து ஆன்மா அவற்றைக் கடக்கும் மேன்மையைச் சுட்டுவதாக அமைகிறது. மாயைஉள் திருச்சுற்றாகிய உண்ணாழி எனப்படும் கருவறையைச் சுற்றிய திருச்சுற்றில் அடையாளப்படுத்தப் படுகின்றது. அதனுடைய சார்பாகப் பெரும்பான்மை சதுர வடிவில் அமைந்துள்ள கருவறையின் உள்ளகத்தில் இருள் சூழ்ந்து காணப்பட அதன் நடுவே எழுந்தருளியுள்ள இறையின் உருவோ அல்லது அருவுருவோ மாயையின் துணைக் காரணமாக உருப்பெற்று இலங்கும் பேரருட் சிவத்தின் தோற்றத்தினைப் பசுக்களுக்கு உணர்த்துவதாக நிற்கும்.

கால முதல் மாயை ஈறாக அமைந்த சுத்தாசுத்த தத்துவத்தினைப் பசு, மந்திர தந்திர கிரியாசாதனங்களைக் கொண்டு கடந்து, சிவதத்துவத்தினை உணரத் தலைப்படுகின்றது. இதனை அறிவுறுத்துவதாகவே ஸ்நபன மண்டபத்தில் அமைந்துள்ள நந்தியின் இருப்பிடம் உணர்த்துகிறது. அதன் முன்னாக விளங்கும் ஒலிப் பொருட்களும் ஒலி அமைப்பும் சுத்த வித்தை, ஈஸ்வரம், சாதாக்கியம், சக்தி முதலிய பகுதிகளைச் சுட்டுவதாக அமைய அவ்வளவில் அர்த்த மண்டபத்தின் நடுவே அமைந்துள்ள நந்தி உருவம் பசுவின் மேன்மை நிலையை உணர்த்துவதாக அமைகின்றது. அவ்வளவில் மீண்டும் ஆணவமலம் ஆன்மாவைப் பற்றிச் சிவ ஒளியினின்றும் மறைப்பது போலச் சிவலிங்கத்தின் முன்னதாகத் திரையிடப்படுகிறது. அத்திரையினைச் சிவாச்சாரியர் விலக்கும் செயல் அம்மலத்திரையினை (திரோதான சக்தி) குருவருள் கொண்டே விலக்க முடியும் என்ற சைவ சித்தாந்த நெறியின் சுவடு எனலாம்.

அத்திரை நீங்கிய அளவில் சிவத் தோற்றம் பசுவிற்கு எளிதாகவமைந்த தோற்றமாகக் (சக்தி நிபாதம்) கிட்டுகிறது. அச்சிவ உருவத்திற்குக் காட்டப்பெறும் கற்பூரம் முதலிய பூசனைகள் ஆன்மா தன்னை சிவப்பேரொளியில் கலக்கச் செய்யும் அறிகுறி எனலாம். இவ்வாறாக ஆலயங்களின் கிடக்கை

அமைப்புமுறை சைவ சித்தாந்த அறிகுறியென அமையக் கிடக்கிறது. இனி இறையகத்தின் மீது எழும்பியுள்ள விமான அமைப்பு சிவனாரின் தூலத் தோற்றமாக அமைவது உணரத்தக்கதாகும். அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம், ஆனந்த மயம் எனக் கோசங்களை மேல் அடுக்குகளாகக் கொண்டு தளம், அதிதளம் கீரிவம், சிகரம், ஸ்தூபி என்ற அமைப்புடன் விளங்கும் விமானத்தைத் தூலசிவ வடிவமெனவே சைவ சித்தாந்த வழி உணர முடியும். இத்தூல வடிவத்தின் பஞ்சமுகங்களையும் (ஈசானம், தத்புருடம், வாமதேவம், அகோரம் சத்யோஜாதம்) ஆன்மா தன் ஆன்மநேய பக்தி உயர்ச்சி கொண்டு அவ்வத்திக்குகளில் நின்று கண்டு உய்வதாக நாற்புறமும் அமைகின்ற கொடிமர உயர்ச்சி அமைகின்றது. இவ்வாறாகச் சைவ சித்தாந்தக் கருத்து விளக்கமெனக் காட்சிக்குரியதாக ஆலய அமைப்புகள் கி.பி. *12*-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னாகத் தமிழகத்தில் அமைந்துள்ளன எனக் கருதலாம்.

# வாழ்வியற் கட்டிடக்கலையும் தமிழிலக்கியங்களும்

தமிழிலக்கியங்களில் வாழ்வியற் கட்டிடக்கலை பற்றிய செய்திகளும் அருமையுற அமைந்துள்ளன. நகரமைப்புள் கிராமச் சூழலைப்படைப்பது நகரியத்திட்டத்தின் இயல்பெனலாம்.

" பன்மலரடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந்திகை " *(சிலம்பு 10: 29-30)*

என்ற செய்தி இதனை விளக்கும்.

இன்று சொற்களைப் புறந்தள்ளிச் செயலில் மட்டும் அமைந்துள்ள 'வருணாசிரம' குடியேற்றங்களை வெளிப்படையாகச் சொல்லாலும் செயலாலும் அமைத்துக்காட்டும் பெரும்பாணாற்றுப்படையின் தொடர்கள் ஆழ்ந்து நோக்கத்தக்கன.

மறைகாப்பாருறைபதியின் விளக்கம் கீழ்வருமாறு காணப்படுகிறது.

" செழுங்கன்றியாத்த சிறுதாட் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்
மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப் பாள ருறைபதி *(297-301)*
ஏணி எய்தா நீணெடு மார்பின்
முகடுதுமித் தடுக்கிய பழம்பல் லுணவிற்
குமரி மூத்த கூடோங்கு நல்லில் " *(245-247)*

என்ற தொடர்களும்

" பகட்டா வீன்ற கொடுநடைக் குழவி
கவைத்தாம்பு தொடுத்த காழூன் றல்குல் " *(243-244)*

என்ற தொடர்களும்

" பிடிக்கணத் தன்ன குதிருடை முன்றில்" *(186)*

என்ற தொடரும்

**" குறுஞ்சாட் டுருளையொடு கலப்பை சார்த்தி**
**நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டில் "** *(188-189)*

என்ற தொடர்களும் தமிழகத்தில் சங்க காலத்தில் திகழ்ந்த "குடியானவன்" வீட்டின் அமைதிகளைத் தெளிவாக்குகின்றன.

கலப்பையும், குதிரும், பசுவுங்கன்றும் இணைந்த தம் வாழ்வியலுக்கேற்பக் குடியிருப்பு அமைப்பையும் திட்டமிட்டுக் கொண்டிருந்த சங்ககாலத் தமிழினம்

**" குடியிருப்பு என்பது தேவைக்கேற்பத் திட்டமிடப்படல் வேண்டும் "**

என்ற பொதுக் கொள்கையைப் பின்பற்றி வாழ்ந்தமை இதனாற் போதரும்.

நெடுநிலை மாடங்களையும், தட்டோடுகளையும் கூரையாகக் கொண்டிருந்த சங்க கால "வீடு" களிடையே கூரைவீடுகளையும் உரிய விளக்கங்களோடு தருவதில் தமிழ் இலக்கியங்கள் தயங்கிடவில்லை.

**" வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த**
**மஞ்சள் முன்றில் மணநாறு படப்பைத்**
**தண்டலை யுழவர் தனிமனை "** *(பெரும் 353-355)*

**" ஈத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை "** *(பெரும் 88)*

என்ற தொடர்கள் கூரைக்குத் தென்னை, ஈந்தின் மட்டைகள் வேயப் பெற்ற செய்திகளைப் புகலுகின்றன. மேலும் அவ்வமைப்பு சிறுகுடில் அமைப்பிலுள்ள "குரம்பை" யாகும் என்கிறது.

**" சாபஞ் சாத்திய கணைதுஞ்சு வியநகர்**
**ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பு "** *(பெரும் 121-122)*

என்ற தொடர்கள் சற்றே பெரிய கூரைவீட்டினைச் சுட்டுகின்றன.

**" வேழம் நிரைத்து வெண்கோடு விரைஇத்**
**தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த**
**குறியிறைக் குரம்பை "** *(பெரும் 263-265)*

என்ற தொடர்கள் வரி மூங்கில்கள் பரத்தப்பெற்று தாழை நாரால் பிணைக்கப்பெற்ற மூங்கில் தளத்தின் மீது தருப்பைப் புற்கள் வேயப் பெற்ற செய்தியினை அறிய முடிகின்றது. அந்தக் கூரையின் மீது சுரைக் கொடியைப் படரவிடும் பாங்கு தொன்றுதொட்டு வருவதாகும்.

இத்தகு கூரைகள் அறிவியலடிப் படையில் ஆயத்தக்கனவாக இன்றுள்ளன. ஆனால் பயனறிந்து துய்த்த தமிழினமோ தம் பழம்திறத்தை மறந்து போனமை வருந்துதற்குரியது. ஈந்து, தென்னை, பனை மட்டைகளைக் கொண்டு கூரைவேயப் பெற்றமையாலும் விழல், தருப்பை, சணப்பை, நாணல் ஆகிய புற்களைக் கொண்டு வேயப்பெற்றமையாலும் அங்கு வாழும் மக்கள் பெற்ற நன்மைகள் என்னென்ன? என்பதனைச் சிந்திக்க வேண்டும்.

மூங்கிற்பரப்பின்மேல் இப்புற்கள் குறிப்பாகத் தர்ப்பை பரத்தப் பெற்றால் விளையும் அறிவியலடிப்படையிலான நன்மை என்ன என்பதும் சிந்திக்கத்தக்கது.

வீடு என்பது இயற்கைச் சக்திகளான சூரியன், மழை, காற்று முதலியவற்றினின்றும் மனிதனைக் காப்பது மட்டுமல்ல: கோள்களின் ஒளித்தாக்கத்தினின்றும் காத்தற்குரிய வன்மையுடன் படைக்கப் பெற்றுள்ளன என்பது சிந்திக்கத் தக்கதாகும். தர்ப்பைப் புல் கோள்களின் ஒளித் தாக்கத்தைத் தடுக்கவல்லது என்பது ஆயத்தக்கது. இவ்வாறு சிறுகுடில்களாயினும் அவற்றுள் இடம்பெற்ற மண்சுவர்கள் வெப்பப் பரவலைத் ( Radiation ) தடுத்து வீட்டை இயல்பான தட்பத்துடன் காத்துள்ளமை இன்றைய கட்டிடக்கலை வல்லுநர் ஆய்ந்துவரும் சக்திக் காப்புகள் ( Energy Conservation ) பற்றிய ஆய்வுகளுக்கு உரியவையாகும்.

இத்தகு குடில்களின் வளர்ச்சி நிலையில் உற்ற இல்லங்கள் "நெடுஞ்சுவர் நல்லில்" *(புறம் 373)*களாக இருந்தமை உணரத்தக்கது.

கட்டுமனைகளின் சுவர் உயரம் இன்று சிக்கனம் கருதி *9½* : 10 : 11 என்றமைவதால் காற்றோட்டமின்றி இல்லங்கள் வெறும் புழுக்க அறைகளாக அமைவதை நாமறிவோம். சுவருயரம் அதிகமாக அதிகமாகக் காற்றோட்டமும் அதனால் வெப்பப்பரவலின்மையும் நாம் கட்டுமானத்தால் பெறலாகும். இவ்வாய்ப்புகளுடன் கூடியனவாகவே பண்டைத் தமிழக "இல்லங்கள்" நல்லில்லங்களாகத் திகழ்ந்துள.

குறிஞ்சி நிலம் மலையும் மலை சார்ந்த இடமுமாதலின் அதற்குரிய சிறப்புக்காலம் கூதிர் காலம் என்பது தமிழர் மரபு. எனவே அங்கமைகின்ற இல்கள் எல்லாம் சிறியனவாகக் குளிர் தாங்குவனவாக அமைவு பெறல் வேண்டும். அது இயற்கையோடு இயைபுடைய நிலையில் அப்பகுதியில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே படைக்கப்பட்டுள்ளது. வடிவம் மட்டும் மனிதனது தேவைக்கேற்ப உருப்பெற்றுள்ளது. இதனை

**"அகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய**
**புல்வேய் குரம்பைக் குடிதொறும் "** *(மலை 438-439)*

என்ற சங்க இலக்கியத் தொடர் குறிக்கிறது. மரக்கழிகளும், காய்ந்த புல் சுருணைகளும் இக்குடிலுருவாக்கத்தில் பயன்படுத்தப்பெற்றுள்ளன. கழிகள் சுவர்ப்புறமாகக் குறு உயரத்துடன் நடப்பெற்று அதன் மீது கூரைக்கூடு கட்டப்பெற்றுள்ளது. எனவே, புல் சுருணை வேயப்பட்ட போது "குரம்பை" குவிந்த தோற்றத்தில் அமைகிறது. இதனைக் குறிஞ்சிப்பாட்டும் பெரும்பாணாற்றுப்படையும் 'குறுங்காற் குரம்பை' எனச்சுட்டுகின்றன.

சுவர்கள் மண்படைகளால் ஆக்கம் பெற்றுப் பசியசேறு கொண்டு பூசப்பெற்றன. இச்சேறு பசுஞ்சாணம் குடியிருப்பில் பயன்படுத்தப் பெற்றுள்ளமை இன்றும் மலைவாழ் மக்கள் குடியிருப்புகளில் கண்டறியத்தக்கதாகும்.

இத்தகு குரம்பைகட்கு முன்னால் "தாவளம்" என இன்று வழங்கப்பெறும் அமைப்புடைய நாற்கால் பந்தல்கள் அமைவு பெறுவதுண்டு.

வெயிற்பயன் துய்க்கவும், விருந்தினரை வரவேற்று உசாவி மகிழவும் இப்பந்தல்கள் பயன்பட்டுள்ளன. இது நான்கு கம்புகள் நாற்புறத்தில் நீள்சதுர அல்லது சதுர வடிவில் நடப்பெற்றக் குறுக்குக் கழிகளால் மேலே கலைப்பரப்பில் பிணைக்கப்பெற்றுக் குறுக்கு வாட்டத்தில் கழிகள் பரத்தப்பெற்று மேலே காய்ந்த சருகுகள், பட்டைகள் கொண்டு வேயப்பட்ட அமைப்புடையது. இதனையும் தமிழிலக்கியங்கள் மிக நுட்பமாகச் சுட்டுகின்றன. புறநானூற்றின்

**" கூகை துற்ற நாற்காற் பந்தர்ச் சிறுமனை வாழ்க்கை "** *(29:19-20)*

என்ற தொடர் இதனைப் புலப்படுத்துகின்றது. புறநானூற்றின் **"சிற்றில் நற்றூண்"** *(86:1)* என்ற தொடர் "தூண்" பற்றிய குறிப்பினைத் தருகின்றது.

இவ்வமைப்புள் மேலே வேயப்பெறும் ஓலை அல்லது மட்டை அல்லது தழை அல்லது புல் சுருணைகள் நிலத் தகுதிக்கேற்ப மாறுபடுகின்றன.

இம்மாற்றம் இருவகைப் பயன்தருவனவாகவுள்ளன. ஒன்று அந்நிலத்தின் விளைபொருள் எச்சம் பயன்படுத்தப்படுகிறது. இரண்டு நில இயல்பிற்கேற்ற தட்ப வெப்பத் தகுதிகளில் இக்கூரைப்பொருட்கள் பயன்படுகின்றன.

இம்முறையில் குறிஞ்சி நிலத்தில் தினையரியப்பெற்ற தாளும் புல்லும் கூரைக்குப் பயன்பட்டுள்ளன.

**" இருவி வேய்ந்த குறுங்காற் குரம்பை "** (குறிஞ்சிப் *:* 153)
**" புல் வேய் குரம்பை "** (மலை 438 *:* 39 புறம் 120:13)

எனும் சங்க இலக்கியப் பதிவுகள் இதனை விளக்குகின்றன.

முல்லை நிலத்தில் வரகுக்கற்றை வேயப்பட்டுள்ளது. இதனை

**" செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்**
**கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின் "** (பெரும் 149)

என்ற தொடர் சுட்டுகின்றது.

பாலைநிலக் குடில்கள் ஈந்தின் ஓலைகளால் வேயப்பட்டிருந்தமையினை அழகுற,

**" யாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்**
**வேற்றிலை யன்ன வைந்நுதி நெடுந்தகர்**
**ஈத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை "** *(86-88)*

எனப் பெரும்பாணாற்றுப்படை விளக்கம் செய்கிறது.

**" வரம்பில் புதுவை வேய்ந்த கவிகுடில்"** (பெரும் 224-25)
**" வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத்**
**தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த**

**குறியிறைக் குரம்பை "** (பெரும் 224-25)
**வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த**
**மஞ்சள் முன்றில் மணநாறு படப்பைத்**
**தண்டலை யுழவர் தனிமனை** (பெரும் 353-55)

ஆகிய இலக்கியத் தொடர்கள் மருதநில வீடுகளுக்கு வைக்கோல், தருப்பை, தென்னை மட்டை ஆகிய கூரைகள் அமைந்திருந்த பண்டைச் சூழலைப் பறைசாற்றுகின்றன. இக்குறிப்புவழித் தென்னை மட்டைகள் வேயப்பெற்ற இல்லத்தை "மனை" என வழங்கிய பாங்கும் பிற புல், தருப்பை இவற்றைக் கொண்டு வேயப்பெற்ற இல்லங்களைக் "கவிகுடில்", "குறிஇறைக் குரம்பை" எனக் குறித்த சிறப்பும் புலப்படுகின்றன.. இவ்வேறுபாடு மனையின் அளவைப் பொறுத்தமைந்துளதோ எனத் தோன்றுகிறது.

# சுற்றுப்புறச் சூழலும் கட்டிடக்கலையும்

உலகம் என்ற குறியீட்டால் கட்டப்படுகின்ற இப்பூமி நிலம், பொழுது என்ற இரு கூறுகளின் சேர்க்கையாகும். இதனை இடம், காலம் என்ற அடிப்படைகளின் கூட்டுருவாகக் கொள்ளலாம்.

பொருளை காட்சிப் பொருள், கருத்துப்பொருள் எனும் இருதிறமாகக் காண்பது பண்டைத் தமிழக வழக்கு. அத்தகுதியில் கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுவாயாகப் பெற்ற தமிழகப் பகுப்பினுள், நடுவணதொழிந்த நடுவண் ஐந்திணைகளே படுதிரை வையம் பாத்திய பண்புடையனவாகும்.

அதனை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று பகுத்துக் காண்பர். முல்லையும் குறிஞ்சியும் காலமாறுபாட்டில் நிலத்தின் இயல்பு திரிந்து சின்னேரங்களில் பாலை என்ற படிமங்கொள்ளும் என்பர்.

**முல்லையைக் காடும் காடு சார்ந்த பகுதியும் என்றும்**
**குறிஞ்சியை மலையும் மலை சார்ந்த பகுதியும் என்றும்**
**மருதத்தை வயலும் வயல் சார்ந்த பகுதியும் என்றும்**
**நெய்தலைக் கடலும் கடல் சார்ந்த பகுதியும் என்றும்**

வகுத்துக் காட்டுவர்.

இப்பகுப்புகளுக்கு அமைந்த குறிப்பிடத்தக்க காலச் சூழல்களைப் பெரும் பொழுது, சிறுபொழுது என்று இருதிறமாக வகுத்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| முல்லை | கார்காலம் | மாலைப்பொழுது |
| குறிஞ்சி | கூதிர்காலம் | யாமப்பொழுது |
| மருதம் | --- | வைகறை விடியல் |
| நெய்தல் | --- | எற்பாடு |

ஆகக் குறிஞ்சி நிலமக்கள் தமது சுற்றுப்புறச் சூழல்களாக மலை மலைசார்ந்த பகுதி, கூதிர்காலம், யாமப்பொழுது இவற்றைக் கொண்டுள்ளனர். இவ்விரண்டன் அடிப்படையில் அவர்கள் பெற்றிருந்த பொருட்களுள் கருப்பொருள்களாவன முருகன், தேன், தினை முதலியனவாகும். இச்சுற்றுப்புறச் சூழல்களுக்கேற்பக் குறிஞ்சி நிலமக்கள் கண்ட உறையுள்களுள் பெரும்பான்மை ‘பரண்’ அமைப்புடையனவாகவே கட்டப்படுகின்றன. மலை முழைஞ்சுகள்

அல்லது விடரகங்களுள் உறையுள் கொண்டபோது அக்குடைவுகளுக்கு முன்புறம் சிறுகோயில்களை நெருக்கமாகக் கட்டி இலைதழைகளை அல்லது சிறு குச்சிகள், தட்டைகளை நெருக்கமாகப் பிணைத்துச் சார்த்திய அடைப்புகளைக் கொண்டுள்ளனர். கால வளர்ச்சியில் மலைத் தளத்தின் மீது "குறும்புகள்" கண்ட போதும் இத்தகு பரண் அமைப்பு வீடுகளே சில மாற்றங்களைப் பெற்றுப் பரண்கால்கள் உயரம் குறைந்த நிலையில் அமைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறு காணப்படுகின்ற இக்குறிஞ்சி நில உறையுள்களை இருதிறமாகக் கொள்ளலாம். கட்டிடம் அமைந்த மலைத் தளத்திற்கும் கட்டிடத் தளத்திற்கும் இடையே சிறு இடைவெளி அமைவதால் மலைத்தள ஈரமோ, பாறையின் வெப்பமோ கட்டுமானத் தரையினைப் பாதிப்பது இல்லை. அவ்விடைவெளியில் காற்றோட்டம் அமைவதால் அவ்வியற்கைத் தாக்கங்கள் மாறுபாடும் அடைகின்றன. எனவே, அத்தகு கட்டுமானத் தரையில் உறைவோர்க்குப் புறச்சூழல், தரைவழிப் புரிவது தவிர்க்கப் படுகிறது. மேலும் குறிஞ்சி நிலமாதலின் நச்சு உயிரினங்களிடமிருந்து விலகும் பாதுகாப்பும் கிட்டுகிறது. இப்பரணமைப்பு நான்கு கால்கள் அல்லது இடைவெளியிலமைந்த கால்களைப் பெற்று மேலே நெருக்கமாக ஒழுங்குறப் பரத்தப்பெற்ற மரக்கொம்புகளையே தளவரிசையாகப் பெற்று உள்ளன. பக்கத் தடுப்புகளும் நேருற அமைந்த இத்தகு படல்களாக அவற்றின் மீது தழை வேயப்பெற்ற சரிவுக் கூரைகள் அமைவதியற்கை. ஒருபுற வாயில் இயல்பு. அடர்ந்த பெருமரங்களின் நெருங்கிய கிளைகளிடை தோற்றம் பெற்ற இப்பரண் வீடுகளின் அமைப்பே குறிஞ்சி வீடுகள் எனக் கொள்ளத் தகுவனவாகும்.

முல்லை நிலமக்கள் தமது சுற்றுப்புறச் சூழல்களாகக் காடு, காடு சார்ந்த மேய்ச்சல் நிலங்கள், கார்காலம், மாலைப்பொழுது இவற்றைக் கொண்டுள்ளனர். இச்சுற்றுப்புறச் சூழல்கட்கும் தம் தேவைக்கும் ஏற்ப முல்லை நிலமக்கள் தமது வாழ்விடத்தை மண்ணகழ்ந்து அமைந்த அடிப்படைகளையுடைய சிறுவடிவக் குடில்களாக அமைத்துக் கொண்டுள்ளனர். குடிகளுடன் பக்கச் சார்பில் இணைத்தோ தனித்தோ காணப்பட்ட மாட்டுத் "தொழுவம்" இன்றியமையாத நிலையில் அமைக்கப் பட்டுள்ளமையினைச் சங்க இலக்கியங்கள் புலனாக்குகின்றன.

இக்குடில்கள் முன்புறம் திண்ணைகளைக் கொண்டனவாகத் திகழ்ந்துள்ளன. மெழுகப்பெற்ற தரையும் சுவர்ப் பரப்பும் ஒலை வேயப்பெற்ற கூரைகளும் உடைய இக்குடில் அமைப்பு மிதவெப்பம் மிதக்குளிர்ச்சியைப் பருவகால மாற்றங்கட்கு ஏற்பத் தரவல்லதாக விளங்குவது அறியத்தக்கது. வீட்டைச் சுற்றிலும் கட்டப்பெற்ற அடைப்பு வேலி ஆநிரைகளை இராக்காலங்களில் ஒரிடத்தில் தொகுத்துப் பாதுகாப்பதற்காம் முதல் முயற்சி எனலாம்.

வயலும் வயல்சார்ந்த இடமும் வைகறை விடியலும் முதலென அமைந்த மருத நிலமக்கள் கட்டுமனைக் கட்டிடக்கலையின் முன்னோடிகளாவர். களி, வண்டல், நீர்மை மிக்க நிலவியற்கையின் மீது எழுப்பப் பெற்ற கட்டிடங்களை

உருவாக்கம் செய்தவர் இவர்களேயாவர். களிமண்ணைச் சுட்டுச் செங்கல் கண்டு, செங்கல் அருகில் களிமண்சாந்து, களிமண் பூச்சு இவற்றைப் பூசி, ஓடுகளைப் போர்த்தி வீடுகளைத் தமது தானியங்களைப் பாதுகாத்து வைக்கக்கூடிய வகையிலும் வளமாகப் புழங்குதற்கும் உரிய வகையிலுமாக அமைத்துக் கொண்டுள்ளனர். இவ்வீடுகளே "பல கட்டு" வீடுகளாக வளர்ச்சி பெற்றுள்ளன. இவ்வீடுகளின் அமைப்பியலில்தான் முழுக்க முழுக்க மனைசாத்திரக் கணித அறிவும், வாழ்வியலுக்குத் தேவையான அளவில் அறிவியல் அறிவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அறைகள், கூடங்கள், வாரங்கள், திண்ணைகள், முற்றங்கள், நடைகள், அடைப்புகள் என்ற ஏழுங்கங்களுடன் கூடிய இக்கட்டுமானங்கள் தேவை, பயன்பாடு இவற்றிற்கேற்பப் பல்வேறு வடிவமைப்புக்களைப் பெற்றுத் திகழ்கின்றன. ஒளி, ஒலி, காற்றோட்டம் என்ற இயற்கைச் சக்திகளின் அமைவினை ஏற்புடைய வடிவில் பெறுமாறு இவ்வறைகளின் அளவீடுகள் அமைக்கப் பெற்றுள்ளன. படுக்கை அறைகள், விருந்தினர் அறை, அடுக்களை அறை, சேம அறை முதலியவை அமைக்கப் பெற்றுள்ளன.

தேவை, குடும்பியல் நெறிமுறைகள் ஆகியவற்றைத் தழுவிய நிலையில் வீடுகளின் நீள அகலங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

மேனோக்கி எழும்பிய அடுக்குத் தளங்களும் பின்னோக்கி வார்ந்த வீட்டியல் நீளமும், பக்கப்பரப்பு இணைப்புகளைக் கொண்ட அகலமும், வீட்டமைப்புக்களில் முற்றங்கள், நடைகள் முதலியவற்றை ஒன்றிற்கும் கூடுதலாக அமைத்த திறமும் இவை தழுவியே அமைவு பெற்றுள்ளன.

வாழ்வின் செல்வ நிலைக்கேற்ப ஓட்டுக் கட்டிடமாகவோ, ஓடு போர்த்தப்பெற்ற கூரையுடனோ அன்றி ஓலை வேயப் பெற்றதாகவோ இவ்வமைப்புகள் திகழ்கின்றன. இக்கூரையமைப்புகள் பண்டைத் தமிழக மருதத்திணையினரால் தட்ப வெப்ப நிலைக்கேற்பவும் கொள்ளப்பட்டிருக்கின்றன. மரபமைப்பு களிமண் நிரவப் பெற்றுப் பசுஞ்சாணத்தால் மெழுகப் பெற்ற நிலை உடல் நலத்திற்கும் இயற்கை மாறுபாட்டிற்கும் உரிய அமைப்பினதாகும்.

கடலும் கடல்சார்ந்த இடமும், மாலைப்பொழுதும் முதலென அமைந்த நெய்தல் நிலமக்கள் கொண்டிருந்த உறைவிட வடிவமைப்புகள் பெருங்காற்றிற்கும், பேரலைகட்கும் ஈடுதரக்கூடிய சிறுவடிவத் தாழ்ந்த ஓலைக் குடிசைகளேயாகும். மூங்கில் போன்ற கால்களை நெகிழாமல் மணல் சரிவகட்டில் புதைத்து அக்கால்களின் பிணைப்பில் அமையலாகும் பனைமட்டை அடைப்பு அல்லது தென்னைக் கீற்றடைப்பினைக் கொண்ட குடில் அமைப்புகளே வாழ்வியற் கட்டிடங்களாகப் பெரும்பான்மை அமைந்துள்ளன.

வளர்ச்சிக் காலங்களில் வேயமாடமும் கட்டுக்கோப்பு வீடுகளும் அமைந்த கடற்கரையூர்வீதிகளை உணரலாகிறது. தேவைக்கேற்ப வீட்டுமனைகளின் அளவும் உயரமும் அமைந்திருந்த சிறப்பும் தமிழிலக்கியங்களில் உள்ளன.

**" வான மூன்றிய மதலை போல**
**ஏணி சாத்திய வேற்றருஞ்சென்னி**
**விண்பொர நிவந்த வேயாமாடத்து "** *(பெரும் 346-48)*

என விண்முட்டும் உயரமும்,

**" குறும்பல் குழுவின் குன்று கண்டன்ன**
**பருந்திருந்து உகக்கும் பன்மா ணல்லில் "** *(மதுரைக் : 501-502)*

என்ற தொடர்களால் பேரளவும் சுட்டப்பெறுகின்றன.

இல்லங்கள், முற்றம், திண்ணை, பலகட்டுகள், சிறிய பெரிய வாசல்கள், இடைகழி, மாடங்கள் முதலிய அங்கங்களைக் கொண்டிருந்த வாய்ப்பினை

**" ஏழகத்தகரொடு உகரு முன்றில்**
**குறுந்தொடை நெடும்படிக்கால்**
**கொடுந்திண்ணை பஃறகைப்பின்**
**புழைவாயிற் போகிடை கழி**
**மழைதோயும் உயர்மாடத்து "** *(பட்டினப்: 141-145)*

என்ற பட்டினப்பாலைத் தொடர்கள் குறிக்கின்றன. இவ்விலக்கியத் தொடர்களுள் வேதிகை, திண்ணையைக் குறிப்பதாகவும் மாளிகை பேரில்லத்தைக் குறிப்பதாகவும் உள்ளமை கருதத்தக்கது.

வளியும் ஒளியும் வழங்கிடும் வாய்ப்புறச் சாளரங்கள் இல்லங்களில் இடம்பெற்றிருந்தன. அதன் வழி வரவுகளைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பாகக் கதவுகள் இடம் பெற்றுள்ளன.

இதனை நெடுநல்வாடை "சாலேகம்" *(125-128)* எனவும் "வாய்க் கட்டளை" *(62)* எனவும் வழங்குகிறது. இவ்வாய்க்கட்டளை என்ற "காற்றோடி"ப்புழை அமைப்பு வேனிற்பள்ளிகளில் இடம் பெற்றுள்ளன. இதனை

**" வானுற நிலந்த மேனிலை மருங்கின்**
**வேனிற்பள்ளித் தென்வளி தரூஉம்**
**நேர் வாய்க்கட்டளை "** *(60-62)*

என நெடுநல்வாடை வடிவமைப்புடன் சுட்டுகிறது.

**" மாலைத் தாமத்து மணி நிரைத்து வகுத்த**
**கோலச் சாளரக் குறுங்கண் "** *(சிலம்பு 2: 22-23)*

**" மான்கட் காலதர் மாளிகை இடங்களும் "** *(சிலம்பு 5:8)*

எனச் சிலப்பதிகாரத் தொடர்களும் விளக்குகின்றன.

அறைகட்கு அமைக்கப்பெற்ற சாளரங்கள் வெளிக்காற்றை உள்ளே பெறுதற்கும் உள்காற்றை வெளிப்படுத்தற்குமாக அமைக்கப் பெற்றுள்ளன. இச்சாளரங்கள் காற்றைக் கட்டுப்படுத்தி அளித்திடும் வாய்ப்பினவாகவும் அமைக்கப் பெற்றிருந்த பண்டையத் தமிழகத் தொழில் நுட்பத்தினை,

**" சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில் "** *(மதுரைக் : 358)*

என்ற தொடர் புலனாக்குகின்றது.

இத்தகு அமைப்பு காற்று இசைக்கும் இயல்பின. அதே நேரத்தில் கால்போகு பெருவழிகள் செயற்பட்ட அவ்வாயிலை

**" ஆடகச் செய்வினை மாடத் தாங்கண்**
**சாளரம் பொளித்த கால்போகு பெருவழி ".** (மணி *4:52-53)*

என மணிமேகலை சுட்டுகிறது. இவ்வகை அமைப்புகள் காற்றை ஏற்ற, இறக்கக்கோணங்களில் சுவர்களினூடே ஊடறுத்தமைத்த சாளரம் என்ற அமைப்பின் வழி உட்செலுத்தியும் வெளித்தள்ளியும் இருந்த அமைப்புகளாகும். ஆனால் வேனிற்காலத்துத் தமிழகம் துய்க்கும் தென்றலை முற்றிலும் அனுபவித்திடும் வகையில் நேர்வாய்க் கட்டளைகள், பண்டைத் தமிழக இல்லங்களில் இடம் பெற்றிருந்தமை

**" மேனிலை மருங்கின்**
**வேனிற்பள்ளித் தென்வளிதரூஉம்**
**நேர்வாய்க் கட்டளை திரியாது "** (நெடு. நல் *: 60-62)*

என்பதால் புலனாகின்றது.

நிலையும் வாயில்களும் இல்லங்களின் இன்றியமையா உறுப்புக்களாகும். இவற்றையும் மிகவும் தெளிவாகத் தமிழிலக்கியங்கள் சுட்டிச் செல்கின்றன.

**" தாளொடு குயின்ற தகைசால் சிறப்பின்**
**நீணெடு வாயில் நெடுங்கடை "** *(10:7-8)*

என்ற சிலம்பின் தொடர் இதனை நன்கு விளக்குவதோடு அதிலிருந்த தாள் பற்றிய குறிப்பினையும் தந்து செல்கிறது.

நெடுநல்வாடை "துணைமாண் கதவம் " *(79-86)* பொருந்திய நெடும்நிலையினையும் சுட்டுவது அறியத் தக்கது.

கோட்டை வாயிற் கதவுகள் அளவிலும் திண்மையிலும் பெரியனவாகவும் எழுவிட்டமைந்தனவாகவும் (புறம் *441)* மாற்றாரின் பற்கள் பதிக்கப்பெற்றும் *(*நற் *18,* அகம் *211)* இருந்துள்ளன. இத்தகு உயர்ந்த நிலைகளும் கதவுகளும் யானைமீது ஒருவனமர்ந்து கொடியேந்திய நிலையில் உள்ளே புகுந்து செல்லும் அளவினதாக இருந்தன என்பதனை நெடுநல்வாடை *(87)* சுட்டுகிறது.

மாடி வீடுகளின் மேல் தளத்தில் நிலா முற்றங்களும் திறந்த வெளி மாடங்களும் சங்கத் தமிழர் துய்த்து மகிழ்ந்த சிறப்பின. இதனை

**" நிரைநிலை மாடத் தரமியந்தோறும் "** (மதுரைக் *451)*

**" நிலவுப் பயன் கொள்ளும் நெடுவெண் முற்றம் "** (நெடுநல் *95)*

**" நிலவுப் பயன் கொள்ளும் நெடுநிலா முற்றம் "** (சிலம்பு *4:31)*

**" வேயா மாடம் "** (சிலம்பு *5:7)*

என்ற தமிழிலக்கியப்பதிவுகள் உணர்த்துகின்றன. எழுநிலை மாடங்களைக்

கொண்ட பெரும் மாளிகைகள் தமிழகத்தில் அக்காலத்தில் இருந்து சிறந்துள்ளன.

முல்லைப்பாட்டு **"இடஞ் சிறந்துயரிய எழுநிலை மாடம்"** *(86)* என இக்கருத்தைச் சுட்டுகிறது. சிலம்பு இதனை **"நெடுநிலை மாடம்"** *(2:13, 13:69)* எனவும் குறிக்கிறது.

இவையன்றித் தம் முதல் பொருளாகிய நிலம், பொழுது இவற்றின் தகுதிக்கேற்பப் பண்டைத்தமிழ்ச் செல்வர் "வேனிற்பள்ளி" "கூதிர்ப்பள்ளி" என இருவேறமைப்புடைய படுக்கை அறைகளையும் தம் வீடுகளில் கொண்டிருந்துள்ளனர்.

இப்பள்ளிகள் மாட அடுக்குகளிலோ அன்றி வீட்டின் பக்கப்பரப்புக் கூட்டுகளிலோ இடம் பெற்றிருக்க வேண்டும். இதனை,

**" வேனிற் பள்ளி மேவாது கழிந்து**
**கூதிர்ப் பள்ளி குறுங்கண் அடைத்து "** *(சிலம்பு 4: 60-61)*

**" வானுற நிலந்த மேனிலை மருங்கின்**
**வேனிற் பள்ளியேறி "** *(சிலம்பு 8:17-18)*

எனச் சிலம்பு தெளிவாக்குகிறது.

இன்று நாகரிக வாழ்விடத்தின் உயர் நிலையெனக் கருதப்பெறும் " இல்முன் புல்வெளி" சங்ககாலத் தமிழர்கள் துய்த்து மகிழ்ந்த ஒரமைப்பேயாகும். தமிழிலக்கியங்களில் காணப்படும் அனைத்து வாழிடங்களும் இத்தகு " முன்றில்" களைக் கொண்டனவாகவே காணப்படுகின்றன.

குறிஞ்சி இல்லமொன்றன் முன்னே விளாமரத்துடன் திகழ்ந்த அழகிய முன்றிற் காட்சியொன்றை,

**" பார்வையாத்த பறைதாள் விழவின்**
**நீழல் முன்றில் நிலவுரற் பெய்து**
**குறுங்கா லுலக்கை யோச்சி நெடுங்கிணற்று**
**வல்லூற் றுவரி தோண்டி "** *(பெரும் 95-99)*

என்ற சங்க இலக்கியத் தொடர்கள் சுவைபட வருணிக்கின்றன.

**" பறியுடை முன்றில்**
**கொடுங்காற் புன்னைக் கோடுதுமித் தியற்றிய**
**பைங்காய் தூங்கும் பாய்மணப் பந்தர்**
**இளையரு மதியரும் கிளையுடன் துவன்றி "** *(பெரும் 265-268)*

என்ற பிறிதொரு பகுதி நெய்தல் நிலத்து முன்றில் ஒன்றைக் காட்சிப் படுத்துகின்றது.

முல்லை நிலத்து "இல்முன்" இயல்பும் இதே இலக்கியத்தில் விளக்கம் பெறுகிறது.

**" நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்**
**கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்**
**இடுமுள் வேலி யெருப்படு வரைப்பினி "** *(பெரும் 152-154)*

மருத நிலத்து முன்றில் இயல்பும் பாங்குற,

**" வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல்வேய்ந்த மஞ்சள் முன்றில் "** *(பெரும் 353-55)*

**" பிடிக்கணத்தன்ன குதிருடை முன்றில் "** *(பெரும் 186)*

என இவ்விலக்கியத்தால் சுட்டப்பெறுவது நோக்கத்தக்கது.

இப் பெரும்பாணாற்று முன்றில் குறித்த விளககங்களை ஒருசேர நோக்கும்போது ஒரு பொதுக்கருத்துப் புலப்படுகின்றது. இது கட்டிடக் கலையியல் நோக்கில் இன்றைய கட்டிட ஒப்பனையினுள் மிகவும் இன்றியமையா இடம் பெறத்தக்க தகுதியுடையதாகும். இதனை இலக்கணப் பாங்கில் கூறப்புகின் முன்றிற்குத் "திணைமயக்கம் இல்லை" என்பது போதரும். அவ்வந்நிலத்துக் கருப்பொருள்களை உள்ளடக்கியே இம்முன்றில் அமைவது ஏற்புடையது. வாழ்வியலுக்குப் பொருத்தமுடையது என்பது புலனாம்.

இவ்வகையில் சங்கத் தமிழகக் குறிஞ்சி நில இல்முன் வாழைமர நிழல், வரையுரல், குறுஉலக்கை, நிலவெர்ளி, தினையிடித்தல் முதலியவற்றிற் குரித்தாக, நெய்தல் நில இல்முன், மணல், புன்னைநிழல், மீன்பறிகள், உணங்கு வலை இவற்றுடன்காணப்பட, முல்லை நில இல்முன்

**" நெடுந்தாட்பு தொகுத்த**
**முள்வேலி, சற்றுச் சரிவான**
**நிலவரைப்பு இவற்றுடன் திகழ "** *(பெரும் 152)*

மருத நில இல்முன் தென்னைமட்டைகள், மஞ்சள்மணம், பெரும் குதிர்களுடன் விளங்குகின்றன.

இவையாவும் பயன்பாட்டிற்கேற்ப அமைவுபெற்றுத் திகழ்வதும் உணரத்தக்கது.

கட்டிடக்கலையியலில் மிகவும் ஆர்ந்து நோக்கத் தக்கது அப்படைப்புக்களின் பயன்பாடே. 'பயன்படுதல்' தான் கட்டிடக்கலையின் உயிராகும். இவ்வகையில் சங்ககாலத் தமிழினம் பயன்பாட்டுக் கட்டிடக் கலையினைப் பாங்குறப் பயன்படுத்தியுள்ளமை நம்மனோர் உணரத் தக்கதாகும். கட்டிடம் அல்லது மனையின் ஒவ்வொரு கூறும் பயன் படத்தக்கதாக வடிவமைப்பதே தொழிலியல் நுட்பமாகும். அதன் சுருக்கத்தையே மேலே காண முடிகின்றது.

முன்றில் குறித்த வேறுசில அழகிய காட்சிகளையும் தமிழிலக்கியங்கள் தருகின்றன. அவ்வகையில்

**" வார்பயின் முன்றிலினின்ற**
**வள்ளுகிர் நாய்த் துள்ளுபறழ் "** *(பெ.பு: திருநாளை 7)*

என்ற பெரிய புராணத் தொடர்கள் பறைச்சேரி முன்றிலின் இயல்பை இயல்புறக் காட்டுவது கருத்தைக் கவர்கிறது.

**" கூதுளங் கவினிய குளவி முன்றில்**
**செழுங்கோள் வாழை "** *(புறம் : 168)*

**" மரை பிரித்துண்ட நெல்லிவேலிப்**
**பரலுடை முன்றில் "** *(புறம் : 170)*

ஆகிய தொடர்கள் முன்றில் இயற்கையோடியியைந்தமைவு பெறும் மாட்சியைச் சுட்டுகின்றன.

**" புன்முக கவலைய முண்மிடை வேலி**
**பஞ்சி முன்றில் சிற்றிலாங்கண் "** *(புறம் : 116)*

**" குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்**
**வேங்கைமுன்றிற் குரவை அயரும் "** *(புறம் : 129)*

**" மௌவலிதழ் விரிந்து மணஞ்சூழ்பந்தர்செய் முன்றில் "**

*(கல்லாடம் 83)*

**" பைங்கொடி நுடங்கும் பலர்புகுவாயில்**
**செம்பூத்தாய செதுக்குடை முன்றில் "** *(பெரும் 331-338)*

முதலிய இலக்கியத் தொடர்கள் சங்ககாலத் தமிழர் வீட்டுப்பயன் துய்த்த வரலாற்றுப் பதிவுகளே. ஒப்புறவும், மகிழ்வுறவும் வீடு அமைவது இதனாற் போதரும் தத்துவமாகும்.

# கட்டிடக்கலையும் கோளியல் இலக்கியங்களும்

உலகில் வாழும் உயிரிகளனைத்தும், தங்குவதற்கு ஓரிடத்தினை வனைந்து கொள்கின்றன. மனிதன் வாழ்வதற்கு மனையினைக் கட்டிக் கொள்கிறான். அது குடிசையிலிருந்து வானளாவிய திண்மையான கட்டுக்கோப்புகளுடன் வளர்ந்தோங்கி உள்ளது.

தான் கட்டிய கட்டிடத்தினைத் தரையிலிருந்தே எழுப்பி வெளியினை அடைத்துள்ளான். அதில் தான் விரும்பியவாறு நல்வாழ்க்கையுடன் வாழவும், தானமைத்த கட்டிடம் நீண்ட நாட்கள் பழுதின்றி நிலைக்கவும் விரும்புகின்றான்.

அவனது விருப்பத்திற்கு, முன்னறிவு விளக்கங்களைத் தருவதற்குத் தமிழகச் சான்றோர்கள் கோளியல் இலக்கியங்களைத் தம் அறிவு அனுபவத்துடன் உருவாக்கித் தந்துள்ளனர்.

மண்ணியலையும், வானியலையும் பொருத்தே கட்டிடங்களின் வயதும் உறுதிபெறுகிறது. இதனைச் சோதிட நூல்களின் பகுதிகள் கணிப்புடன் கூறுகின்றன. நிலத்தியலைச் சல்லியம் என்று இலக்கியம் விளக்கிக் கூறுகின்றது. நிலத்தடி நீரின் இயல்பினையும் நிலத்தை அகழ்ந்து கட்டிடங்களைக் கோலிக் கொள்ளும் முறையினையும் கூவ நூல்கள் குறிக்கின்றன.

கட்டிடங்கள் கட்டுவதற்குரிய தொடக்க காலத்தினையும் அமைப்பு வடிவங்களையும், முன்னதாகவே அறிந்து செயல்படுவதற்குரிய நியதி முறைகளையும் அதற்குரிய வாஸ்து என்னும் வெளிவளி ஆற்றலையும் எழுச்சிக்காலங்களையும் சோதிட நூலியல் விரிவாகத் தருகின்றது. அதன் விரிவு விளக்கமாக மனை சாத்திரங்களும் அமைந்துள்ளன.

இதனால் கோளியலில் ஒரு பிரிவாகவே கட்டிடங்கள் அமைப்பதற்குரிய அடிப்படை மூலாதாரங்கள் அறியப் பெறுகின்றன. அவற்றுள் ஒரு சில நிலப் பகுதிகளையும், கட்டிடக்கலைக்கமைந்த வாஸ்துவின் தொடர்பினையும், அது பற்றிய செய்திகளையும் கோளியல் நூல்கள் தரும் நெறியில் சுருக்கமாகக் காணலாம்.

**புவியின் ஆற்றல்**

உலகம் என்பது அறியப்படும் ஒரு மாபெரும் பருப்பொருளாகும். இதன் வடிவம் கோளம் அல்லது திரண்டவுருண்டை என்று கணிக்கப்பட்டுள்ளது. இதில், நிலம், நீர், காற்று, தீ, வெளி என்ற ஐந்து வகை ஆற்றல்கள் அடங்கி உள்ளன. ஆற்றல்கள் ஐந்து பூதங்கள் எனப்படும். ஐம்பெரும் பூதங்களையும் கூட்டித் திரண்ட கோளமாகவே பூமி உள்ளது.

மனிதனால் உண்டாக்கப் பெறும் கட்டிடங்கள் சிறப்பாகவும் நிலைப்பாகவும் அமைந்திருப்பதற்குரிய கணிப்பினைச் சோதிட சாத்திரங்கள் கூறுகின்றன. எனவே, சோதிட சாத்திரங்கள் கட்டிடக் கலைக்கமைந்த ஆதாரத் தத்துவங்களுள் ஒன்றாகவே அமைந்துள்ள பாங்கினை அறிய முடிகின்றது.

சோதிடத்தில் குறிக்கப்படும் முறையில் கட்டிடத்தினைக் கட்டுவது, வாழ்வியல் நல்ல பலன்களோடு நிலைத்து இருப்பதற்கும் ஏற்புடையதாகின்றது என்பது சாத்திரம் சுட்டும் பயனாகும்.

**வஸ்து - வாஸ்து**

நிலமும் வஸ்து என்று குறிக்கப்படுகின்றது. அதுவே பூமியாகும். வஸ்துவிற்குத் தோற்றுவிக்கும் ஆற்றல் சிறந்து விளங்குவதால் சக்தியம்சம் பொருந்தியது என்பர். சக்தியம்சம் பெண் தன்மை மிக்கது என்பது தத்துவக் கோட்பாடு. எனவேதான் ஞானிகள் மண்ணுலகைப் பூமி தேவி என்றும் பெயரிட்டுக் காட்டினர்.

வஸ்துவின் பருவகால அமைப்பின் வெளிப்பாட்டுறுப்பாகவும், சக்தியின் கருவாக்கமாகவும், படைப்புகளுக்குச் சீவாதாரமாகவும் தோன்றும் புற ஆற்றல் வாஸ்து, உலகத்தின் மேல் தோற்றங்களுக்குரிய ஜீவாதார ஆக்கவுணர்வாக அமைவதால் இதனை ஆண் வடிவு என்றனர்.

பூமியின் சக்திகளும், கிரகங்களின் தாக்கங்களும் கலந்தமைந்த சீரான கால நிலைகளில் வாஸ்துவின் செயற்பாடு வெளிப்படுகின்றது என்பதை ஒரு ஆணுருவின் எழுச்சியாகச் சோதிட நூல்கள் குறிக்கின்றன. இது சந்திரனை வைத்துக் காணும் மாதங்களில் நிகழும் இயக்கத் தேர்வின் உருவகமாகும்.

பூமியின் மேல் நிலவும் வளியிடச் சுழலில் இயங்கும் பல்வேறுபட்ட ஆற்றல்களின் கூட்டுத்தாக்கங்கள், பூமியின் ஈர்ப்பு நிலைக்கு இலக்காகி, இணைந்து ஒரு முகமாகச் செயல்படும் கால நிலையின் உருவாக்கமே வாஸ்து புருடனாகச் சோதிட சாத்திரங்கள் கணிப்புடன் குறிக்கின்றன என்பது, தத்துவ நோக்கில் அறியத்தக்கதாகும்.

இக்காலத்தில் கட்டிடங்கள் தொடங்குவதற்கும், ஆலயங்கட்கு அடிப்படைச் சடங்கு செய்வதற்கும் ஏற்புடையதாகக் கொள்ளப்படுவது சோதிடக் கணிப்பு வழக்காகவுள்ளது.

சகத்தினை வஸ்து என்றும் பெண் என்றும் ஞானிகள் குறிப்பிட்டனர். வஸ்துவின் இயற்கை அடிப்படையில் மேலோங்கி இயங்குவது வாஸ்து

எனப்பட்டது. பூமியின் இயற்கை ஆற்றல்களின் தெளிவான எழுச்சியியக்கம் காலச் செயற்பாட்டினோடு வெளிப்படுவதைக் கணித்துக் கூறுவது வாஸ்து சாத்திரமாகும். இதனால், உண்மையில் அது பற்றிய அனைத்து நூல்களும் மக்கள் வாழ்வியலுக்கமைந்த கோள்நிலை கூறும், விஞ்ஞான அறிவியல் நூல்களே எனலாம்.

இதன் கணிப்புப்படி அமைக்கப்படும் கட்டிட அமைப்புகள் நீண்ட வயதும் நன்மையும் பெற்றவையாக அமைகின்றன. கட்டுக் கோப்பாகவும் நிறைவாகவும் கட்டப்பட்ட மனையின் அடிப்படை அங்கப் பகுதிகள் மாற்றம் பெறாமல் திண்மையுடன் வடிவங்களைப் பெற்றுநிற்க, அவற்றின் மேலொப்பனையாகவே வளைவுகளும், சுதை வேலைகளும், சிற்பங்களும் உருவாக்கப் பெறுவதுடன் ஓவியங்களும் எழுதப் பெறுகின்றன.

ஒப்பனைவகைப் பலவாயினும் மூலமாக இருப்பது கட்டிடப் பகுதிகளேயாகும். இப்பகுதிகளை எவ்வெவ்வாறு அமைக்க வேண்டுமென்பதைச் சோதிட சாத்திரத்தின் ஒரு பிரிவாகும் மனையடி சாத்திரம் நன்கு விளக்கமாகக் கூறுகின்றது.

**நிலத்தின் - வாஸ்து சாத்திரம்**

ஒரு மனிதப் பிறவி தாயின் கருவில் உருவாகி நிறைவு பெற்ற போது வெளிப்பாடாகப் பிறக்கின்றது. பிறப்புக் காலத்தில் அந்தச் சீவனின் உயிர்ப்பில் வெளியுலக நுண்ணுணர்வுகள் கூடுகின்றன. ஒன்பது கிரகங்களின் சக்திப் பரிசங்கள் காற்றுடன் கலந்து உடலில் பரவி நிரவி விடுகின்றன.

இத்தகைய கிரகப் பரிசங்களாகும் தாக்கங்களுக்கு ஏற்றபடியே, அச்சீவன் வாழ்வியலில் இயங்குகின்றது. நன்மை தீமைகளைப் பெறுகின்றது. அற்ப சீவிதம், நீண்ட சீவிதம் ஆகிய நிலைகளுக்கும் இலக்காகின்றது.

இதைப்போன்ற இயல்பினையே கற்களாலும், மரங்களாலும், மண்ணாலும் கட்டப்படும் மனைகளாகிய கட்டிடங்களும் பெறுகின்றன.

கட்டிடங்கள் கட்டுவதற்குத் தொடங்கவும், கட்டிடம் நிறைவாகக் கட்டப்பெறவும், கட்டப்பெற்ற கட்டிடம் நீண்டநாள் நிலைபெற்றிருக்கவும் முன்னறிவு பெறுவதற்கு, நிகழ்கால வருங்காலப் பலன்களைக் கூறும் சோதிட சாத்திரங்கள் துணையாக இருக்கின்றன. பூமிக்கும் வாஸ்துவுக்கும் நேர் இணைப்பு உள்ளது என்பது ஆய்வு நுண்மையால் அறியப் பெறுவதாகும்.

உலகையும் சூழலையும் சோதிட ஞானிகள் பன்னிரண்டு இராசிகளாகப் பாகுபடுத்தியுள்ளனர். இது திங்களாலாகும் மாதத்தினையும் மாதங்களாலாகும் ஆண்டினையும் வகுத்து ஓரடைவில் காட்டும் உத்தியாகும்.

பூமியின் இயக்கத்திற்குத் தொடர்புடையதாக அண்டவெளியில் உலவும் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, ராகு, கேது (மாயக்கோள்கள்) ஆகிய ஒன்பது கிரகங்களின் சஞ்சாரத்தினையும் அளவிட்டுப் பன்னிரண்டு ராசிகளில் இடமாக்கினர்.

அபஜித் நட்சத்திரத்துடன் அசுவதி, பரணி, கார்த்திகை முதலாக ரேவதி வரையிலுள்ள 27 நட்சத்திரங்களையும், இராசிகளுக்கு ஆதாரங்களாக அமைந்துள்ளனர். இதில் சூரியன், சந்திரன் ஆகிய இரண்டு கோள்களும் மூலக்கோள்களாகக் கொள்ளப்பட்டன. இதனைச் சோதிட சாத்திரங்கள் தெரிவிக்கின்றன.

**கட்டிடத்தின் சீவநிலை**

நிலத்தின் மேல், மனிதன் தனது வாழ்க்கைக்கும் பிறவாறமையும் சூழலுக்கும் ஏற்பக் கட்டிடங்களைக் கட்டச் செய்கின்றான். தான் கட்ட இருக்கும் கட்டிடத்தினால் வருங்காலத்தில் தனக்கு உண்டாகும் நன்மை தீமைகளை முன்னதாகவே அறிந்து கொள்ள முற்படுகின்றான்; சோதிடத்தை நாடுகின்றான். சோதிடத்தால் அறிந்த அளவுகள் நெறிமுறைகள் ஆகியவற்றில் பிழை ஏற்படாமல், பூமியில் இடத்தேர்வு, தொடக்க நிகழ்ச்சி, அடிப்படைக்குரிய ஆழக் கணிப்பு, அடிப்படை அமைப்பு, சுவர்ப்படைக் கட்டுமானம், வாயில்கள், காற்றோட்டச் சாளரங்கள், வெளிச்சத்திற்குரிய மேற்புரைகள், மேற்கூரை, மேல்மாட அமைப்பு ஆகிய கட்டிடப்பகுதிகளில் அளவினைச் சாத்திரக் கணிப்பின்படி அமைத்துக் கட்டுகிறான்.

மேலே, மழைக்கும் வெய்யிலுக்கும் மறைப்புத் தடுப்பாகவும், மனைக்கமைந்த சேமத்தடுப்பாகவும், கூரை அமைக்கப்படுகின்றது. இப்பகுதி மாடப்பகுதியாகவும் கட்டுக் கோப்புடன் எழுப்பப் படுவதுண்டு. இவற்றிற்கெல்லாம் உரிய அமைப்பு முறைகளை ஆகமங்களும் சோதிட சாத்திரங்களும் விளக்கமாகக் கூறுகின்றன,

சோதிடக்கலை என்ற பெயரால், கட்டிடக் கலைக்குரிய நியதிகள் திட்டமாகக் கூறப்படுகின்றன. நுண்மையாக ஆய்ந்து பார்ப்போமாயின் விஞ்ஞான தத்துவக் கோட்பாடுகளாக அவை அமைந்திருப்பதனை அறிய முடிகின்றது. புவியியல், வானியல் ஆகிய இயல்புகளின் நுண்மையறிந்து கட்டிடங்களைக் கட்டும் மார்க்கத்தினையே இக்கலை நூல்கள் குறிப்பிடுகின்றன.

**உதய ராசியும் பலனும்**

பன்னிரண்டு இராசிகளில், மனித சீவன் பிறந்த நாளிலமைந்த காலத்திற்குரியதாக, அன்றைய சூரிய உதயகால அளவிலிருந்து கணிக்கப்பட்டு உதயராசி குறிக்கப்படுகின்றது. அதைப்போன்றே, கட்டிடங்கள் கட்டுவதற்கும் உதயராசி திட்டப்படுத்தப்படுகின்றது. மனிதனின் பிறப்பு ராசியை மையமாகக் கொண்டே கோள் நிலை ராசிகளைக் கணித்து அவனது வாழ்வினையும் வாழும் நாளையும் கணித்துக் கூற முடிகின்றது. உதய ராசிக் கட்டிடவுரிமையாளனின் பிறப்பு இராசியாகும் இலக்கனத்தினைக் கொண்டும் குறிக்கப்படுகின்றது. ஆயினும், கட்டிடம் கட்டுவதற்குரிய மனை முகூர்த்த காலத்தினையே உதயலக்கனமாகக் கொண்டு மனையில் வளர்ச்சி, வாழ்வியல்

ஆகியவற்றையும் கூறும் முறைமையை மனை சாத்திரமாகும் சோதிடக் கலையியல் கூறுகின்றது.

**மனை - முகூர்த்தம்**

கட்டிடம் கட்டவிருக்கும் நிலப்பகுதியில், கட்டிடத்தின் அமைப்பினை அளவிட்டு வரைவு செய்து, சோதிடக்கலை கணிப்புப்படி, தொடங்கும் இடத்தினை அளந்து குறித்து, அவ்விடத்தில், குறித்த நன்னாளில் நற்பொழுதில் தொடக்கச் சடங்குகள் செய்வதே மனை முகூர்த்தமாகும்.

**வாஸ்துவின் - உலகநிலை**

உலக நிலையில் வாஸ்துவின் தோற்றத்தினை அனுமானத்தால் சாத்திரங்கள் கூறுகின்றன. பூமியின் ராசி மண்டலங்களாகக் கணிப்பிட்டு வகுத்து அதில் மாதம் ஒரு ராசியில் சிரசு வைத்து அதற்கு ஏழாவது ராசியில் காலை வைத்து உறங்கும் நிலையில் வாஸ்து குறிக்கப்பெறுவது வழக்கு.

பூமியின் சக்திகளும், கிரகங்களின் தாக்கங்களும் சீராகப் பொருந்திய கால நிலைக்குரிய தோற்றமாகவே வாஸ்து புருஷன் உருவமாகக் குறிக்கப்பட்டுள்ளமை முன்னர்க் கூறப்பெற்றதாகும். எனவேதான் வாஸ்து பரவாஸ்து என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

**மனையின் வாஸ்து நிலை**

கட்டிடம் கட்டுவதற்கு உரியதாகக் கோலப்பட்ட மனையளவில் ஈசான்ய மூலையில் அதாவது வடகிழக்கு மூலையில் வாஸ்து புருஷன் தலைவைத்து நிருதி மூலையில் அதாவது தென்மேற்கு மூலையில் காலுமாக, இடக்கை கீழ்ப்படுத்தி வலக்கை மேலும் கொண்டு திரும்பிய உடல் நிலையில் படுத்திருப்பான் என்பது பொதுவிலக்கணம்.

**வாஸ்து இயக்கும் காலம்**

வாஸ்துவின் இயக்கம் ஒவ்வொரு மாதங்களிலும் நிகழ்வதாயினும், மனை சாத்திரங்கள் கூறுவதைக் கொண்டு, சிறந்த மாதங்கள், சித்திரை, வைகாசி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி ஆகிய எட்டு மாதங்களுமே என்று அறியப்பெறுகின்றது. இம்மாதங்களில், வாஸ்து இயக்கம் நிகழும்நாளில் குறிப்பிட்ட வேளையில் மனை முகூர்த்தம் செய்தால் நலமாகும்.

**வாஸ்துவின் - நல்ல பார்வை**

வாஸ்துவின் இயக்கங்கள் *3¾* நாழிகை - *1½* மணி அளவிலான காலத்திற்குட்பட்டனவாகும். இக்கால அளவினை ¾ நாழிகை அளவினைக் கொண்ட ஐந்து பாகங்களாகப் பகுப்பதுண்டு. ஒவ்வொரு காலப்பகுதியும் சமயம் என்ற பெயரால் குறிப்பிடப்படுகின்றது.

முக்கால் நாழிகையாகக் கொண்டு ஐந்து சமயங்களிலும், முறையே வாஸ்துபுருஷன் விழித்தெழுந்து *1.* உடல்தூய்மை, *2.* பூசை, *3.* உணவு முறையாக நிகழ்த்துவதாகக் கற்பிக்கப்பட்டுள்ளது. முதல் சமயம் முதல் மூன்றாம் சமயம் வரையில் வாஸ்துவின் இயக்க காலம் நல்ல பயன் தராது

என்றும், நான்கு ஐந்தாம் காலங்களாகிய தாம்பூலம் அருந்துதல், ஆட்சி செய்தல் ஆகிய இரண்டு சமய காலமாகிய 1½ நாழிகை நேரம்,மனை முகூர்த்தத்திற்கு ஏற்ற காலங்களைக் கொண்டது என்றும், அக்காலங்கள் செல்வங்களுடன் மேன்மைகள் பலவற்றையும் தருவனவாகு மென்றும் சாத்திரங்கள் கூறுகின்றன. *(மனையடி சாத்திரம் - 115-118)*

**மனையில் - வாயில்கள்**

கட்டும் மனையில் தான் விரும்பியவாறெல்லாம் வாயில்கள் வைப்பதற்குச் சாத்திரங்கள் இடந்தருவதில்லை.

கட்டிடத்தின் அகலமும் முகப்புமாகும் பகுதியை அளக்க வேண்டும். கூடிய முகப்பளவினை ஒன்பது பங்காக்க வேண்டும்.

*27* அடி முன்பக்க அளவு கொண்டால், மனை சாத்திரப்படி இதனை ஒன்பது பங்காக்கினால், ஒரு பங்கு மூன்று அடிகளாகும்.

வலது பக்கமிருந்து, பங்குகளை முறையே *1.* சூரியன் *2.* சந்திரன், *3.* செவ்வாய், *4.* புதன், *5.* குரு, *6.* சுக்கிரன், *7.* சனி, *8.* ராகு, *9.* கேது என்ற கிரகங்களுக்குரிய பங்குகளாகவும் இடங்களாகவும் பாவனை செய்து பிரிக்க வேண்டும். மனிதன் வாழ்வதற்குக் கட்டும் மனையில், குரு சுக்கிரன் ஆகியவர்க்கமைந்த ஐந்து, ஆறாவது பாகங்களில் தலைவாசல் வைக்க வேண்டும். இது வளர்ச்சியும் செல்வமும் தருமென்பது சாத்திரங்கள் தரும் பலனாகும். அரண்மனைக்கும், கோயிலுக்கும் புதன், குரு, சுக்கிரன் பாகங்களின் குருவை மையமாகக் கொண்டு வாயில் வைக்க வேண்டும். கட்டிடத்திலுள்ள வாசற்படிகள், நிலையின் கீழ்தளம் ஆகியவை ஒரே உயரத்தில் இருக்க வேண்டும். இதனை, சோதிட மனையியல் சாத்திரங்களும் ஆகமங்களும் குறிப்பிடுகின்றன.

**வாஸ்து வகையிலக்கணம்**

வாஸ்து லஷணம் என்னும் வாஸ்து இலக்கணம் இருவகைப்படும். ஒன்று அம்ச வாஸ்து, மற்றொன்று பரவாஸ்து என்பனவாகும்.

*1.* பூமி தனக்கே ஐக்கியமாக்கிக் கொண்டு திரண்டுருவான ஐந்து சக்திகளின் ஒருங்கிணைந்த பரிணமிப்பு. இதனை, வஸ்துவாம்ச வஸ்து என்பது தத்துவ நூற் கொள்கை.

*2.* பூமியின் ஈர்ப்பில் இணைந்தும் இணைவு பெறாமலும் இயங்கும் கிரக, நட்சத்திர இயக்கங்களின் காலநிலை கூட்டும், ஆற்றல்களுமாகிய தாக்கம் இதனை, பரவஸ்து என்பர். பரம் என்பது பூமிக்கு வெளியே உணர்வுத் தொடர்புடன் இயக்கும் ஆற்றலின் அடங்கிய வடிவம் என்று கூறலாகும்.

**கட்டிட மனையியல்**

கட்டிட மனை வாஸ்துவாம்சம் பொருந்திய அளவுக்குட்பட்ட பாகுபாட்டினை உடையதாகும். இதனை வடநூலார் கிரகஸ்தானம் என்பர்.

இதில் கிழக்கில் - சமையல் புரை, தென்கீழ்த் திசையில் பசுவர்க்கப்புரை, தெற்கில்-தொழுவம், தென்மேற்கில் - மரங்கள், மேற்கில் - எருமைத் தொழுவம், வடமேற்கில் - தானிய சேமிப்பு, வடக்கில் - சாப்பிடும் இடம், வடகிழக்கில் - நீரோடுங் கால், தென்மேற்கில் - படுக்குமிடம் என்ற வகையில் அமைக்க வேண்டுமென்று,குமார சுவாமியம் என்னும் சோதிட நூலில், கிரகவியல் படலத்தில் *(1)* கூறப்பட்டுள்ளது.

மனையடி சோதிட சாத்திரக் கணிப்புப்படி, மனைக்குரிய உள்பாகுபாட்டில் சிறிது வேற்றுமை காணப்படுகின்றது. அவையாவன :

மனையில் வடகிழக்கிலிருந்து எட்டுத் திக்கிலும் முறையே, பூஜை அறை, நீர் சேமிப்பு, சமையலறை, படுக்கையிடம், சுவடி அறை, உணவுச்சாலை, பசுத்தொழுவம், தானியக்களஞ்சியம், பண்டாரம் என்ற பாகுபாட்டுடன் நடுவில் காற்றும் சூரிய ஒளியும் பரவும் முற்றத்துடன் அமைக்கப்பட்டதாக இருத்தல்.

தன் கைவிரல் சாணால் எட்டு அளவினைக் கொண்டது உடம்பு. எட்டு அங்கங்களை முறையாகக் கொண்டது. மனிதன் வாழ்வதற்குக் கட்டிக்கொண்ட மனைக் கட்டிடங்களும், அவ்வாறே அமைய வேண்டும் என்பதனை இவ்விலக்கியங்கள் உணர்த்துகின்றன.

தெய்வங்களை நிறுவும் கோயில்கள், *3,5,7,11* அங்கங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். அரசன் வாழும் அரண்மனை *16* அங்கங்களுடன் நான்கு பகுதிகளாக இணைந்திருக்க வேண்டும். இது சோதிட மனைநூல் கணிப்பாகும்.

**கோயில் :** கருவறை, முகவாயில், திருவாயில், பெருமண்டபம், முன்மண்டபம், திருமுற்றம், திருச்சுற்று, விமானம், கோபுரம், திருமாளிகை, ஆவரணம் என்ற அங்கங்களைப் பெறுவதாகும்.

**அரண்மனை:** மாடம், கூடம், மாளிகை, கோபுரம் அங்கம் - நான்கு. பாகம் - எட்டு, அர்த்தம் - பதினாறு என்பதாகும்.

**உள்ளீடு காட்டும் சல்லியம்**

கட்டிடங்கள், தரையில் ஆழ விடுபறித்து அதில் அடிப்படை செய்து, அதிலிருந்தே சுவர்க்கால்களாக எழுப்பப்படுகின்றன. இம்முறையில் எத்தகைய கற்கட்டிடங்களும் மாற்றம் பெறவில்லை.

எனவே, குறிப்பிட்ட நிலப்பகுதியில் கட்டிடம் கட்டுவதற்குரிய, சூழ்நிலை விடுவெட்டிப் பறிப்பதற்கு முன்னர், அந்நிலம், எத்தகைய படிவங்களைக் கருவாகிக் கொண்டுள்ளது என்பதனை அறியச் சல்லியம் என்ற பெயரிலமைந் சாத்திரம் விளக்கம் கூறுகின்றது.

சல்லியம் என்பது, நிலத்தடியில், இயற்கையாகவும் செயற்கையாகவும் அடைவு பெற்றிருக்கும் இயற்கைப் படிவங்களையும் பொருள்களையும் நீரோட்டத்தினையும் நுட்பமாகக் கூறுவது என்பதாகும். இந்நூல், கிரகங்களின்

நடைமுறை சஞ்சாரத்தினையும், அவ்வவற்றிற்குரிய கதிர் அளவினையும் அளவிட்டுக் கணித்து, அதன் பலனாகத் தரையில் உள்கருவினை உணர்த்தும் பாங்குடன் அமைந்துள்ளது. எனவே, சல்லியம் என்பது நிலத்தடிக் கருவுரைக்கும் சாத்திரம் என்றும் பெயர் பெறுவதாகும். இதனை, சிநேந்திரமாலை என்னும் பழமையான சோதிடநூல், ஓர் இயலாகவே உரைக்கின்றது.

சல்லியம் நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்றாகவே வளர்ந்து வந்துள்ளது. பூமிக்குக் கீழ் இருப்பனவற்றை அறிவிக்கும் ஆருடக் கலையாகத் தமிழகத்தில் வள்ளுவர் என்னும் பழங்குடியினர் இதனை வழிவழியாகக் கையாண்டு வந்துள்ளனர்.

கட்டிடங்கட்டுவதற்கு ஏற்புடைய நிலத்தின் உள்பாகுபாட்டினைச் சல்லியத்தால் அறிந்து, அதன்படி அடிப்படையிட்டுச் சுவர்க்கால்களை எழுப்பிய மனை நல்ல வளத்துடன் நீண்ட கால வாழ்வினையும் தரும் என்பது இந்நூல் தரும் குறிப்பாகும்.

**கால சாத்திரம்**

நிலத்தடியில் நீருள்ள பகுதியினை நுட்பமாக அறிந்து அகழ்ந்து பயன் பெறுவதற்குரிய ஆருடக் கணிப்பினைக் கூறுவது கூவசாத்திரம் என்பதாகும்.

தரையின் கருவான மண், மணல், பாறை ஆகிய படிவங்களையும், அதனடியில் ஊற்றோட்டமாக அமைந்த நீரின் இயல்பினையும் மிகத் தெளிவாகவும் திட்டமாகவும், தடயச் சான்றினைக் கொண்டும், கிரகங்களின் கணிப்பு வரவினைக் கொண்டும் உரைக்கும் சாத்திரம் இதுவாகும்.

இச்சாத்திரப்படி நிலத்தினை அகழ்ந்து நீரினைக் கண்ட இடத்தில் எந்தெந்த அமைப்பில், கிணறு அல்லது துரவுக்கமைந்த கட்டிடங்களைக் கட்ட வேண்டுமென்பதையும் கட்டிட வடிவினையும் இந்நூல் கூறுகின்றது. எந்த வடிவில் அமைந்தால் நல்ல பலனாக விளங்கும் என்பதனையும் குறிக்கின்றது.

கட்டிடங்களுக்கு அடிப்படையாக வடிவ அமைப்பு இன்றியமையாததாகும். சாத்திர விதிகளுக்கு மாறுபாடாக, விரும்பியவாறு மனைக் கட்டிடங்கள் கட்டப்பெற்றால் அவை பயன் பெறுவதில்லை என்பன போன்ற கட்டிடங்களுக்காகும் நியதிப் பயன்களையும் கூவ நூல்கள் குறிக்கின்றன.

நிலத்தடி நீரினைக் காட்டும் கூவசாத்திரப் பாடல் ஒன்றினை எடுத்துக் காட்டலாகும்.

> **“கூவலின் ஆழம் குறிக்குங்கால் கோளோடு**
> **மேவும் இராசி வியன்கதிராம் - மேவிய**
> **சிக்கெனவே ஆழம் தெரிந்து நிலஞ் சோதிக்கத்**
> **தக்கக் கதிரறிந்து சாற்று ”** **(கூவநூல் - 14)**

ஒரு சீவனுக்குத் தன்மையும் வாழ்வும் வயதும் அமைந்திருப்பதைப் போன்றே, கட்டிடங்களுக்குப் பொருந்திய வாழ்வியல் உண்டென்பதனையும், வாஸ்துவின்

இயக்க காலங்களாகச் சோதிட நூல்கள் வகுத்துக் காட்டும் காலத்தில் மனை தொடங்குவதால், அம்மனை நீண்ட வயதுடையதாக இருக்குமென்பதனையும் மனையில் உள் பாகுபாட்டினால் வாழ்வு நற்பயனுடன் திகழும் என்பதனையும் கோளியல் நூல்களும் கட்டிடங்கள் கட்டுவதற்கு மூலாதாரமான நிலத்தின் பாங்கினைச் சல்லிய சாத்திரமும், நிலத்தடி நீரினைக் கூவ சாத்திரமும் முன்னறிவாக உணர்த்துகின்றன.

இவ்வாறு கட்டிடங்களின் ஆதாரமாகும் புவியியல், வானியல், வளியியல், கிரகங்களின் கதிரியல் தாக்கம் ஆகிய நுட்பங்களைச் சோதிட நூலியல்கள் கட்டிடக் கலையியலுக்கு ஆதாரமாகத் தருகின்றன.

# கட்டிடக்கலை ஆய்வுக்களங்கள்

உலக அரங்கில் இந்தியாவிற்குள்ள பெருமையும் வியக்கத்தக்க அரும் பொருளும் அதன் மரபுவழிப் பண்பாட்டுக்கலைச் சின்னங்களேயாகும். குறிப்பாகத் தமிழகம் பெற்றுள்ள தகுதி இலட்சக்கணக்கில் உள்ள கோயில்களும் ஆயிரக்கணக்கில் உள்ள பிற நினைவுச் சின்னங்களும், கோட்டைகளும், கலைச் சின்னங்களுமாகும். இவற்றை ஆய்ந்து ஆழ்பொருட்களைப் புலப்படுத்துவது அருமை வாய்ந்ததொரு செயலாகும்.

அம்மரபுச் சின்னங்களின் விளக்கவரவுகளாகச் சமயச் சார்பு நிலையில் வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் முதலியன இடைக்காலத்தில் எழுந்துள்ளன. தலபுராணங்கள் இவற்றின் தொடர்பாகவும், குறுக்கமாகவும் ஒரு பொருள் பற்றியனவாகவும் எழுந்து மக்களின் சமய அறிவு-ஆய்வுக்களங்களுக்கு அறிமுகமாகியுள்ளன. வரலாற்றுணர்வு மிக்க ஐரோப்பியர் தமது ஆட்சியில் கட்டிடக்கலைச் சின்னங்களைப் பாதுகாத்தல், பதிவு செய்தல், விளக்கம் செய்தல் என்ற முறையில் தொகுப்பு நூல்களை வெளியிட்டுத் தொகுப்பாய்வுகளை வழங்கியுள்ளனர். இராபர்ட் சிவல் போன்றோர் எழுதிய கலைச்சின்ன வெளிப்பாட்டு விளக்கங்கள் மேலாய்வு விளக்கங்களையும் பெற்றுள்ளன. இந்தியன் ஆண்டிக்வரி, ஆண்யுவல் ரிபோர்ட், எபிகிராபிகா இண்டிகா, சவுத் இண்டியன் இன்ஸ்கிரிப்சன்ஸ் முதலிய பல்வேறு பெரு நூல்களும், தனிப்பட்ட கலைச்சின்ன ஆய்வு நூல்களும் ஆங்கிலேயர் ஆட்சியில் தக்க தரத்துடன் வெளி வந்துள்ளன. மேலும் டிஸ்ரிக்ட் கெஜட்டீர், வரைபடங்கள், கீழ்த்திசைச் சுவடிப் பதிப்புகள், ஆவணக்காப்பகங்கள் முதலியன தமிழகக் கட்டிடக்கலைத்துறையில் சான்றுகளாகத் திகழ்ந்து வருகின்றன.

நாகையில் இருந்த புத்தவிகாரக் கலைத்திறனை இந்தியன் ஆண்டிக்வரி, வாயிலாகத்தான் அறிந்துகொள்ள முடிகின்றது. சுவடற்றுப்போன பல கலைச்சின்னங்களை ஆங்கிலேயரின் உணர்வு பூர்வமான பதிவு வழி அறிந்து வியக்க முடிகிறது. ஆங்கிலேயருக்கு முதலில் உதவிப் பிறகு தோளோடு தோள் நின்று இத்தகு முயற்சியில் அரும்பணி ஆற்றிய இந்திய அறிஞர் சிலரின் வழி நடத்தலின் விளக்கம் பெற்ற அடுத்த

தலைமுறையினர் சுதந்திர இந்தியாவில் நிகழ்த்திய கட்டிடக்கலைத்துறை தொடர்பான ஆய்வுகள், வாய்ப்புகள், சூழல்கள் இவற்றுக்கேற்றபடி வடிவங் கொண்டிருப்பினும் தகுதியில் சிறந்தே விளங்கின. அவர்தம் வழிமுறையினரால் மேற்கொள்ளப்பெற்ற அடுத்த நிலை ஆய்வுகளை கி.பி. *1960*களில் காணமுடிகிறது. இவை ஒரு பொருள் பற்றியனவாக ஆய்வாளரின் நோக்கிற்கேற்ப முயலப்பட்டவையாக விளங்கின. *1970*களிலும் அதன் பின்னரும் எழுந்து வருகின்ற ஆய்வுகளில் தன்முனைப்பு ஒன்றையே பெரும்பான்மையுறக் காண்கிறோம். வாய்ப்புகள் பல்கி இருப்பினும் ஈடுபாடும் முனைப்பும் தளர்வுற்றே காணப்பட்டுள்ளன. இவையன்றிப் பெறுவதற்காக எழுதப்பட்டு வருகின்ற கட்டிடக்கலை ஆய்வேடுகள் பல கட்டிடக்கலை எது *?* புராணம் எது *?* வரலாறெது*?* சிற்பவியல் எது *?* இலக்கியக் குறிப்புகள் யாவை *?* என்ற புலனறியாச் சூழலில் கடமை உணர்வுடன் இட்டு நிரப்பும் பணியாக அமைந்துள்ளமையினை நாம் நன்கறிவோம். ஆய்வுகள் வெறும் தரமில்லாத விளக்கங்களாக இருந்து வருகின்றன. முதுகலை வரலாறு, தமிழியல், சமூகவியல், பொருளாதாரம், அரசியல், நிர்வாகம் முதலிய துறை மாணாக்கர் அவரவர் கல்வி நிறுவனம் அமைந்துள்ள இடத்தைச் சுற்றியுள்ள கோயில்களை அல்லது தமக்கு அறிமுகமான கோயில்களை அல்லது தமது வாழ்விடத்திற்கு அருகாமையில் உள்ளதை ஆய்வேட்டிற்குரித்தாக்கிக் கொள்வது வழக்கமாகியுள்ளது.

எம்.பில், பிஎச்.டி. மாணாக்கரும் இத்தகு கோயில்களை ஆய்விற்கு உரித்தாக்கி வருகின்றனர். ஒரு பொருள் குறித்தனவாயினும் ஆங்கிலத்தில் இன்றைய முதுகலைத் தரத்தில் எழுதுகின்ற ஆய்வேடுகளைப் பொருட்சிறப்பிலா நிலையிலும் உயர்த்தித் தமிழில் எழுந்த காரணத்தால் தாழ்த்தியும் வருகின்ற சூழல் உள்ளமை மறைக்கற்பாற்றன்று. ஆங்கிலத்தில் ஆய்வேடுகள் வரலாற்றுத் துறையிலும் தமிழில் அமைவன தமிழ்த்துறையிலும் அடையாளங் காணப்படுகின்ற அவலம்வேறு. இத்தகு சூழலில் வரலாற்றுத்துறையில் அமைகின்றவற்றை எளியதொன்றாகவும் கண்டு காட்டுகின்ற சிறுமை பரவலாக இருப்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ இயலாது. இந்நிலையில் கட்டிடக்கலை ஒன்றாலேயே கோயில்களை ஆய்வு செய்யும் முறை களைந்து, புதுப்புதுக் களங்களையும் சிக்கல்களையும் ஆய்வு செய்யும் பாங்கு தற்போது முயலப்படுகிறது. அவ்வகையில்,

1. கோயிற் கட்டிடக்கலை (சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிருத்துவம், இசுலாம், கிராம, வீட்டுத் தெய்வக்கோயில்கள்)
2. நினைவுச் சின்னங்கள் (உப்பரிகை, மாளிகை, அரண்மனை, கோட்டை, கல்லறைகள், பாலங்கள், சுருங்கைகள், மண்டபங்கள், நிலவறைகள், கூடங்கள், சத்திரங்கள், சாவடிகள் முதலியன)
3. அகழிகள், குளங்கள், நீர்த்தேக்கங்கள், நீரோடு கூடங்கள், ஏரிகள், கேணிகள் முதலியன.

4. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் போன்ற நிலப்பாகுபாட்டு அமைப்பில் கட்டிடக்கலை (வாழ்வியற் கட்டிடக்கலை) நிலவியற் கட்டிடக்கலை.

5. வாழ்விடக் கட்டிடக்கலை (குடிசைகள், கூரை வீடுகள், மச்சு வீடுகள், மாடி வீடுகள் முதலியன) தொழில் நுட்பங்கள் பயன்பாட்டுப் பொருட்கள், எளிய அரிய அறிவியல் கூறுகள்.

6. தமிழகத் தனித்திறக் கட்டிடக்கலையும், பிற நாட்டு, மத, இனக்கலைத் தாக்கமும் (ஆங்கில, பிரெஞ்சு, டேனிஷ், போர்ச்சுகீசிய கலைத் தாக்கம்).

7. நகரமைப்புகளும் வாழ்வியலடிப்படை வாய்ப்புகளும் (குடிநீர்க் குழாய்கள், சாய்க்கடைப் பாதைகள், சந்துகள், முட்டுச் சந்துகள், தெருவமைப்பு, சாலை அமைப்பு, நகர அமைப்புகள் முதலியன)

8. கட்டிட ஒப்பனையியல் (சுவரோவியம், விதான ஓவியம், சிற்பம்) கொடிக்கருக்குச் சுதை ஒப்பனை போல்வன)

9. கட்டிடப் பாதுகாப்பியல்

10. கட்டிடக்கலை விந்தைகள்

11. கட்டிடக்கலையும் தமிழிலக்கியங்களும்

12. தமிழில் வாழ்வியலும் கட்டிடக் கலையும்

போன்ற புதுப்புதுத் தலைப்புகளில் எழும் சிக்கல்களுக்கு விளக்கத்தோடும் முயற்சிகளைப் புதியதாக மேற்கொள்ளலாம்.

இவ்வகை ஆய்வு ஆயப்புகுமுன் இதுவரை தமிழகக் கட்டிடக்கலைத்துறைத் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றின் விளக்க அடைவு ஒன்றினைச் செய்தாக வேண்டும்.

இரண்டாவதாக, இக்களங்கள் தொடர்பாக இந்தியாவிலும், பிற நாடுகளிலும் மேற்கொள்ளப் பெற்றுள்ள ஆய்வுகளைப் பட்டியலிட்டு அடைவு செய்தாக வேண்டும்.

மூன்றாவதாக இத்தகு ஆய்வுகட்கு மூல நூல்களாக இன்றைய நாள்வரை வெளிவந்துள்ள முதன்மைச் சான்று நூல்களை உரிய விளக்கங்களுடன் அடைவு செய்து அறிந்தாக வேண்டும்.

அணுகும் ஆய்வு நெறிகளாக நுண்ணாய்வு அல்லது விளக்கவியலாய்வு என்பவற்றை ஏற்கலாம்.

புதிய தலைப்புகளைத் தெரிந்துதெடுப்பது என்பது காணப்பட்ட பன்னிருகளங்களில் இலகுவாக அமைவதாகும். எடுத்துக்காட்டாக ஒரு கோயிலைப் பற்றிப் பல ஆய்வுகள் எழுந்திருப்பினும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புதிய கோணத்தில் அமையலாம்.

ஆய்வுகளைச் செய்ய முனைவோர் ஒரு திறமான எல்லாத் தலைப்புகட்கும் பொதுவாகப் பொருந்தும் சில படிவ அமைதிகளைக் கடைப்பிடித்தல் ஒன்று

அவ்வகையில்,

1. படித்த நூல்கள் / பார்த்த தரவுகள்
2. எழுந்த சிக்கல்கள் / தலைமைச் சிக்கல்
3. தரவுதேடல் - பதிவுகள்
4. கருதுகோள்
5. வகுப்பீடும் பகுப்பீடும்
6. ஆய்வுமுறை
7. புலப்பாடுகள்
8. விதிகள்
9. கருதுகோளும் விதியும் - சரிபார்த்தல்
10. முடிவுகளும் கருத்துகளும்
11. புகைப்பட வரைபட விளக்கப் பின்னிணைப்புகள் என்ற

பாகுபாட்டைக் கொள்வது நன்று.

இவ்வகையில் கட்டிடக்கலை பற்றிய ஆய்வுகளைப் புதுப்புதுக் கோணங்களில் அமைத்துத் தமிழகத்தின் பண்டைத் தொழில் நுட்பக் கூறுகளைப் புலப்படுத்தும் முயற்சி இற்றை நாள் தொழில் நுட்ப அறிவிற்கு விளக்கம் சேர்ப்பதாக அமையும். ஆய்வின் முடிவுகளைத் தக்கார் பதிவு செய்வதும் பயன்படுத்த வேண்டியதும் நாட்டிற்குச் செய்யும் ஆய்வுப்பயன் எனலாம்.

# உலக மரபுச்சின்னப் பாதுகாப்பும் தமிழகத்தின் தனிப்பெரும் தகுதியும் (விளக்க அறிமுகம்)

மனித நாகரிகத்தின் சுவடுகளாகவும் சான்றுகளாகவும் திகழ்பவை அவனது கட்டுமானங்களேயாகும். குரங்கிலிருந்து உருப்பெற்ற மனிதன் தன் அறிவு வளர்ச்சியின் மிகுதியில் பழைமை பாராட்டுதல் புதுமைகளைப் போற்றுவதற்கே. அவ்வகையில் "உலக அதிசயங்கள்" ஏழும் கட்டுமானச் சின்னங்களாகவே உள்ளமை கட்டிடக்கலைக்கமைந்த பெருமிதமாகும். எகிப்தின் பிரமிடுகளும், சீனப்பெருஞ்சுவரும், பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரமும், இந்தியாவின் தாஜ்மகாலும், ரோட்ஸ் தீவின் கடற் சிற்பக் கட்டுமானமும், கட்டுமானப் பொறியியற் சிந்தனை மற்றும் மனிதனின் செயற்பாட்டில் விளைந்த அற்புதங்களாகும். எனவே, உலகில் அதிசயமானது கட்டிடக்கலைப் படைப்புகளே என உறுதியாகக் கூறலாம்.

யுனெஸ்கோ அமைப்புத் தோன்றிய பிறகு, "உலக மரபுச் செல்வங்களைப்" போற்றிப் பாதுகாக்கும் செயலாக்கம் பெற்றது. உலகில் உள்ள அரிய கட்டுமானச் சின்னங்களே இப்பட்டியலிலும் இடம் பெற்றுள்ளன. இம்மரபுச் சின்னங்கள் உள்ள இடங்கள் உலகில் எந்த நிலையிலும் போர் மூண்டாலும் குண்டு போடப்படாத இடமாக அனைத்து நாடுகளாலும் ஒப்பேற்கப் பெற்றுள்ள சூழல், கட்டிடக்கலையின் இன்றியமையாமையை நன்கு விளக்குவதாயுள்ளது. இவை வெறும் கட்டிடங்களாக அன்றிக், கலைப் பண்பாட்டு அறிவியல் வளர்ச்சியில் மனித இனம் பெற்றுள்ள வளர்ச்சிச் சூழலை நன்கு புலப்படுத்துவனவாக உள்ள தனித்தன்மையே. இத்தனிச் சிறப்பின் அடிப்படைக் காரணமெனலாம். இக்கட்டுமானங்கள் மனித இனத்தின் நாகரிக வளர்ச்சியின் அடையாளங்களாகவும், கலைப் பண்பாட்டுச் சான்றுகளாகவும், அறிவியல் தொழில் நுட்ப விளைவாகவும் என்றும் நின்றிருக்கும் நிலை உறுதிப்பாடுகள் ஆகும். இவற்றின் பயன் கடந்த காலத்தை நிகழ்காலத்துடன் ஒருங்கிணைக்கும் பணி எனலாம். இவற்றை வருங்காலத்திற்கு உரியவையாக உரித்தாக்குவது மனிதனின் கடமையாகும்.

இம்மரபுச் சின்னங்களில் பொதிந்து கிடக்கக் கூடிய வரலாற்று மெய்ம்மைகள் மனிதப் பண்பாட்டை வளர்க்கத்தக்கவையாகும்.

அரசர்களும், செல்வர்களும் தமது முருகியல் சிந்தனைகள், வாய்ப்புகள், தேவைகள், உணர்வுகள், இவைகட்கேற்ப இக்கட்டுமானங்களை உருப்படுத்திக்கொண்டு வாழ்ந்து மகிழ்ந்ததும், வணங்கி மகிழ்ந்ததுமாகிய இக்கட்டுமானங்கள், மனித இன வளர்ச்சியில் பண்பாட்டு நோக்கில் பல மரபுகளைப் படைத்துக் காத்துவரும் இன்றியமையாமை உணரத்தக்கதாகும்.

இவ்வகையில் உலக வாழ்வின் மரபுப் பண்பாட்டை விளக்க வல்லனவாக, இந்தியாவின் பதேபூர் சிக்ரியிலுள்ள அரண்மனை, முகலாய மரபிற்கும், இங்கிலாந்திலுள்ள பிரபுக்கள் மாளிகைகள் ஆங்கில மரபிற்கும், சீனாவின் மிங் அரசர் அரண்மனைகள் அந்நாட்டு மரபிற்கும், பிரான்சின் சாம்போர்ட், பண்டைன் புளோ, வர்செய்ல்ஸ் ஆகிய இடத்திலுள்ள அரண்மனைகள் அந்நாட்டு மரபிற்குமுரிய சான்றுகளாகும்.

ஆளுகையை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்ட மரபுக்கலைச் சின்னங்கள் உலகெங்கிலும் காணப்படுகின்றன. அவை ஒவ்வோராட்சி மரபின் ஆளுகை, புகழ், எதிர்நோக்கு, சடங்கு முதலியவற்றின் சாயல்களுக்கேற்ப வடிவாக்கம் பெற்ற தகுதிகளுடன் விளங்குவது தெள்ளிது. அம்முறையில் இந்தியாவின் ஹம்பி, சீனப் பெருஞ்சுவர், வேல்ஸ்ஸின் முதல் எட்வர்ட் அரசரின் அரண், மைக்கோலின் டியோட்டி ஜூவாக்கன், ஈரானிலுள்ள பெர்சிப்போலிஸ் ஆகிய மரபுச் சின்னங்கள் திகழ்கின்றன.

அரசுகளின் நிலைப்பாடும், செல்வ வளமும், தொழில் வளமும், வலிமையும், ஆர்வமும் தான் கட்டிடக்கலை வளர்ச்சிக்கு அடிப்படைகளாகும். அவ்வழியில் கட்டுமான வளர்ச்சிப் பெருக்கங்கள் அமைவது இயல்பு. இம்முறையில் துருக்கியின் இஸ்தான்புல், சிரியாவிலுள்ள ஆஸ்லோ, மொராக்கோவிலுள்ள பெஸ் போன்ற வரலாற்றுப் புகழ் பெற்று வாழ்ந்து வரும் நகரங்கள் காணப்படுகின்றன. இவ்வகை நகரங்களிடையே கூடுதல் சிறப்புக்களுடன் தனித்தன்மை பெற்றுத் திகழ்கின்றவையும் உண்டு. அவை மிதக்கும் நகரமாகிய வெனிஸ், டோலிடோ, புளாரன்ஸ், புடாபஸ்ட், கிராக்கோ போல்வனவாகும்.

ஒரு நாட்டரசு பிறிதொரு நாட்டினைக் கைப்பற்றி ஆளுகை செய்யும்போது, தமது தாய்நாட்டுப் பாணியிலேயே தம்மால் வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளிலும் கட்டுமானக் கலைப்படைப்புகளையும் உருவாக்கம் செய்வது இயல்பு. அம்முறையில் இராசராச சோழனின் கலைப்படைப்புகளை இலங்கையிலும், விஜயநகர ஆட்சியாளரின் கலைப்பாணியில் சோழ பாண்டிய ஆட்சிப்பரப்பின் பிற்காலப் படைப்புகளிலும் காணமுடிகிறது.

மெக்சிகோவிலுள்ள ஒவாச்காக்கோ, பெருவிலுள்ள குஸ்கா, பிரேசிலில் உள்ள சாம்பவடார்டி, பாகீயா, கனடாவின் கியூபைப் போன்ற அயல்நாட்டு நகரங்களிலும், இந்தியாவின் கோவா, பாண்டிச்சேரி, தரங்கம்பாடி போன்ற

ஊர்களிலும் குடியேற்ற ஆதிக்க அடிப்படையில் அமைந்த ஐரோப்பியப்பாணியிலான கட்டிடக்கலைச் சின்னங்களைக் காணலாகும்.

எகிப்திய நாட்டின் கெய்ரோவும், ஏமனின் தமிழ் நகரம் எனப்புகழ்பெற்ற ஷிபாமும் என்றும் மாறாத பண்பாட்டுச் சமூகச் சூழலின் சான்றுகளாகும். இந்நூற்றாண்டின் தாக்கம் மெல்லென அங்குப் பரவிவரினும், இச்சுவடுகளாக இந்நகர் கட்டுமானங்களுடன் இயைபுற்ற இம்மக்களது வாழ்வியல் மரபுவழிப்பட்டதாகவே திகழ்வது கண்கூடு.

கைவிடப்பெற்றது; பாழடைந்து கிடப்பினும் கடந்தகாலப் புகழுடன் வரலாற்றையும் சமுதாயத்திற்கு அறிவுறுத்தலையும் புகட்டுவதாக உள்ள சில நகரங்களுள் குறிப்பிடத்தக்கவை எகிப்தின் மைப்பிஸ், கிரீசின் டெல்பி, ஈராக்கின் ஹாட்ரா, பெருவின் சான்சான் ஆகியவையாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகப் பேரரசின் தலைநகராக இருந்து தொடர்ந்த ரோம் நகரின் சிறப்பு வரலாற்றினடிப்படையிலும் மனிதப் பண்பாட்டடிப்படையிலும் பெரிதும் போற்றிக் காக்க வேண்டிய சின்னமன்றோ? இதனைப் போன்றே இந்தியாவின் தஞ்சாவூரும், மதுரையும், இலங்கையின் அநுராதபுரமும், இஸ்ரேலின் ஜெருசலமும் வரலாற்றுப் புகழ்மிக்கவையாகும். இந்த நகரங்கள் கடந்து வந்த கால வெள்ளத்தில் மாற்றங்கண்ட அரச மரபுகள் எத்தனையோ அத்தனைக் கட்டுமான மரபுகளையும் கலைக்கலப்புப் படைப்புக்களையும் கொண்டு அமைந்திருப்பது இயல்பும் பெருமிதமுமாகும்.

தமிழகத்தின் புதுக்கோட்டை போல பிராசிலியா நகரமும் திட்டமிடப்பட்டு அமைக்கப்பெற்ற நகரமாகும். இக்கட்டுமானங்களின் பெரும்பரப்பு பொதுவாக ஓர் உண்மையை விளக்குவது தெள்ளிது. அது சேர்ந்து இருப்பது பலரும் ஒருங்கு சேர்வது என்ற பொருளதாகும். அழகியலும், சமயவியலும் இதனுடன் இணைந்து காணப்பெறும்.

இலக்கியங்கள் கருத்துப் பொருளைத் தந்து முருகியலையும் அறிவியலையும் வளர்ப்பதுபோல நினைவுச் சின்னங்கள் "மானுடம்" பற்றிய கருத்துக்களைத் தருவதோடு "எதுவும் மாற்றத்திற்குட்பட்டது" என்ற அடிப்படைத் தத்துவத்தையும் விளங்க வைக்கிறது. இப்புலப்பாடுகள் சில மரபுகளுடன் இயல்பான தோற்றமளிக்கின்றன. இம்மரபுகள் தம் மரபுச் சின்னங்களையும் போற்றியுள்ளமையினை உணரமுடிகிறது. பெரும்பான்மையான பிற மரபுச் சின்னங்களையும் தம்மரபினவாக மாற்றிக் கொள்வது பண்டைய காலத்துப் பெருவழக்காகும். இவ்வகையில் தமிழகத்துப் பல்வேறு சமண, பௌத்தக் கோயில்கள் வைதீக சமயக் கோயில்களாக உருமாற்றம் பெற்ற சூழல் போன்றே எகிப்தியக் கோயில்களும், ரோமின் பாந்தியன் கோயிலும் தேவாலயங்களாக மாற்றம் பெற்று உள்ளன.

வேற்றுமையில் வேற்றுமை கண்ட காலத்தியத் தாக்கத்தில் மரபுச் சுட்டலில் சிக்கல் இல்லை. ஆனால் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு வருவதாகச் சுட்டப்படும் தற்காலத்தில் சமுதாய மரபுச் சின்னங்களிடையே

மரபுகாண்பதில் சிக்கலதிகம் உண்டு. ஆழ்ந்து உணர்ந்து, அணுக வேண்டிய இத்தகு சிக்கல்கள் தமிழகக் கலைப் படைப்புகளில் நிரம்பவும் உண்டு என்பதனை நாம் எப்போதும் நினைவிற் கொள்வது நல்லது. உணர்வு பூர்வமான ஆய்வு, இனத்திடையே எழுச்சி தரலாம். அறிவு பூர்வமானதோ வெறும் மெய்ம்மைகளைத் தரலாம். இரண்டுமே பிறழ்ந்து செல்வதற்கும் வாய்ப்புண்டு. எனவேதான் உணர்வு பூர்வமான அறிவியலடிப் படையிலான ஆய்வுகள் தரமானவையாகத் தோன்றுகின்றன.

இவ்வகை நோக்குகளில் இம்மரபுச் செல்வங்கள் புலப்படுத்துகின்ற நுட்பங்கள் எண்ணிறந்தனவாகும். அந்நுட்பங்களின் வழி, அவ்வந்நாட்டு மரபு அடிப்படைகளும், வளமையும், எதிர்காலப் படைப்பு வளர்ப்புகளும் ஒருங்கே முக்காலப் பரிணாமத்தில் கிடைப்பது உண்மை. அம்முக்காலப் படைப்பு வளத்திற்குரிய அடிப்படைக் காரணங்களாகத் திகழும் இயற்கைச் சூழலும் மனிதப் பண்பாடும் ஒருங்கிணைந்த தோற்றமாகவே மரபுச் சின்னங்கள் தோற்றங் கொள்கின்றன. அச்சின்னங்கள் கட்டிடக்கலைச் சின்னங்களே என உறுதியாகக் கூறமுடியும்.

இச்சின்னங்கள் இயற்கைச் சூழலில் இடம் பெற்றுள்ளமையால் மனித சமுதாய அருமையாலன்றி, இயற்கையின் காலத்தேய்வு, பாதுகாப்பின்மை, போற்றப்படாமை, பாழ்படுதல், காற்று, மழை, வெப்பம், ஒளி இவற்றின் தாக்கங்களால் அழிவு, ஊறுகள் ஆகியவை அவற்றிற்குறுவது உறுதி. இத்தகு அழிபாடுகளிலிருந்து இம்மரபுச் சின்னங்களைக் காத்திடவேண்டும் என்ற முனைப்பில் பல்வேறு நாடுகளில் கொண்ட முயற்சிகளை ஒருசேர யுனெஸ்கோ வகுத்து, மரபுச் சின்னப் பாதுகாப்புத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது.

*1972*-இல் இத்திட்டத்திற்குரிய மரபுச் செல்வப்பட்டியலைத் தயாரிப்பதற்கு யுனெஸ்கோ *21* உறுப்பு நாடுகளடங்கிய ஒரு குழுவை நியமித்தது. இக்குழு இப் பட்டியலில் இடம்பெற்ற மரபு மற்றும் இயற்கைச் செல்வங்களைக் குறிப்பிட்ட அடிப்படைகளில் ஆயும் பொறுப்புடையதாகும். அவ்வகையில் உலக மரபுச் சின்னப் பாதுகாப்பிற்குப் பயன்படுத்திப் பலன் காணமுடிகிறது. இந்நிதியம் அன்றி, அரசுநிதி, பிற அரசுநிதி, நிறுவன நல்கைகள், தனிமனிதக் கொடை என நிதி வாய்ப்புகள் நிரம்பவுண்டு.

இப்பட்டியலின் வழி இம்மரபுச் சின்ன மண்டலங்களை அறிவதோடு பண்பாட்டுச் சார்புகள், கால, இட, சூழல் பற்றிய விளக்கம் இவற்றை ஒருங்குபெற முடியும்.

அண்மைக்காலம் வரை இத்திட்டத்தை *102* நாடுகள் ஏற்றுள்ளன. கூடுதல் *288* மரபுச் செல்வங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. இம்மரபுச் செல்வப் பட்டியலில் பண்பாட்டுச் செல்வங்களும் இயற்கைச் செல்வங்களும் என இருவகைச் செல்வங்கள் இடம் பெறுகின்றன. இவற்றுள், பண்பாட்டுச் செல்வங்கள் என்பவை கட்டிடங்களும் கட்டிடத் தொகுதிகளடங்கிய நகர்ப்புறமுமாகும். இக்காட்சி பண்பாடு என்பதன் விளக்கச் சுவடு "கட்டுமானக்கலையே" எனப் புலப்படுத்தி நிற்கும் அருமைப்பாடாகும்.

இப்பட்டியலில் இடம் பெற்ற காரணத்தால் உலகளாவிய அளவில் ஒரு பகுதி மரபுச் சின்னம் உலகின் பிறபகுதிகட்கும் புலனாகிறது. அவற்றைச் சரிவரப் பாதுகாப்பதும் அனுபவிப்பதும் எளிதாகின்றன. அதற்கென அமைகின்ற பாதுகாவலர்களும், வல்லநர்களும், அலுவலர்களும், தாராளமான பொருள் வசதியோடு இவ்வாய்ப்பினைச் செம்மையுறச் செய்கின்றன. இவ்வகையில் *1987* ஆம் ஆண்டு முடிய அமைந்த உலக மரபுச் செல்வப் பட்டியலில்,

| | |
|---|---|
| பண்பாட்டுச் செல்வங்கள் | *211* |
| இயற்கைச் செல்வங்கள் | *68* |
| கலப்புச் செல்வங்கள் | *9* |

இடம் பெற்றுள்ளன. இப்பட்டியலை நிரல் முறையில் நாடுகள் வழியாகக் காணலாம்.

**அல்ஜீரியா**

அல்ஹலா : பெனி ஹம்மாம், தாசிலி நாஜர், முசாப் பள்ளத்தாக்கு, திஜெமிலா, திப்பாசா, திம்காட்.

**அர்ஜெண்டினா**

லாஸ் கினேசியர்ஸ், இகுவாசு தேசியப் பூங்கா

**அர்ஜெண்டினா, பிரேசில்**

குவரானில் சேசுசபை மடங்கள் : சான் இஞ்ஞாசியோ, மினி, சாந்நதா, ஆனா, நியூஸ்த்ரா செனோரரா தெ லொரத்தோ, சாந்தா மரியா லா மேயோர் (அர்ஜெண்டினா) : சாவ் மிகேல் தா மிசோளின் அழிபாடுகள் (பிரேசில்).

**ஆஸ்திரேலியா**

காக்காடு தேசியப் பூங்கா, பெரும் பவளத்திட்டு, விலாண்ட்ரா ஏரிப்பகுதி, மேற்கு தாஸ்மேனியப் பாலைத் தேசியப் பூங்காக்கள், லார்டு ஹோவ் தீவுத் தொகுதி, ஆஸ்திரேலியா கிழக்குக்கரை மிதவெப்ப, வெப்பம் குறைந்த மழைக் காட்டுப் பூங்காக்கள், உலுரு தேசீயப்பூங்கா.

**வங்காளதேசம்**

பாகர்ஹாத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புள்ள மசூதி நகர் : பஹர்பூரிலுள்ள பௌத்த ஆலய அழிபாடுகள்.

**பெனின்**

அபோமே அரண்மனைகள்

**பொலிவியா**

போட்டோசி நகர்

**பிரேசில்**

ஊரோ பிரேட்டோ எனும் வரலாற்றுச் சிறப்புமிகு நகர், ஒலிண்டா நகரின் வரலாற்றுச் சிறப்புள்ள மையம், சால்வதோர்தெ பாஹியாவின் வரலாற்றுச் சிறப்புமிகு மையம். போம்ஜீசஸ், தோ காங்கோன்ஹாஸ் ஆலயம், இகுவாசு தேசியப் பூங்கா, பிரசீலியா.

**பல்கேரியா**

போயானா ஆலயம், மடாரா ரைடர். காசன்லாக்கிலுள்ள திரேசியக் கல்லறை, இவானோவோ பாறைக் கோயில்கள், நெஸ்பார் பண்டைய நகர். ரிலா மடாலயம், சிராபார்னா இயற்கைப் புகலிடம், பிரின் தேசீயப் பூங்கா ஸ்வெஷ்டாரியின் திரேசியக் கல்லறை.

**காமரூன்**

திஜா தாவரப் புகலிடம்

**கனடா**

லான்ஸ் சமவெளி தேசிய வரலாற்றுச் சிறப்புள்ள பூங்கா, நாஹானி தேசியப் பூங்கா, டினோசார் மாநிலப் பூங்கா, அந்நதனி தீவு. கஹட், ஸ்மாஷ்ட், பைசன் ஜம்ப் தொகுதி, காட்டெருமை தேசியப் பூங்கா, கனடா ராக்கி மலைப் பூங்காக்கள், குவெபெக் (வரலாற்றுச் சிறப்புள்ள பகுதி). குரோஸ் மோர்ன் தேசியப் பூங்கா.

**கனடா, அமெரிக்கா ஐக்கிய நாடுகள்**

குளுவான் தேசியப் பூங்கா / விராங்க்ஸ் செயின்ட் எலியாஸ் தேசியப் பூங்காவும், புகலிடமும்.

**சீனா**

தாய்ஷான் மலை, பெருஞ்சுவர், மிங்கிங் வம்ச அரண்மனை, அமாகாங் குகைகள், முதல் கின் பேரரசரின் கல்லறை மாடம். ஸூக்கூடியனிலுள்ள பீக்கிங் மனிதன் பகுதி.

**கொலம்பியா**

துறைமுகம், கோட்டைகள், கட்டிடத்தொகுதி, கார்த்தஜீனா.

**கோஸ்டாரீக்கா**

தலமாங்கா தொடர், லா அமிஸ்டாடு புகலிடங்கள்.

**கோத்திவார்**

தாய் தேசீயப் பூங்கா, கோமோ தேசியப் பூங்கா

**கியூபா**

பழைய ஹவானாவும், அதன் மதிலரண்களும்.

**சைப்ரஸ்**

பாஃபோஸ், ட்ரூடோஸ் பகுதியிலுள்ள ஓவியம் தீட்டப்பெற்ற கோயில்கள்.

**குடியாட்சி ஏமன்**

ஷிபாம் மதில் சூழ்ந்த பழைய நகர்

**ஈக்குவடார்**

கால்பகாஸ் தீவுகள், குயிட்டோ (பழைய நகர்) சாங்கே தேசியப் பூங்கா.

**எகிப்து**

மெம்ஃபிஸ், அதன் கல்லறை, கிசா முதல் தாஹ்ஷூர் வரையுள்ள பிரமிடுகள். பண்டைய தீப்ஸூம், அதன் கல்லறையும். இஸ்லாமிய கெய்ரோ. அபு / மேனா.

**எத்தியோப்பியா**

சிமென் : தேசியப் பூங்கா, பாறைக்கோயில்கள், லலிபெலா, ஃபாசில் கெபி, கொண்டார் பகுதி. அவாஹ் கீழ்ப் பள்ளத்தாக்கு. தியா அக்ஸம் ஓமோ கீழ்ப் பள்ளத்தாக்கு.

**பிரான்ஸ்**

புதின மிக்கோல் மலையும் அதன் வளைகுடாவும், சார்த்தர் பேராலயம். வெர்செய்ல்ஸ் மாளிகையும் பூங்காவும், வேசலே, ஆலயமும் மலையும், வேசேர் பள்ளத்தாக்கிலுள்ள அலங்காரக்குகைகள், ஃபோந்தேன்புளோவிலுள்ள அரண்மனையும் பூங்காவும், ஷாம்போர் அரண்மனையும் பிற சொத்துக்களும், ஆமியன் பேராலயம், ரோமானிய அரங்கும் வெற்றிவளைவும், ஆரங்க ரோமானிய, வழிக்கலைக் கட்டிடங்கள், ஆர்ல் ஃபோந்தனேயிலுள்ள சிஸ்டாசிய மடாலயம், ஆர்க்-எ-செனாளின் அரச உப்பளங்கள், லா காரியர், தாலியான்ஸ் இடங்கள், நான்சி, கார்த்தெம்ப் கரையிலுள்ள புனித சாவன் ஆலயம், கிரோலாத்தா முனை, போர்த்தோ முனை, ஸ்காந்தோலோ இயற்கைப்புகலிடம், கார்சிக்கா, போந் தியூ கார் (ரோமானியக் கால்வாய்)

**ஜெர்மனி** *(கூட்டாட்சிக் குடியரசு)*

ஆக்கென் பேராலயம், ஸ்பேயர் பேராலயம், வெர்ஸ்பர்க் இல்லமும்,

அரசத்தோட்டமும், இல்லச் சவுக்கமும், வீஸ் திருப்பயணக் கோயில் அகஸ்டஸ்பர்க், ஃபாக்கன் வட் கோட்டைகள், ப்ரஹ்ல் புனித மரியன்னைப் பேராலயமும், புனித மிக்கோல் ஆலயமும், ஹில்டஷீம் ட்ரையர் கட்டிடங்கள், லூபெக்கிலுள்ள ஹான்சியாட்டிக் நகர்.

**கானா**

அரண்களும், கோட்டைகளும், வோல்ட்மா, கிரேட்டர், அக்ரா, மத்திய மேற்குப் பகுதிகள், அஷாத்திமரபான கட்டிடங்கள்.

**கிரீஸ்**

காசேயிலுள்ள அப்போலோ எப்பிக் கியூரியஸ் ஆலயம். டெல்ஃபியின் தொல்பொருளாய்வுப் பகுதி, உள்ளரண், ஏதென்ஸ்.

**குவாட்டமாலா**

டிக்கால் தேசியப் பூங்கா, அண்டிகுவா, குவாட்டமாலா தொல்பொருளாய்வுப் பூங்காவும், குய்ரிகுவாவன் அழிபாடுகளும்.

**கினி, கோத் திவார்**

நிம்பார் மலை இயற்கைப் புகலிடம்

**ஹய்ட்டி**

தேசிய வரலாற்றுச் சிறப்புள்ள பூங்கா சிட்டாடல், சான் சூசி, ராமியர்.

**போப்பாண்டவரின் அரசு**

வத்திகான் நகர்

**ஹொண்டுராஸ்**

கோப்பனிலுள்ள மாயர் பகுதி, ரியோபிளேட்டானோ உயிர் மண்டலப் புகலிடம்.

**ஹங்கேரி**

புடாபெஸ்ட் டான்யூப் கரையிலுள்ள புடா காசில், ஹொலோக்கோ.

**இந்தியா**

அஜந்தா குகைகள், எல்லோரா குகைகள், ஆக்ரா கோட்டை, தாஜ்மகால், கதிரவன் ஆலயம் -கோனார்க், மாமல்லபுரச் சின்னங்கள், காசிங்க தேசியப் பூங்கா, மாஸ் வனவிலங்கு சரணாலயம், கியோலாதெயோ தேசியப் பூங்கா, கோவாவிலுள்ள ஆலயங்களும் கன்னிமடங்களும். கஜுைராஹோ சின்னங்கள்,

ஹம்பி கட்டிடங்கள் ஃபத்தேஹ்பூர் சிக்ரி, பட்டக்கால் சின்னங்கள். எல்ஃபெண்டா குகைகள், பிரஹதீஸ்வரர் ஆலயம் - தஞ்சாவூர், சுந்தரவனத் தேசியப் பூங்கா.

**ஈராக்**

ஹத்ரா

**ஈரான் இஸ்லாமியக் குடியரசு**

த்சோககா சான்பில், பெர்சப்போளிஸ், மெய்தான் இமாம். எஸ்ஃபஹான்.

**இத்தாலி**

பாறை ஓவியங்கள், வால்கமோனிக்கா, ரோமில் வரலாற்றுச் சிறப்புள்ள மையம், ஆலயமும் வியோனார்டோ டாவின்சியின் இறுதி இரவுணவு இருக்கும் சாந்த மரியா தெல் கிராம டொமிக்கண் கன்னிமடமும், ஃபிளாரன்ஸின்வரலாற்றுச் சிறப்புள்ள மையம், வெனிஸூம் அதன் கடற்கழியும், பியாசா தெல்துவோமோ, பிசா.

**ஜோர்டன்**

ஜெருசலேம் பழைய நகரும் அதன் மதில்களும். பெட்ரோ குவசீர் அம்ரா.

**லெபனான்**

அஞ்சார், பால்பெக், பிப்ளோஸ், டைர்.

**லிபியா அராபிய ஜமாஹிரியா**

லெப்டிஸ் மாக்ளாவிலுள்ள தொல் பொருளாய்வுப் பகுதி, சப்ராத்தாவின் தொல்பொருளாய்வுப் பகுதி, சைரீனின் தொல் பொருளாய்வுப் பகுதி, டன்ட்ரார்ட் அகாகளிலுள்ள பாறை ஓவியப்பகுதிகள், காடாமெஸ் பழைய நகர்.

**மாளாவி**

மாளாவி ஏதித் தேசியப் பூங்கா

**மால்ட்டா**

ஹால் சாஃப்லியெனி ஹைப்போஜியம், வலாட்டா நகர், காண்டிஜா ஆலயங்கள்.

**மெக்சிகோ**

சியான் கான், ஸ்பானிய ஆட்சிக்கு முந்திய நகரும் பெலெங் தேசியப் பூங்காவும், மெக்சிகோ நகர், மற்றும் க்ஸோசிமில்கோவின் வரலாற்றுச் சிறப்புள்ள மையம், டியோட்டிஹூவாகான எனும் ஸ்பானிய ஆட்சிக்கு முந்திய

நகர், ஒக்ஸகாக்காவின் வரலாற்றுச் சிறப்புள்ள மையமும், ஆல்பன்மலை தொல்பொருளாய்வுப் பகுதியும், பீயூப்ளாவின் வரலாற்றுச் சிறப்புள்ள மையம்.

**மொராக்கோ**

ஃபெஸ் மெதினா மராக்கெஷ் மெதினா, அய்த்- பென் ஹடுவின் க்டார்.

**நேப்பாளம்**

சாகர்மாதா தேசியப்பூங்கா, காட்மண்டு பள்ளத்தாக்கு, அரசு திட்வான் தேசியப்பூங்கா.

**நியூசிலாந்து**

சவஸ்ட்லாண்டு கூக மலைத் தேசியப் பூங்கா, ஃபியோர்ட்லாண்டு தேசியப்பூங்கா.

**நார்வே**

அர்ன்ஸ் ஸ்டேவ் ஆலயம், பிரிகன், ரோரஸ் ஆர்ட்டா பாறை ஓவியங்கள்.

**ஓமான்**

பாஹ்லா கோட்டை

**பாகிஸ்தான்**

மொகஞ்சதாரோ அழிபாடுகள், தட்சசீலம், தக்த்-இ-பாஹியில் உள்ள பௌத்த அழிபாடுகளும், சாஹர்-இ-பாஹ்லோவிலுள்ள அண்மை நகர அழிபாடுகளும், தாட்டாவின் வரலாற்றுச் சிறப்புள்ள கட்டிடங்கள், கோட்டையும் ஷலிமார் தோட்டங்களும் லாகூர்

**பனாமா**

போர்ட்டோபெல்லோ-சான லோரான்சோவின் கரீபியப் பகுதியிலுள்ள அரண்கள், டேரியன் தேசியப்பூங்கா.

**பெரு**

குஸ்கோ நகரில் மச்சுபிச்சுவின் வரலாற்றுச் சிறப்புமிகு சரணாலயம், ஷாவின் தொல்பொருளாய்வுப் பகுதி, ஹுவாஸ்காரன் தேசியப்பூங்கா, சான்சான் தொல்பொருளாய்வுப் பகுதி, மானு தேசியப் பூங்கா.

**போலந்து**

கிராக்கோவிலுள்ள வரலாற்றுச் சிறப்புள்ள மையம், விலிக்ஸ்கா உப்பளம், ஔஸ்விட்ஸ் சிறைக்கூடம், பயலோவீசா தேசீயப் பூங்கா, வார்சாவின் வரலாற்றுச் சிறப்புமிகு மையம்.

**போர்ச்சுக்கல்**

அங்கரா தோ ஹெரோய்ஸ்மோ நகரின் மையப் பகுதி, அசோரஸ் ஹிரோனிமஸ் சபை மடாலயமும், பெலம் கோபுரமும், லிஸ்பன், பத்தால்ஹா மடாலயம், கிறிஸ்து கன்னிமடம், கோமார், எபோராவின் வரலாற்றுச் சிறப்புள்ள மையம்.

**செனகல்**

கோரே தீவு நிநயோக்கோலே-கோபா தேசியப் பூங்கா, த்ஜூத் தேசியப் பறவைகள் சரணாலயம்.

**சீசெல்ஸ்**

அல்தாப்ரா திட்ட, வாலே தெ மாய் இயற்கைப் புகலிடம்.

**ஸ்பெயின்**

கோர்டோபா மசூதி, அல்ஹாம்ப்ராவும் ஜெனிராலியும், கிரானடா பர்கோஸ் பேராலயம், எஸ்கூமரயல் மடாலயமும், அப்பகுதியும், மாட்ரிட், பார்க்குவெல், பலாசியோ குவெல், காசா மிலா, பார்சிலோனா, அல்ட்டாமிரா குகை, செகோவியா எனும் பழைய நகரும் அதன் கால்வாயும், அஸ்ஸடூரிரயாஸ் அரசுக் கோயில்கள், சாந்தியாகோ தெ கொம்போஸ்தலா (பழைய நகர்), பழைய அவிலா நகரும் அதற்குவெளியேயுள்ள கோயில்களும், டெருவெலின் முட்ஜார் கட்டிடக் கலையும். வரலாற்றறுச் சிறப்புள்ள டோலடோ நகர், காராஜேதனே தேசியப் பூங்கா. பழைய காசரஸ் நகர்ப்பேராலயம், அல்காசர், ஆர்சிவோ தெ இந்தியாஸ், செவில்.

**இலங்கை**

புனித அநுராதபுர நகர், பண்டையப் போலன்ருவா நகர், பண்டையச் சிகிரி நகர்.

**சுவிட்ஸர்லாந்து**

புனித கால மடம், புனித ஜான் பெனடிக்ட் சபைக் கன்னிமடம், முஸ்தேர். பழைய பெர்ன் நகர்.

**சிரிய அராபியக் குடியரசு**

பண்டைய டமாஸ்கஸ் நகர். பண்டைய போஸ்ரா நகர். பல்மைரா பகுதி பண்டைய அலெப்போ நகர்.

**துனீசியா**

துனீசிலுள்ள மெதினா. கார்த்தேஜ் பகுதி, எல் டீம் அரங்கு இக்கூல் தேசியப் பூங்கா, கெர்குவானகார்த் தேஜ் நகரும் அதன் இடுகாடும்.

**துருக்கி**

இஸ்தான்புலின் வரலாற்றுச் சிறப்புள்ள பகுதிகள், கோரம் தேசியப் பூங்காவும் கப்படோசியாவின் பாறைப் பகுதிகளும், பெரிய மசூதியும் திவ்ரிசி மருத்துவமனையும், ஹட்டுஷா நெம்ருட் டாக்

**இங்கிலாந்து**

பெரும் கரைப் பாலமும், கடப்புவழிக்கடற்கரையும், டர்ஹாம் கோட்டையும் பேராலயமும், இருப்புப்பாலப்பிளவு, ஃபௌண்டன்ஸ் மடாலய அழிபாடுகள், உட்பட ஸ்ட்லி அரசப்பூங்கா, ஸ்டோன்ஹென்ஜ், ஏவ்பரி, பிற பகுதிகள். கிளினெடிலுள்ள எட்வர்டு அரசரின் கோட்டைகளும் நகர மதில்களும், செயின்ட் கில்டா, பிளன் ஹீம்மாளிகை. பாத் நகர், ஹேட்ரியனின் சுவர். வேஸ்ட்மினிஸ்டர் மடாலயம், புனித மார்கரெட் ஆலயம்.

**தான்ஸானிய ஐக்கியக் குடியரசு**

நுகோரங்கோரோ பாதுகாப்புப்பகுதி, கில்வா சிசிவானி அழிபாடுகள், சோங்கோ பனாரா அழிபாடுகள், செரங்கெட்டி தேசியப் பூங்கா, செலூஸ் வனவிலங்குப் புகலிடம், கிளிமஞ்சரோ தேசியப் பூங்கா.

**அமெரிக்க ஐக்கிய நாடுகள்**

மெசா வெர்டு எல்லோ ஸ்டோன் கிராண்ட் கேன்யன் தேசியப் பூங்கா, எவர்கிளேட்ஸ் தேசியப் பூங்கா, சுதந்திர மன்றம், ரெட்வுட் தேசியப் பூங்கா, பெருங்கைகை தேசியப் பூங்கா, ஒலிம்பிக் தேசியப் பூங்கா, காஹோக்கியா, மவுண்ட்ஸ் ஸ்டேட் வரலாற்றுச் சிறப்புமிகு பகுதி, கிரேட் ஸ்போக்கி மலைத் தேசியப் பூங்கா, லாஃபோர்ட்லெசாசான் ஜுவான் வரலாற்றுச் சிறப்புள்ள பகுதி, பியூர்ட்டோ ரிக்கோ, சுதந்திரச் சிலை, போஸ்மைட் தேசியப் பூங்கா, சாக்கோ பண்பாட்டுத் தேசிய வரலாற்றுச் சிறப்புள்ள பூங்கா, மாண்டிசெல்லோ, மற்றும் வெர்ஜீனியா பல்கலைக்கழகம், சார்ளட்ஸ்வில் ஹவாய் எரிமலைத் தேசீயப் பூங்கா.

**ஏமன் அராபியக் குடியரசு**

பழைய சானா நகர்

**யூகோஸ்லாவியா**

பழைய டுப்ரவ்னிக் நகர், ஹ்டாரிராஸ், சோப்புக்கானி, டயக்ளேசியம் அரண்மனையுள்ள வரலாற்றுச் சிறப்புள்ள ஸ்பிலிட் தொகுதி. ப்ளிட்னிஸ் ஏரியும், கோட்டாரும் அதன் வளைகுடாவும், டுர்மிட்டர் தேசியப் பூங்கா, ஸ்டுடன்சியா மடாலயம், ஸ்கோக்ஜன் குகைகள்.

**ஸாயர்**

விருங்கா தேசியப் பூங்கா, கரம்பா தேசியப் பூங்கா, காஹுசிபிகா தேசியப் பூங்கா, சலோங்கா தேசியப் பூங்கா.

**ஸிம்பாப்வே**

மானா குளத் தேசியப் பூங்கா, சாப்பி மற்றும் செவோர் பகுதி, பெரும் ஸிம்பாப்வே தேசியக் கட்டிடம், காமி அழிபாட்டுத் தேசியக் கட்டிடம்.

பண்பாட்டு மரபுச் சின்னங்களுள் தனித்திறம் பெற்றவற்றை விளக்கமுறையில் காணும்போது :

**சிகிரியா *(இலங்கை)***

பண்டைய நகரான சிகிரியா மாபெரும் சிவப்பு அடுக்குப் பாறையின் அடிவாரத்திலுள்ளது. அப்பாறையின் உச்சியில் கி.பி. *5*ஆம் நூற்றாண்டில் முதலாம் காசிப்ப மன்னர் ஓர் அரண்மனையைக் கட்டினார். அதற்குச் செல்வதற்குப் பாறையின் முகப்பில் ஒரு படிக்கட்டு செதுக்கப்பட்டு இருந்தது. அப்படிக்கட்டு பாறையின் அடிவாரத்திலிருந்த ஒரு பெரிய பதுங்கிய சிங்கச் சிலையின் முன் பக்கமிருந்து தொடங்கியது. அச்சிங்கத்தின் பாதங்களே இப்போதுள்ளன. அச்சிங்கத்தின் பெயரையே அப்பாறையும், பிறகு அந்நகரும் பெற்றன. மன்னர் இறந்த பின், முன்னாள் அங்கு வாழ்ந்த பௌத்தத் துறவிகளிடம் சிங்க மலை கொடுக்கப்பட்டது. நாளடைவில் அதை யாரும் கவனிக்கவில்லை. அரண்மனையின் அழிபாடுகளும் அதன் நன்னீர்த் தொட்டிகளும் கண்ணைக் கவர்கின்றன. நகரின் கீழ்ப்பகுதியில் உயர்குடி மக்கள் வாழ்ந்த இடங்களில் எழிலார்ந்த அடுக்குத் தளத்தோட்டங்களும், படர்ந்த செடிகள் அகற்றப்பட்ட கட்டிட அழிபாடுகளும் உள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாகப் பாறையின் மேற்கு முகப்பில் பாதி உயரத்தில் காணப்படும் பாறை ஓவியங்களே சிகிரியாவுக்குப் புகழ் தருபவை. அவ்வோவியங்களில் முகில் மங்கையர் எனப்படும் *21* அழகிய நங்கைகள் உள்ளனர். அவை அஜந்தாவின் சுவரோவியங்கள் போல் அழகுள்ளவை. *1982*இல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்ற இப்பகுதிக்கு இடையறாத கவனம் தேவை. அகழாய்வு மற்றும் பகுதி முன்னேற்றம் போன்ற திட்டங்களை யுனேஸ்கோ தொடங்கியுள்ளது. *1978*இல் ஏற்பட்ட மழையால் அரிப்பு, பூச்சிகளின் தாக்குதல் ஆகியவற்றாலும் ஊறுபட்ட ஓவியங்களைப் பேணும் பணி இப்போது நடந்துவருகின்றது. ஓவியங்கள் தீட்டப்பெற்ற சுண்ணாம்பைத் திண்மையாக்குவதற்காக, பூச்சிகள் தோண்டிய துளைகளுள் செயற்கைப் பிசின் பீச்சப்படுகின்றது.

**தாய்ஷான் மலை *(சீன மக்கள் குடியரசு)***

தாய்ஷான் மலை அதன் பண்பாடு மற்றும் இயற்கை இயல்புகளுக்காக *1987*-இல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம் பெற்றது. இம்மலை

கிழக்கு சீனாவில் ஏற்பட்ட பண்டைய புவியமைப்பியல் மாற்றத்திற்கு ஒரு முக்கிய எடுத்துக்காட்டு. வேல்ஸ்கம்பர்லாந்து தொல்லுயிரூழிக் காலப் படிவங்கள் இங்கு மலிந்து உள்ளன. *462* வகை மூலிகைகள் இங்குள்ளன. சில மரங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியவை. சீனாவின் பண்பாட்டு மரபுச் செல்வத்தைக் காட்டும் *22* ஆலயங்கள் *97* பண்டைய அழிபாடுகள், *819* கற்பாளங்கள், *1,018* பாறை கற்பொறிகள் இங்குள்ளன. இங்குச் சீன நாகரிகப் பிறப்பிடங்களுள் ஒன்றில் *40,000* ஆண்டுகளுக்கு முந்திய மனித வாழ்க்கைபற்றிய சான்று கிடைத்துள்ளது. புதிய கற்காலத்தில் *(5,000-6,000* ஆண்டுகளுக்கு முன்*)* தாவன்கூ, லாங்ஷான் எனும் பண்பாடுகள் முறையே இம்மலையில் வடக்கிலும் தெற்கிலும் செழித்தோங்கின. இங்கு கிலு எனும் இரு அரசுகள் இருந்தன. கி.மு *770-476* ஐச் சேர்ந்த அவற்றின் கலைப்பொருள்கள் கிடைத்துள்ளன. கிலு அரசு கட்டிய *500* கி.மீ. சுவரை இங்குக் காணலாம்.

### டியோட்டிஹுவாக்கன் (மெக்சிகோ*)*

கொலம்பஸ் காலத்திற்கு முந்திய புனித நகரான டியோட்டி ஹுவாக்கன் மெக்சிகோ நகருக்கு வடகிழக்கில் *50* கி.மீ. தொலைவிலுள்ள மலையிலுள்ளது. கி.பி. *13* ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட இந்நகர் அதன் உச்சநிலையில் *36* கி.மீ. பரப்புள்ளதாகவும், *2,00,000* மக்கள் தொகை உள்ளதாகவும் இருந்தது. அங்குள்ள உயர்ந்த வழிபாட்டு மையம் மெக்சிகோவின் பண்டைய நாகரிகக் கலையின் உச்சநிலையைக் காட்டுகிறது. அங்கு *300*மீ தளத்தில் *75*மீ உயரமுள்ள கதிரவன் பிரமிட் *(*இடப்புறம்*)* இருந்தது. *42*மீ, உயரமுள்ள நிலா பிரமிடும், அஸ்டெக்குகளின் இறகுள்ள பாம்பாகிய குவெட்ஸால் கோட்டல் ஆலயமும் இருந்தன. எரிமலைப் பாறைகளாலான *4,000* வீடுகள், களி மண்ணால் அல்லது சுண்ணச் சாந்தினால் பூசப்பட்டிருந்தன. *6*ஆம் நூற்றாண்டில் டியோட்டிஹுவாக்கன் பரந்த நிலப்பகுதியுடைய ஆற்றல்மிகு அரசாகத் திகழ்ந்தது. ஆனால் *650*ஆம் ஆண்டில் நகர் எரிந்துபட்டது. காரணம் இன்னும் தெரியவில்லை. இறுதியில் அது கைவிடப்பட்டது. *14-*ஆம் நூற்றாண்டில் அஸ்டெக்குகள் பெரம் பிரமிடுகளுள்ள அந்நகரின் அழிபாடுகளைக் கண்டுபிடித்தபோது, அதைக் கடவுளர் கட்டியதாகக் கருதினர். ஆகவே, அதற்கு கடவுளரின் இடம் எனும் பொருள் படும் டியோட்டி ஹுவாக்கன் என்று பெயரிட்டனர். *1987-*இல் இப்பகுதி உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம் பெற்றது.

### அக்ஸம் *(*எத்தியோப்பியா*)*

எத்தியோப்பியாவின் டைகர் பகுதியிலுள்ள அக்ஸம் நகர் புகழ்மிகு பண்டைய அரசின் தலைநகராக இருந்தது. அவ்வரசும் அப்பெயரையே பெற்றது. அதை கி.பி. *3-*ஆம் நூற்றாண்டுக் கிரேக்க வாசகம் உலகின் மூன்றாம் குடியரசு என்றது. ரோமானியரும் அக்ஸம் பற்றி அறிந்திருந்தனர். பரந்திருந்த அக்ஸம் நாகரிகத்தின் பல அடையாளங்கள் கிடைத்துள்ளன. செதுக்கப்பெற்ற

மிகப்பெரிய தூபியான, *33*மீ உயரமுள்ள மாபெரும் நடுகல் (வலப்புறம்) எத்தியோப்பிய புராணங்கள் பொறிக்கப்பட்ட கல்தூண்கள், அரசர்கள் கல்லறைகள் போன்றவை இப்போதுள்ளன. ஒரு புதை மேட்டுவடிவில் ஷீபா அரசியின் கல்லறை இருப்பதாக ஒரு கதையுண்டு. மேற்குப் பகுதியில் கி.பி. *1000*-இல் கட்டப்பெற்ற *3* பண்டைய கோட்டைகளும், *18*ஆம் நூற்றாண்டுப் பேராலயமும் உள்ளன *1980*-இல் அக்ஸம் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம் பெற்றது.

**டிம்காட் (அல்ஜீரியா)**

டிம்காட் என்பது ரோமானிய நகரான தங்காடியின் இன்றையப் பெயர். இது கி.பி.*100*-இல் ட்ரோஜன் மன்னரால் ஒரேஸ் மலைக்கு வடக்கே பாதுகாப்புப் பாசறையாக நிறுவப்பட்டது. தங்காடி விரைவாக வளர்ந்தது. *5*-ஆம் நூற்றாண்டில் மிலேச்சர் படையெடுப்பின் பிறகு ஒரஸ் மலைவாசிகள் இதை அழித்தனர். *6*-ஆம் நூற்றாண்டில் பைசாண்டிய ஆட்சியின் போது புதுப்பிக்கப்பட்டது. பிறகு, கைவிடப்பட்டது. *1980*இலிருந்து நடைபெற்ற அகழாய்வுகள் ரோமானிய நகர அமைப்புத் திட்டதிற்கேற்ப அரிய முறையில் அமைந்த ஒரு நகரின் அழிபாடுகளைக் காட்டின. அங்குச் சதுக்கம், ஜுனோமினர்வா ஆலயம், அரங்குகள், குளியலிடங்கள், அங்காடிகள், பொது நூலகம் ஆகியவை இருந்தன. *3*-ஆம் நூற்றாண்டில் கிறிஸ்துவ சமயம் அங்குப் புகுத்தப்பட்டதை, அங்குள்ள ஆலய அழிபாடுகள் காட்டுகின்றன. அப்பகுதியைப் பாதுகாப்பதில் பல சிக்கல்கள் உள்ளன. இன்னும் முழுவதும் அகழாய்வு நிகழாத பகுதிகள் இருப்பதால் அதன் தொடக்கப் பரப்பை அறிய இயலவில்லை. *1982*-இல் டிம்காட் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றது.

**பெட்ரோ (ஜோர்டன்)**

சாக்கடலுக்குத் தெற்கிலுள்ள இளஞ்சிவப்பு மணற்பாறைச் சரிவுகளில் செதுக்கவும் கட்டவும் பெற்ற இப்பண்டைய அராபிய நகர் நபாதீயேயன் அரசின் (கி.மு. *4*- கி.பி. *2*-ஆம் நூற்றாண்டு) தலைநகராகும். இரு வாணிக வரிகளின் சந்திப்பிலிருந்த இது அராபிய சாம்பிராணி, இந்திய நறுமணப்பொருள், சீனப்பட்டு, எகிப்திய தங்கம், நியூபியத் தந்தம், அடிமைகள் ஆகிய வாணிகப் பொருள்களின் மையமாக இருந்தது. கி.பி. *1* - கி.பி. *1*-ஆம் நூற்றாண்டில் பெட்ரா உயர் செழிப்புற்று எழில் கட்டிடங்களைக் கட்டத் தொடங்கியது. கி.பி. *106*-இல் இது ரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாகி, இன்னும் வளர்ச்சியுற்றது. மாற்று வாணிக வழிகள் தோன்றவே இதன் பொருளாதாரம் சீர்குலைந்தது. பிறகு, கிறிஸ்தவர்கள் இங்குக் குடியேறினர். *2*-கி.மீ. நீளமுள்ள குறுகிய கணவாய் வழியாகவே பெட்ராவுக்குச் செல்ல முடியும். இங்குள்ள மணற்பாறையில் வெட்டப்பெற்ற ஆலயங்கள், கல்லறைகள் மற்றும் அரண்மனைகளில், கீழ்நாட்டு மரபுகுளம், கிரேக்க-ரோமானிய இயல்புகளும் இணைந்துள்ளன. பெட்ராவைப் பேணவும், அரண்மனைக் கல்லறையைப் புதுப்பிக்கவும் உலக மரபுச் செல்வக்குழு ஜோர்டன் அரசுக்கு நிதியுதவி

செய்துள்ளது. *1985*-இல் பெட்ரா உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம் பெற்றது. கன்னிமாடம் நகருக்கு வெளியேயுள்ள பாறையில் வெட்டப்பெற்ற கட்டிடம். இது அரச கல்லறையாக இருந்திருக்கலாம். *(2-3* ஆம் நூற்றாண்டு*)*

### வரலாற்றுச் சிறப்புள்ள குவபெக் *(கனடா)*

செயின்ட்லாரன்ஸ் நதிக்கு எதிரிலுள்ள மேட்டுநிலத்தில் *1608*-இல் சாமுவெல்தெஷாம்ப்ளென் நியூஃபிரான்சின் தலைநகரை நிறுவினர். இம்மேட்டுநிலம் பிறகு டயமண்டு முனை எனப்பட்டது. அட்லாண்டிக் பகுதி வாணிகத்திற்கு முக்கிய இடமாக இந்நகர் *1759*இல் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டது. விரைவில் அவ்வாட்சி கனடா முழுவதும் பரவியது. துறைமுக வாணிகம் காரணமாக் குவபெக் விரைவாக வளர்ச்சி உற்றது. அங்கு வெவ்வேறு அலுவல்களுள்ள இரு நகர்கள் தோன்றின. பழைய கீழ் நகர் மாவட்டமானது. அங்கு *17, 18* ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த வீடுகளும், வெற்றி அன்னையின் ஆலயமும் உள்ளன. குவபெக்னி அரண் அமைந்த வட அமெரிக்கக் குடியேற்ற நகராக விளங்குகிறது. குவபெக்னிவரலாற்றுச் சிறப்புள்ள பகுதி *1985*ல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம் பெற்றது.

### ஹம்பி *(இந்தியா)*

தக்காண பீடபூமியில் இன்றைய ஹம்பி எனும் கிராமத்தினருகில் *14*ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் நிறுவப்பட்ட விஜயநகரம் தென்னிந்தியாவில் ஆட்சி செலுத்திய பரந்த இந்துப் பேரரசின் தலைநகராக இருந்தது. அவ்வரசு வடக்கிலிருந்து வந்த முஸ்லிம் படைகளை *200* ஆண்டுகளாகத் தடுத்து நின்றது. இயற்கைப் பாதுகாப்பு சூழ்ந்த அந்நகரைச் சுற்றி அவ்வரசர்கள் *7* அரண்களை அமைத்திருந்தனர். அவை விளைநிலத்தையும் பாதுகாத்தன. அரசரும் ஏராளமான அலுவலர்களும் நகரின் நடுவில் கட்டிடத்தொகுதிகளில் வாழ்ந்தனர். விஜயநகரின் பெருகி வந்த ஆற்றல் வடக்கிலுள்ள முஸ்லிம் மன்னர்களின் கவனத்தைக் கவர்ந்தது. *1565*இல் அவர்கள் அதைத் தாக்கி அழித்தனர். *1986*-இல் ஹம்பி உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம் பெற்றது. அதன் அளவும் ஏராளமான கட்டிடங்களும் *(500)* அதைப் பாதுகாக்கும் முயற்சியை அரிதாக்குகின்றன. பழைய நகரின் தெருக்களில் இன்று கரும்பும் நெல்லும் வளர்கின்றன. புதிய கட்டிடங்கள் எழும்புவதால், அதன் பிற பகுதிகள் பாதிக்கப் படுகின்றன. ஹம்பி பயணிகள் வரும் ஒரு திருத்தலமாக இருப்பதால், அழிவினின்றும் அதைக் காக்கப் பயணிகளுக்கு வசதியளிக்க வேண்டியிருக்கின்றது.

### பழைய நகரான சானா *(ஏமன் அராபியக் குடியரசு)*

மலை சூழ்ந்த சமவெளியிலுள்ள சானா கி.மு. *5*ஆம் நூற்றாண்டிலேயே சாபா ஏமன் அரசின் அரணாக இருந்தது. அது வாணிக வழிகள் சந்திக்குமிடத்தில் இருந்தது. கி.பி. *4*ஆம் நூற்றாண்டில் அதன் இயற்கை

அரண்களுக்குச் செங்கல் சுவர்கள் சேர்க்கப்பட்டன. அங்கோர் அரிய நகர் உருவானது. 6ஆம் நூற்றாண்டில் பாரசீகர் அதைப் பிடித்த பின், அது இஸ்லாம் சமயத்தைத் தழுவியது. அப்போது, அங்கு வீடுகள், மசூதிகள், தோட்டங்கள், பொதுக் குளியலிடங்கள் ஏராளமாகத் தோன்றின. இவ்வரிய நகரின் கட்டிடங்கள் எல்லாம் களிமண் அல்லது செங்கற்களால் கட்டப்பெற்றன. சுண்ணாம்பால் அழகு படுத்தப் பெற்றிருந்தன. வரலாற்றுச் சிறப்புமிகு இந்நகரைப் பாதுகாப்பதில் சில இடர்ப்பாடுகள் உள்ளன. பண்டைய அமைப்புகளைத் தழுவவேண்டியிருக்கின்றது. மேலும், போதிய வசதிகள் இல்லை. நீர்வசதியும் இல்லை. கால்வாய்களில் நீர் கசிவதாலும், சாக்கடைகள், நல்ல நிலையில் இல்லாததாலும் கட்டிடங்களின் அடிப்படைகள் நலிவுறுகின்றன. நன்கு பேணப்படாத சாலைகளில் அடிக்கடி செல்லும் உந்து வண்டிகள் எழுப்பும் தூசியும் ஊறுபாடு செய்கின்றது. பழைய நகரான சானாவை ஏமன் காப்பதற்கு உதவி செய்வதற்காக 1984-இல் யுனெஸ்கோ ஒரு பன்னாட்டு முயற்சியைத் தொடங்கியது. சுகாதார வசதியளித்தல், வீடுகளில் அடிப்படைகளை உறுதிப்படுத்தல், சாலைகளில் மேல்பூச்சிடுதல், வரலாற்றுச் சின்னங்களைப் புதுப்பித்தல் இத்திட்டத்தின் நோக்கங்கள், சானாவில் சுற்றுலா வசதியைப் பெருக்கவும் முயற்சி நடைபெறுகின்றது. 1986இல் சானா உலக மரபுச் செல்வப்பட்டியலில் இடம்பெற்றது.

**டெல்பி *(கீரிஸ்)***

காரிந்த வளைகுடாவிலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ள பர்னாசஸ் மலையின் தென்மேற்குச் சரிவிலுள்ள எழிலார்ந்த பாறை அரங்கில் அப்போலோவின் ஆலய அழிபாடுகள் உள்ளன. இது பண்டைய கிரீஸின் புகழ்மிகு ஆலயமாகும். டெஃபியில் அப்போலோ வழிபாடு நடந்தது. அழிபாடுகளின் அளவு டெல்ஃபியில் சமய அரசியல் சிறப்பைக் காட்டுகிறது. கி.மு. 6-ஆம் நூற்றாண்டின் டெல்ஃபி அதன் உச்ச நிலையில் கிரேக்க உலகின் சமய மையமாக விளங்குகிறது. கிருஸ்தவ சமயம் தோன்றும் வரை டெல்ஃபி தெய்வ வாய்மொழியின் செல்வாக்கு நிலைபெற்றிருந்தது. புகழ்மிகு நகர்கள் தம் காணிக்கைகளை வைத்திருப்பதற்காகக் கட்டிய சிறிய ஆலயங்களாகக் கருவூலங்கள் அப்போலோவின் ஆலயத்திற்குச் செல்லும் வளைவான புதிய பாதையில் வரிசையாக உள்ளன. (கி.மு. 4ஆம் நூற்றாண்டு). ஆலயத்திற்கு உயரே நாடக அரங்கு, விளையாட்டரங்கு, காஸ்டலின் ஊற்றுக்கருகே உடற்பயிற்சி அரங்கு ஆகியவை உள்ளன. ஊற்றுக்கப்பால் அத்தினா புரோனாயாவின் ஆலயம் இருக்கின்றது. அதன் புகழ்மிகு கட்டிடம் பளிங்கு வட்டக்கூடம். இது கி.மு. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. ஆலயத்திற்கு உயரே மேட்டுநிலத்தில் ஒரு நகர் இருந்தது. அது நிலநடுக்கப் பகுதியின் நடுவில் இருப்பதால் இடருக்குட்பட்டுள்ளது. பலமுறையும், அண்மையில் 1981லும் நில நடுக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. உறைபனியில் பாறைகள் விழுவதாலும், மழைநீர் வீழ்ச்சியினாலும், நீர்க்கசிவினாலும் அது ஓரளவு ஊறுபட்டுள்ளது. ஏராளமான சுற்றுலாப் பயணிகள் டெல்ஃபிக்குச் செல்வதால்,

கல் தரை தேயாதவாறு, ஆலயத்தைச் சுற்றிச் செல்வது கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. *1987*-இல் டெலபினை உலக மரபுச் செல்வப் பட்டியலில் சேர்க்குமுன், உலகமரபுச் செல்வக் குழு அங்குக் கட்டப்படுவதற்குத் திட்டமிடப் பெற்றிருந்த அலுமினிய பதன ஆலையைக் கட்டக்கூடாதென்று வலியுறுத்தியது. அவ்வாலையை டெல்ஃபியிலிருந்து *55* கி.மீ. தள்ளிக் கட்ட கிரேக்க அரசாங்கம் ஏற்பாடு செய்தது.

**பழைய நகர அவிலா (ஸ்பெயின்)**

காஸ்டிலியர்கள் புனிதர்கள் மற்றும் கற்களின் நகர் என்றழைத்த அவிலா நகரைக் கெல்ட்டிக் குலத்தவர் நிறுவினர். பிறகு, ரோமானியரின் புறக்காவல் நகராக இருந்த இந்நகரை விசிகாத் இனத்தவர் கைப்பற்றினர். முதலாம் நூற்றாண்டில் புனித செகுண்டோ அதைக் கிறிஸ்தவ நகராக்கி அதன் முதல் சமயத் தலைவரானார். *8-11* ஆம் நூற்றாண்டுகளில் அது முஸ்லிம் நகராக இருந்தது. *1090* இல் காஸ்டிலிலிருந்த முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபின் அந்நகரைச் சுற்றிக் கல் அரண்கள் கட்டப்பெற்றன. இந்த *25* கி.மீ. நீளமுள்ள மதிலும் அதிலுள்ள *80* அரவட்டக் கோட்டைகளும், *9* பெரிய வாயில்களும் இன்றும் உள்ளன. அபிலாவில் பல சமயக் கட்டிடங்கள் உள்ளன. குறிப்பாக *(12-13*ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த*)* காத்திக் பேராலயப் பாடற்குழுப்பகுதிக்கு மேலுள்ள இடைவெளிகளுள்ள அரண் அந்நகர் ஓர் அரண் காப்பாக இருந்ததைக் காட்டுகிறது. ஸ்பானியக் கன்னித் துறவியும் முறைஞானியுமான புனித அவிலா தெரசாவின் *(1515-1582)* வீட்டுப் பகுதியில் மனிதாவதாரக் கன்னிமடம் கட்டப்பெற்றது. நகருக்கு வெளியிலும் கோயில்களுள்ள பழைய நகரான அவிலா *1985*இல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம் பெற்றது.

**வரலாற்றுச் சிறப்புள்ள கிராக்கோ (போலந்து)**

விஸ்டுவா ஆற்றங்கரையிலுள்ள வேவல் மலையில் பழைய நகராகக் கிராக்கோ அமைந்துள்ளது. மேற்கு ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கு மிடையேயுள்ள வாணிகப் பாதையிலுள்ள கிராக்கோ *14* முதல் *16*-ஆம் நூற்றாண்டு வரைப் போலந்தின் செழிப்பான தலைநகராக இருந்தது. முன்னால் காத்திக் கலையியல்புடைய அரசகோட்டை *16*ஆம் நூற்றாண்டில் இத்தாலிய இயல்பில் மறுமலர்ச்சிக் காலவீடாக மாற்றப்பட்டது. ஐரோப்பாவிலே மிகப்பெரிய இடைக்காலச் சதுக்கமாகிய அங்காடியில் *(14-16*ஆம் றூற்றாண்டைச் சேர்ந்த*)* பெரிய துணி வணிக மையம் இருக்கின்றது. காத்திக் பேராலயத்தில் போலந்து மன்னர்களின் கல்லறைகள் உள்ளன. மா.கசிமீர் *1364*இல் நிறுவிய ஜாகிலோனியப் பல்கலைக் கழகம் *14* முதல் *17* ஆம் நூற்றாண்டு வரை, கிழக்கு ஐரோப்பிய அறிவுத்துறை மையமாக விளங்கியது. புகை, போக்குவரத்து அதிர்வு. உப்புநீர் ஆகியவற்றிலிருந்து இதனைக் காப்பதற்காகப் போலந்து அரசு முயன்று வருகிறது. கிராக்கோ *1978*இல் மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றது.

**நெஸ்பார் (பல்கேரியா)**

கிரேசியர், கிரேக்கர், ரோமானியர், பைசான்டியர் ஆகியோரின் கலை இயல்புகளை நெஸ்பார் நகரில் காணலாம். இது கருங்கடலினுள் நீண்டுள்ள பாறைப் பகுதியிலுள்ளது. ஒரு குறுகிய நிலப்பகுதி இதைக் கரையுடன் இணைக்கின்றது. இங்கு, கிரேசியரானமெனா முதல் குடியேற்றத்தை நிறுவினார் என்பது ஒரு பழங்கதை. ஆகவே, முதலில் இது மெனப்ரியா எனப் பெயர் பெற்றது. கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் இத்தீபகற்பத்தில் மெசம்பிரியா எனும் கிரேக்கக் குடியேற்றம் நிறுவப்பட்டது. இங்கு ஒரு கிரேக்க மன்றம், அரங்கு, அப்போலோ ஆலயம் ஆகியவற்றின் அழிபாடுகளைத் தொல்பொருளாய்வாளர் கண்டனர். இவை, ரோமானியர் அங்கு வாழ்ந்தபோது கட்டிய கட்டிடங்களினருகில் உள்ளன. கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மெசம்பிரியா பைசாண்டியப் பேரரசின் அரண்காப்பாக விளங்கியது. 1453இல் துருக்கியர் இதைக் கைப்பற்றினர். 1934இல் நெஸ்பர் எனப்ப் பெயர்பெற்ற இந்நகர், மறைந்த பல நாகரிகங்களுக்குச் சான்று பகரும் அரிய பண்பாட்டுச் செல்வம் என்பதற்காக 1983இல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றது.

**அங்கிரா தோ. ஹெரோயிஸ்மோ (போர்ச்சுகல்)**

அசோராவில் டெர்செப்ரா தீவிலுள்ள இத்துறைமுகம் 300 ஆண்டுகளாக ஐரோப்பாவையும் புதிய உலகையும் இணைத்து வந்தது. 15ஆம் நூற்றாண்டிலேயே இது இந்தியத் தீவுகளிலிருந்து ஐரோப்பா திரும்பும் போர்ச்சுக்கீசிய கப்பல்கள் தங்குமிடமாக இருந்தது. முற்கால அட்லாண்டிக் மாலுமிகள் தெரிந்தடுத்த இவ்விடம், காற்றைத் தடுக்கும் மலைகளால் சூழப்பட்டுள்ளது. ஆங்கரேஜை போர்சுக்கீசியர் அங்கிரா என்றதால், இது அப்பெயர் பெற்றது. 1534இல் அந்நகர் அசோரஸ் பராயரின் தலைமையகமானபின் அங்குப் பல புதிய வகை கட்டிடங்கள் கட்டப்பெற்றன. சாந்திசிமோ சல்பதோர் பேராயலம், மிசரிகோர்தியா சாந்தோ எஸ்பேரித்தோ ஆலயங்கள், பிரான்சிஸ்கன், சேசுசபைத் துறவிகள் கட்டிய கன்னிமடங்கள் இவற்றுள் சில. 1980இல் இந்நகரைக் குலுக்கிய நிலநடுக்கம் பல பழைய கட்டிடங்களை ஊறுபடுத்தியது. 1983இல் இவ்வரலாற்றுச் சிறப்புள்ள பகுதி உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றது. அது முதல் யுனெஸ்கோ பல வல்லுநர் குழுக்களை அங்கு அனுப்பி வருகின்றது. அவை, நகர வளர்ச்சித் திட்டத்தில் ஒரு பகுதியாக இதைப் பேணுவதற்காகத் திட்டம் வகுக்கத் துணை செய்கின்றன. இத்திட்டம் நிலநடுக்கத்தினால் ஊறுபட்ட கட்டிடங்களையும் வீடுகளையும் புதுப்பித்து, அதே நேரத்தில் அவற்றின் டெர்செப்ரா கட்டிடக் கலையையும் பேணி, நகரின் பழைய தோற்றத்தையும் பாதுகாக்க விழைகின்றது.

**புனித கால் கன்னிமடம் (சுவிட்ஸர்லாந்து)**

7-ஆம் நூற்றாண்டில் அயர்லாந்து நாட்டுத் துறவியான காலஸ் தம் மடாலயத்தை நிறுவியிருந்த ஸ்டைன் நதிப் பள்ளத்தாக்கில் ஆட்மர் எனும் துறவி 747இல் பெனடிக்ட் சபை மடாலயத்தையும் ஒரு பள்ளிக் கூடத்தையும்

நிறுவினார். 9,10ஆம் நூற்றாண்டுகளில் புனித கால் மடம் ஐரோப்பாவின் முக்கியப் பண்பாட்டு மையமானது. மடத்தலைவர் கோஸ்பெர்ட் காலத்தில் 9-ஆம் நூற்றாண்டில் அம்மடம் உயர்புகழ் பெற்றது. அப்போது புதிய கரோலிஞ்சிய கட்டிடக்கலைக் கேற்ப அது புதுப்பிக்கப்பட்டது. இன்று இக்கரோலிஞ்சிய மடாலயத்தில் எஞ்சியிருப்பதான எல்லா அடிப்படைகளும் 1960களில் நடைபெற்ற அகழாய்வுகளின்போது கிடைத்த கட்டிடப்பகுதிகளும். 16,18ஆம் நூற்றாண்டுகளில் திரும்பவும் கட்டப்பெற்ற இம்மடாலயத்தில் புதிய கலையியல்புள்ள அரிய பேராலயமும் நூலகமும் உள்ளன. ஐரோப்பிய அறிவு, மற்றும் சமய வாழ்க்கை வரலாற்றின் முக்கிய நிலையைக் காட்டும் புனித கால் மடம் 1983இல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றது.

## மசூதி நகரான பாகர்ஹாத் (வங்காள தேசம்)

முன்னால் கல்ஃபாத்தா பாத் எனப்பட்ட இந்நகரை 15-ஆம் நூற்றாண்டில் வங்காள விரிகுடாவின் கரையருகிலுள்ள உலகின் மாபெரும் வடிகால் பகுதியின் தென்பகுதியில் தளபதி உலுக்கான் ஜஹான் நிறுவினார். கடவுட்பற்றுள்ள இத்தளபதி செங்கல்லில் மசூதிகளும், மாளிகைகளும், பொதுக் கட்டிடங்களும், பாலங்களும், கல்லறை மாடங்களும் கட்டினார். உப்பு நீருள்ள இப்பகுதிக்குத் தேவையான நன்னீர்த் தேக்கங்கள் மக்களுக்குப் பெரிதும் உதவின. பாகர்ஹரத் நகரின் அரிய அழிபாடுகளில் டில்லிப் பேரரசின் கட்டிடக் கலையும் முஸ்லிம் வங்காளக் கலையும் கலந்துள்ளன. மசூதிகள் எளிய அமைப்புடையன. ஷையது கும்பாத் மசூதி இதற்கோர் எடுத்துக்காட்டு. அதில் 77 கவிகை மாடங்களும் 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள மாபெரும் தொழுகை மன்றமும் உள்ளன.1985இல உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்ற இப்பகுதியைப் பருவமழை, பரவிவரும் செடிகள், மண்ணின் உப்புத்தன்மை, கட்டிடங்களையும் அவற்றின் அடிப்படைகளையும். அரித்துவரும் காற்று ஆகியவை ஊறுபடுத்துகின்றன. 1985இல் யுனெஸ்கோ பாகர்ஹாத்தையும், வங்காள தேசத்திலுள்ள மற்றொரு உலக மரபுச் செல்வப் பகுதியான மஹார்பூரையும் பாதுகாக்கும் முயற்சியைத் தொடங்கியது. கட்டிடங்களின் வலுக்குறைந்த பகுதிகளை வலுப்படுத்துதலும், மழைநீர் உள்ளே கசிவதைத் தடுக்கும் வடிகால் அமைத்தலும், மக்கள் ஊறுபாடு செய்வதைத் தடுத்தலும் யுனெஸ்கோவின் தலையாய பணிகளாகும்.

## குசாராயினயிடையேசேசுசபை துறவிகள் (அர்ஜெண்டினா, பிரேசில்)

குசாரானி இந்தியரைக் கிறிஸ்தவராக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக 17,18ஆம் நூற்றாண்டுகளில் லத்தீன் அமெரிக்காவிலிருந்த ஸ்பானிய சேசுசபைத் துறவிகள் இந்தியரை ஒன்று சேர்க்கச் சமயக் கல்வி அளிக்கும் கிராமங்களை உருவாக்கினர். பிரேசிலுள்ள சால்மிகேல் தாமிசோஸ், அர்ஜெண்டினாவிலுள்ள சான் இஞ்ஞாசியோமினி சாந்தா ஆனா, நியூஸத்ரா செனோரரா தெ லொரத்தோ சாந்தா மரிய லா மேயோர் ஆகிய இந்த 5 சேசுசபை மடங்களும் 1983, 1984இல் உலக மரபுச் செல்வப்பட்டியலில் இடம்

பெற்றன. இவை எல்லாம் புதிய கலையியல்பில் கட்டப்பெற்றன. அங்கு ஆலயம், சேசு சபைக் குருக்களின் இல்லம், பள்ளி, இந்தியரின் இல்லங்கள், கல்லறை எல்லாம் பெரிய சதுக்கத்தைச் சுற்றி இருந்தன. பல ஆண்டுகளாக அர்ஜெண்டினாவும் பிரேசிலும் துறவி மடங்களை ஆராய்ந்து புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தன. அர்ஜெண்டினாவில் ஆய்வுகள், நிலப்படம் தயாரித்தல் ஆகிய பணிகள் சாந்தா, ஆனாவில் நடைபெற்றன. சான்இஞ்ஞாசியோவில் சுற்றுலா வசதிகள் சீர்படுத்தப்பெற்றன. சேசுசபை மடங்களைப் பேணும் பெரும் பன்னாட்டு முயற்சியை யுனெஸ்கோ விரைவில் தொடங்கும் கட்டிடங்களைப் பேணும் வழிகள் பற்றி அறிவுரைகள் ஏற்கனவே வழங்கப்பட்டு, வருகின்றன. வருங்காலத் திட்டத்தை வகுக்கும் கட்டடங்களுக்கு நிதியுதவியளிப்பதுடன் அப்பகுதிக் கட்டிடப் பட்டியலைத் தயாரித்தும் சிறு நூலையும் திரைப்படத்தையும் தயாரித்தும் யுனெஸ்கோ பணியாற்றி உள்ளது.

### ஃபோந்தனே சிஸ்டெர்சிய மடாலயம் (ஃபிரான்ஸ்)

வட பர்கண்டியிலுள்ள ஃபோந்தனே *1119* இல் அக்காலத்தில் ஆற்றல் மிக்கவரான கிளேர்வோ நகரப் பெர்னார்டால் நிறுவப்பட்டது. புனித பெர்னார்டு சிஸ்டர்சிய சபையில் சேர்ந்தார். மேல்நாட்டு மடாலயங்களில் எளிமையையும் தவத்தையும் புதுப்பிக்க விரும்பிய ஒரு சீர்திருத்தவாதி அச்சபையை நிறுவினார். சிஸ்டர்சிய மடாலயங்களில் சிந்தனையைச் சிதறடிக்கும் ஓவியமும், எழில் சிற்பங்களும், எல்லா வகை அலங்காரமும் தடை செய்யப்பட்டிருந்தன. ஃபோந்தனேயிலுள்ள ஆலயம் *1139-1147*இல் கட்டப்பெற்றது. அதன் பக்கப்பகுதியில் கோபுரம் இல்லை. ஆலயம் கட்டப்பெற்ற போதே கட்டப்பெற்ற மடங்களும் குருக்கள் கூடுமிடமும் தவிர, குளிர்காயும் அறை, உணவருந்தும் அறை, நீண்ட அழகிய வளைவுகளுள்ள வரவேற்பறை, படுக்கையறை ஆகியவையும் இன்னும் உள்ளன. படுக்கையறையின் மரப்பொருள்கள் *15*ஆம் நூற்றாண்டில் புதுப்பிக்கப்பட்டன. அதன் பிறகு, அவை பழுதடையவில்லை. உலைக்களம் *(1180)* ஐரோப்பாவிலுள்ள மிகப் பண்டையத் தொழிற் கூடங்களுள் ஒன்றாகும். *18*ஆம் நூற்றாண்டில் கைவிடப்பட்டுப் பிறகு விற்கப்பட்ட மடாலயம் அதிகமாக அழிபடவில்லை. *1902*இல் அங்கு எல்லா அலுவல்களும் நின்றுவிட்டன. *4* ஆண்டுகள் கழித்து அதன் புதிய உரிமையாளர் அதைப் புதுப்பிக்கத் தொடங்கினார். அதில் வெற்றி பெற்றார். இன்று அம்மடாலயம் *1981*இல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றது.

### திவ்ரிகியிலுள்ள பெரிய மசூதியும் மருத்துவமனையும் (துருக்கி)

கிழக்கு அனட்டோலியானின் மலைப்பகுதியிலுள்ள கட்டிடத்தொகுதியை *1228-1229*இல் துருக்கி மெஞ்குஸ்கித் வம்சத்தைச் சேர்ந்த ஆளுநர் அஹமது ஷா நிறுவினார். பெரிய மதேியில் *5* நடுக்கூடங்களும் கல் வளைவுகளும் உள்ளன. இவ்வளைவுகள் தொழில் நுட்பத்திறனையும் இடைவெளி அமைப்பையும் காட்டுகின்றன. தொழுகை அறைக்குமேல் வெவ்வேறு அளிவிலுள்ள இரு கவிகை மாடங்களுள்ளன. ஒன்று உடல்கழுவும் நீர்நிலைக்கு

மேலுள்ளது. மற்றது முக்கிய குவிமாடம் மெக்காவின் திசை நோக்கியுள்ள அலங்கார மாடத்தின் மேலுள்ளது. இவற்றிலுள்ள பூ பிறைவடிவியல் வேலைப்பாடுகள் அக்கால அர்மீனிய அல்லது ஜார்ஜியா வடிவங்களை நினைவூட்டுகின்றன. இம்மசூதியும் மருத்துவ மனையும் *1985*இல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றன.

### ஸ்டுடென்சியா மடாலயம் *(யூகோஸ்லாவியா)*

*1183*இல் செர்பிய அரசர் ஸ்டெஃபன் நெமாஞ்சா நிறுவிய இந்த ஸ்டுடென்சியா மடாலயத்தை அவருடைய புத்திரர்கள் வளர்த்தனர். இது நெமாஞ்சிய வம்சத்தின் இடுகாடாகி, பல நூற்றாண்டுகளாகச் செர்பிய வரலாற்றின் மையமாக இருந்தது. அம்மடாலயத்தினுள் ஆலயம் உட்பட பல கருவறைகளும் கட்டப் பெற்றன. அவற்றை இடைக்காலக் கிறிஸ்தவக் கலைஞர்கள் அழகிய பளிங்குச் சிற்பங்களாலும், எழிலார்ந்த சுவரோவியங்களாலும் அலங்கரித்தனர். புனித அன்னாள் மற்றும் புனித ஜோக்கியின் புகழ்மிகு அரசர் ஆலயத்திலுள்ள கன்னிமரியின் பிறப்பு எனும் சுவரோவியம் *1314*இல் முடிக்கப்பெற்றது. கன்னிமரி ஆலயத்திலுள்ள ஓவியங்கள் *(1208-1209)* மனித உணர்வுகளையும், இடத்தையும் புதிய கோணத்தில் காட்டுகின்றன. இவை பைசாண்டிய மற்றும் மேல்நாட்டு ஓவிய வரலாற்றின் ஒரு திருப்புமுனையாகும். *13*ஆம் நூற்றாண்டு இத்தாலிய ஓவியர்களான சிமாம்பூ, தூசியோ, கியோத்தோ ஆகியோர் இப்புதிய உணர்வைக் காட்டுகின்றனர். *1986*இல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்ற இம்மடாலயம் நன்கு பேணப்பட்டுள்ளது. ஆயினும், அதனருகில் ஓர் அணைக்கட்டி ஸ்டடென்சியா ஆற்றின் போக்கை மாற்றும் திட்டத்தைப் பற்றி அதிகாரிகள் கவலைப் படுகின்றனர்.

### தாசிலி நாஜர் *(அல்ஜீரியா)*

தென்கிழக்கு அல்ஜீரியாவில் மத்திய சகாராவிலுள்ள இப்பரந்த மேட்டு நிலம் *(பார்பரி மொழியில் தாசிலி) 72000* கி.மீ. பரப்புள்ளது. இது ஒருவகை இயற்கையரண் இதில் ஆழப் பிளவுகள் உண்டு. மேற்கில் *(சராசரி 1,500 மீ, உயரமுள்ள)* இம்மேட்டு நிலம் *700* கி.மீ. நீளமுள்ள *500* மீ உயரச் சரிவாக முடிகின்றது. உட்பகுதியில் பள்ளத்தாக்குகள் உள்ளன. சிலவற்றில் குளங்களும், ஊற்றுகளும், கரைகளில் மரங்களுள்ள நிலையான ஓடைகளும் உள்ளன. இப்பாலைவனச் சோலைகளில் குவாரக் இனத்தவர் நீண்டகாலமாக வாழ்கின்றனர். குவாரக் நாடோடிகள் மேட்டு நிலத்தில் பிற பகுதிகளில் திரிகின்றனர். அவர்களும் வறட்சியினாலும் தாவர நலிவினாலும் நிலையாகக் குடியேற விழைகின்றனர். இதனால் நுட்பமான சூழல் சமநிலைக்கு ஊறு விளையக்கூடும். தாசிலி நாஜர் ஆயிரக்கணக்கான பாறை ஓவியங்களுக்கும் பொறிப்புகளுக்கும் புகழ் பெற்றது. இதை உலகின் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மாபெரும் திறந்தவெளி அருங்காட்சியகம் எனலாம். இப்புதிய கற்காலப் *(கி.மு. 6000-2000)* பாறைக் கலையும் பிற தொல்பொருள்களும், தாவரங்களும்

விலங்குகளும் அங்கு வாழ்ந்த குறைவான வறட்சிக் காலத்தில் மக்கள் அப்பகுதியில் வாழ்ந்தனரெனக் காட்டுகின்றன. பண்பாட்டுச் செல்வங்களுக்காகவும் இயற்கைச் சிறப்புக்காகவும் இப்பகுதி உலக மரபுச்செல்வப் பட்டியலில் *1982*இல் இடம்பெற்றது. யுனெஸ்கோவின் உதவியுடன் இதைப்பெறும் திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றது.

**புனித மரியன்னை பேராலயமும் புனித மிக்கேல் ஆலயமும், ஹில்ஷீம் (ஜெர்மானிய கூட்டாட்சிக் குடியரசு)**

இவ்விரு கட்டிடங்களின் அமைப்பும் உள் வேலைப்பாடுகளும் ரோமானிய வழிக் கலை வழியில் புனித ரோமானியப் பேரரசின் சமயக் கலை வரலாற்றில் ஒரு முக்கிய பருவத்தைப்பற்றி விளக்குகின்றன. *9*ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டு *11*ஆம் நூற்றாண்டில் புதுப்பிக்கப் பெற்ற புனித மரியன்னை ஆலயத்தில் பல முக்கிய கலைப் படைப்புகள் உள்ளன. இரு கட்டிடங்களையும் கட்டுமாறு செய்தவர் *3*ஆம் ஆட்டோ பேரரசின் முக்கிய அறிவுரையாளரும் ஆவல்மிகு கலை ஆர்வலருமான ஆயர் பெர்ன்வார்டு *(993-1022)* ஆவார். பண்டைய பெனடிக்ட் சபை மடாலயத்திலுள்ள புனித மிக்கேல் ஆலயத்தை *(11-12*ஆம் நூற்றாண்டு*)* நிறுவியவர் புனித பெர்னார்டு ஆவார். புனித மிக்கேல் ஆலயம் ஆட்டோனிய-ஜெர்மானியக் கட்டிடக்கலையின் அரும் படைப்பாகும். அதன் ஒழுங்கான அமைப்பும், கன அளவுப் பரிமாணமும், *4* அழகிய வட்ட தூபிகளுக்கும் இரு பெரிய விளக்குக் கோபுரங்களுக்குமுள்ள முரண்பாட்டுத் தோற்றமும் குறிப்பிடத் தக்கவை. நடுக்கூட மரக்கூரையில் மாபெரும் ஜெசேயின் உருவமும் கிறிஸ்துநாதரின் வாழ்க்கைக் காட்சிகளும் தீட்டப்பெற்றுள்ளன இவ்விரு கட்டிடங்களும் *1985*இல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம் பெற்றன.

**மாகாவ் குகைகள் *(சீனா)***

இப்பௌத்தக் குகைக்கோயில் தொகுதி வடமேற்கு சீனாவில் கான் மாநிலத்தில் டக்லமாக்கன் பாலை நிலத்தின் ஓரத்தில் உள்ளது. துறவிகள் முதன் முதலாக *4*ஆம் நூற்றாண்டில் இக்குகைகளில் வேலை தொடங்கினர். ஒரு துறவி ஆயிரம் புத்தர்களைக் காட்சி கண்டதாகப் புராணம் கூறுமிடத்தில் இதைத் தொடங்கினர். வழியிலிருந்த இப்பகுதியில் *14*ஆம் நூற்றாண்டு வரை பணி தொடர்ந்தது. அதற்கு உள்ளாகப் பாறைகளில் நூற்றுக்கணக்கான குகைகள் வெட்டப்பெற்றுப் பல்வேறு மரபுகளைச் சேர்ந்த கலைஞர்களால் அங்குச் சுவரோவியங்களும் சிற்பங்களும் படைக்கப்பெற்றன. இன்று *496* குகைகள் அங்கு உள்ளன. கிரேக்க பௌத்த கலையும் புத்தரின் முன் வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஜாதகக் கதைகளின் படக்கலையும் உயர்ந்து விளங்கிய *(4-6*ஆம் நூற்றாண்டுகள்*)* காலத்திற்குப் பின் *6,9*ஆம் நூற்றாண்டுகளில் மாகாவ் கலை உச்ச நிலையடைந்தது. அப்போது பௌத்த சமய நூல்களாகச் சூத்திரங்கள் அன்றாட வாழ்க்கைக் காட்சிகள், வரலாற்றுப் பொருள்கள் சித்திரிக்கப் பெற்றன. *10-14* ஆம் நூற்றாண்டுகளில், குகைகளை

அலங்கரிக்க ஓவியப் பணியாளர் அமர்த்தப்பட்டபோது, ஒருவகை கோட்பாட்டுக் கலைமரபு தோன்றியது. *1987*இல் மகாவ் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றது. *(நன்றி-சூரியர் 1988)*

இவ்விளக்கங்கள் உலக மரபுச் சின்னங்களின் இயல்பு எவ்வகைத்து என்பதனை நமக்கு நன்கு உணர்த்த வல்லவை. இத்தகு தகுதிகள் நிரம்பிய பல மரபுச் செல்வங்கள் இந்தியாவிலே உண்டு. அவற்றுள் மிகப்பல தமிழகத்திலே உண்டு. அவற்றுள் மாமல்லபுரக்கோயில்களும் சிற்பங்களும், தஞ்சைப் பெரியகோயிலும்தான் இப்பட்டியலில் இடம்பெறும் வகைக்குப் புலனாக்கம் பெற்றுள்ளன. ஏனைய மரபுச் செல்வங்களின் அருமைப் பாட்டையும் புலப்படுத்துவது நமது கடமையாகும். காத்துப் போற்றுவது நம் கருத்தாகும்.

# பண்டைத் தமிழகச் சுருங்கைகள்

"இந்தச் சுரங்கப்பாதை தஞ்சாவூரிலிருந்து தரங்கம்பாடிக்குப் போகுதுங்க."

"அந்தச் சுரங்கப்பாதை திருச்சிராப்பள்ளிக்குப் போகுதுங்க."

"இந்தச் சுரங்கப்பாதை மாரியம்மன் கோயிலுக்குப் போகுதுங்க."

தஞ்சையிலும் அதுபோலவே தரங்கை, நாகை, திருச்சி, மாரியம்மன் கோயில் போன்ற ஊர்களிலும் இன்றும் எப்போதும் இத்தகைய செய்திகளை அடிக்கடி கேட்க நேரிடும். இதுபெரும்பான்மை தமிழகத்தின் எல்லாவூர்களுக்கும் பொருந்தும். அவ்வழக்கிற்குச் சான்றாக ஆங்காங்கே மரபுச் சின்னங்களில், அல்லது சார்ந்த பகுதிகளில் சில கட்டுமானச் சுருங்கை வழிகள் காணப்படுகின்றன. இவை தொடர்பாக ஆயத் தலைப்பட்டபோது பண்டைத் தமிழர்கள் சுருங்கைவழி அமைக்கும் தொழில் நுட்பம் கைவந்தகலையினராக விளங்கியமையைத் தமிழிலக்கியச் சான்றுகள் கீழ்வருமாறு பகர்கின்றன. பதிற்றுப்பத்தின் பழங்குறிப்புகள் பல்வகைச் சுருங்கை அமைப்புகளைச் சுட்டுகின்றன.

**"குண்டுகண் அகழிய மதில்பல கடந்து"** *(பதி, 45)*

என்ற தொடர் அகழியினிருபுறமும் அமைந்த மதில்களின் கீழ்புறத்தே ஆங்காங்கே அமைக்கப்பெற்றிருந்த நீர்போகு சுருங்கைகளைச் சுட்டுகிறது.

**"தொல்புகழ் மூதூர்ச் செல்குவை யாயிற்**
**செம்பொறிச் சிலம்பொ டணித்தழை தூங்கும்**
**எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்**
**கோள்வல் முதலைய குண்டுகண் அகழி**
**வானுறு ஓங்கிய வளைந்துசெய் புரிசை"** *(பதிற். 53)*

என்ற தொடர்கள் சேர நாட்டுக்கோட்டை, கோட்டை வாயில், தற்காப்பு எந்திர அமைப்புகள், வளைந்தமையும் 'இஞ்சி' அமைப்பு போல்வனவற்றை விளக்கம் செய்வதுடன் அகழியின் 'குண்டுகண்' அதாவது சுருங்கைகள் பற்றியும் குறிக்கின்றன.

வானுற ஓங்கி நிற்கும் உயரமான மதிலரண்களின்கண் அமைவதோடன்றிக் குறுகிய அடிப்பரப்பைக் கொண்ட "ஞாயில்" என்னும் உட்கொத்தளத்தின் கண்ணும் இத்தகு " குண்டுகண் " அமைவதுண்டு என்பதனை

**" போர்சுடு கமழ்புகை மாதிர மறைப்ப**
**மதில்வாய்த் தோன்ற லியாது தம்பழி யூக்குநர்**
**குண்டுகண் கழிய குறுந்தாள் ஞாயில்**
**ஆரெயிற் தோட்டி வௌவினை யேறொடு "** (பதிற். 71)

என்ற தொடர்கள் விளக்கம் செய்கின்றன. அடியொற்றிய பாங்கில் "பெருங்கை மருங்கிற் சுருங்கைச் சிறுவழி இருபெரு நீத்தம் புகுவது போல" என மணிமேகலை பேசுகிறது. மதுரை மாநகரின் கோட்டை அமைப்பு அருமையினைச் சிலப்பதிகாரம் மிகத் தெளிவாக,

**" வருந்தாதேகி மன்னவன் கூடற்**
**பொருந்துழி யறிந்து போதீங் கென்றலும்**
**இளைஞ்சூழ் மிளையொடு வளைவுடன்கிடந்த**
**விலங்கு நீர்ப்பரப்பின் வலம்புணரகழியிற்**
**பெருங்கை யானை இனநிரை பெயரும்**
**சுருங்கை வீதி மருங்கிற் போகி**
**கடிமதில்வாயில் காவலிற் சிறந்த**
**அடல்வாள் யவனர்க் கயிராது புக்காங்**
**காயிரங் கண்ணோ னருங்கலச் செப்பு**
**வாய்திறந் தன்ன மதிலவரைப்பு "** (சிலம்பு 14:60-69)

என்ற பகுதியில் புலப்படுத்துகிறது இவ்வியத்தினூடே யானைக் கூட்டமே செல்லத்தக்க உயரம், அகற்சி, நீளம் முதலிய பேரமைப்பினைக் கொண்ட சுருங்கை வீதி இருந்தமையினையும், அதனிருபுற வாயில்களிலும் யவனக்காவலர் காவலிருந்தமையும் குறிக்கப்பெற்றுள்ளது. இது பொதுமக்கள் பழக்கத்திற்கான பெருஞ்சுருங்கை வீதி தமிழகத்தில் அன்று இருந்தமையினைச் சுட்டுவதாகும். பெருங்கதையின்,

**" யூகி கூறிய ஒளிநில மருங்கிற்**
**பெருங்கல நிதியம்பெய்துவாய் அமைத்த**
**அரும்பிலத்து யாத்த அச்ச மாந்தர்**
**வாயில் பெற்றுவழிப் படர்ந் தாங்குப்**
**போக அமைந்த பொய்ந் நிலச் சுருங்கை "** (பெருங்: 2: 17: 90-94)

என்ற பாடற் தொடர்கள் பெரும் நிதிக்குவியலை மறைத்துவைக்கப் பயன்பட்ட நிலவறை பற்றிக் குறிக்கிறது. அவற்றை நிலமட்டத்தின் கீழ் இருந்ததை "அரும்பிலத்து " என்ற தொடராலும் "யாத்த" என்ற தொடர் அது மனிதமுயற்சியால் உருப்பெற்ற இயல்பையும் சுட்டுகின்றன. அந்நிலவறைக்குச் செல்லப்புகும் சுருங்கைப் படிக்கட்டு பொய்நிலச் சுருங்கையாக இருந்துள்ளது. அதாவது இயற்கையான நிலப்பரப்பு போன்ற மேல் தோற்றத்துடன் திகழ்ந்த கட்டுமானத்துடன் இருந்துள்ளது. அவ்வழி மாந்தரை மயக்கும் அச்சுறுத்தும் இருள், முட்டுத்திருப்பம், திடீர்குழிகள், வழியடைப்பு போன்றவற்றுடனும் திகழ்ந்தமையினை இவ்வழிகள் மேலும் புலனாக்கிப் பண்டைய தமிழகச் சுருங்கைத் தொழில்நுட்ப இயல்புகளை விளக்கி நிற்கின்றன.

மிக நீண்ட தொடர்புடையனவாக அமைந்த நீர்போகு சுருங்கைகள் பண்டைத் தமிழகத்திற்குப் பழக்கமான ஒன்றே என்பதனை.

**" நீணிலம் வகுத்து நீர்நிரந்து வந்திழிதரச்**
**சேணிலத் தியற்றிய சித்திரச் சுருங்கை "** *(சிந்தா - 142)*

என்ற சிந்தாமணியின் *142*வது பாடல் வரிகளும் விளக்குகின்றன.

இவையன்றிக் கட்டுமான வடிவாக்கங்களுடன் மாடிகளின் மீதும் சுருங்கை அமைப்புகள் இடம்படுத்தப்பெற்ற கட்டுமானத் தொழில் நுட்பம்

**" மாடமேற் சுருங்கையிலிருந்து "** *(சீகாளத்திப்புரா : 30)*

என்ற இலக்கியத் தொடர்களால் விளக்கம் பெறுகிறது.

இவ்வாறு தமிழகக் கட்டுமானத் தொழில்நுட்ப வரலாற்றுள் பண்டைக் காலந்தொட்டே இருந்துவரும் இச்சுருங்கை அமைப்பினைத் தஞ்சையில் இன்றும் காணலாகும் சில சுருங்கைகளை நுணுகி ஆய்ந்து அவற்றின் அமைவியல் திறத்தினைக் காணலாம்.

இத்தகைய "சுருங்கை"களாகத் தஞ்சையில் காணலாகும் பண்டைய கட்டுமானங்கள் யாவும் நிலமட்டத்திற்கும் கீழாக உள்ளமை அறியத்தக்கது.

'சுருங்கைகளை'

1. அரசர்களால் அவசரகாலத் தப்புகை வழியாகவும்
2. குடிநீர் வழங்கும் புழைத் தொடராகவும்
3. சாய்க்கடை வழிகளாகவும்
4. நிலவறை வழிகளாகவும்

நால்வகைப் பாகுபாட்டில் காணமுடிகிறது.

தஞ்சைக் கோட்டை *16*ஆம் நூற்றாண்டின் பழைமைச் சுவடுகளைக் கொண்டதாகும். இதில் உள்ள அவசரகாலத் தப்புகை வழிகளாக உள்ள சுருங்கை வழிகளில் இரண்டு இன்றும் காணத்தக்க நிலையில் உள்ளன. அவை அரண்மனையில் மராட்டியக் கொலுக்கூடத்திலும் சார்ஜா மாடிக்கட்டிடத்தின் மேற்குப்புறத்திலும் காணப்படுகின்றன.

குடிநீர்ப்புழைத் தொடர்களாக உள்ளவை சிவகங்கைக் குளத்தினின்றும் தொடங்கித் தஞ்சைக் கோட்டைக்குள் இருக்கும் நகர்ப்பகுதியின் பல பகுதிகளில் தொடர்ந்து காணப்படுகின்றன.

சாய்க்கடைகளாக உள்ளவை கோட்டைக்குள் காணப்படும் நாற்பெரு வீதிகளில் ஓரங்களிலும் இன்றியமையா உள் தெருக்களிலும் காணப்படுகின்றன.

நிலவறைக்கான சுருங்கைகள் அரண்மனையின் வேறு சில குடியிருப்புப் பகுதிகளில் உள.

இச்சுருங்கைகளின் கட்டுமான வடிவம், கட்டுமான முறை, பயன்படுபொருட்களின் தகுதி போன்றவை இவற்றின் பயன்பாடு பற்றிய அடிப்படையில் படைக்கப்பெற்றுள்ளன.

பெரும்பான்மை நிலமட்டத்திற்குக் கீழாகப் படைக்கப் பெறுகின்ற இச்சுருங்கைவழிகள், நிலப்பரப்பின் மீதாகவும் அமைக்கப் படுவதுண்டு. அதுபோது, அது கட்டுமானத் தொடரிடையே கீழ்ப்புறத்தில் தோற்றம் பெறுகிறது. அப்போது அதன் தொடர்ச்சித் தகுதி அல்லது இயல்பு கருதி, அகல உயரங்களில் பெருத்துக் கட்டுமானத் தொடரின் உருவாக்கத்திற்கேற்ற வடிவாக்கம் பெறுகிறது. இத்தகு சுருங்கை வழிகள் பண்டைய நகரியத் திட்டமிடுதலில் மழை அல்லது வெள்ளநீர் வடிகாலாக அல்லது ஆற்று, மதகுப் பாலக் கண்களாக உருப் பெற்றுள்ளன.

வடிகால் வழிகளாகத் தஞ்சைக் கோட்டையில் மேல அலங்கத்தில் இத்தகு புழைகளிரண்டு உள. ஆறு அல்லது மதகுக் கண்களை நாமறிவோம். இச் "சுருங்கை வழிகளின்" பொதுவான இயல்புகள் யாவை எனப் பார்க்கும்போது,

1. இவை தரைமட்டத்திற்குக் கீழ் அமைவன.
2. கட்டுமானம் பெறுவன.
3. பெரும்பாலும் செங்கல் சுண்ணக் காரைப் பற்றாசுக் பொருட்களால் உருப்பெறுபவை.
4. வளைவுக் கூரை முகட்டைக் கொண்டவை
5. பெரும்நிலையில் சில நூறு அடிகள் வரை நீட்சியுடையவை என்பது

புலனாகின்றது. சிறப்பியல்புகளாகக் காணப்பெறுபவை வகைமைக்கேற்ப மாறுகொள்கின்றன. அவற்றுள் தப்புகை வழி பற்றி அறிய முற்படுங்கால்,

1. ஒரு ஆள் செல்லத்தக்க வகையில் இரண்டுஅல்லது இரண்டரை அடி அகலமும் ஆறுமுதல் ஏழடி உயரமும் கொண்ட சந்து வழியாக

2. நடுநடுவே கிளை வழிகள் உடையனவாயும்

3. அக்கிளை வழிகளிடையே பொய் அல்லது மயக்கு வழிகள் (முட்டுச் சந்துப்போல) உள்ளவையாயும்.

4. தேவைக்கேற்ப ஒளி, காற்றுப்புழக்கம் வேண்டி ஆங்காங்கே சிறு சிறு ஓட்டைகளை பக்கவாட்டிலோ அன்றிக் கூரைப் பகுதியிலோ கொண்டவையாயும்,

5. தரைப்பகுதி பாவுக்கற்களால் அல்லது நடைக்கற்களால் உருப்படுத்தப் பெற்றவையாயும்.

6. சுவர்கள் செங்கற்களால் கட்டாய நெட்டாய கட்டமுறைகளில் தேவைக்கேற்ப இடைஇடையே செங்கற்சக்கைகளைக் கொண்டவையாயும்,

7. பக்க அணைவு மண்திணிப்பின் தகுதிக்கேற்பச் சுவர்க்கனம் கூடியும் குறைந்தும்,

8. அதுபோலவே பிஞ்சுகளைக் கொண்டும்,

9. முட்டுத் திருப்பங்களையும் மேல்கீழ் இறக்கங்களைக் கொண்டவையாயும்,

10. கூரை வளைவு அல்லது சுடர் வளைவு, அல்லது பிறை வளைவுக் கூரை வடிவத்தைக் கொண்டவையாயும்,

11. அக்கூரைகள் மேற்புறமும் கீழ்ப்புறமும் தட்டோட்டுப் பதிவுப் பரப்பாகவும் நடுவே சப்பைக்கல் சுண்ணப்பற்றாசுக்காரையால் உருப்பெற்றவையாயும்.

12. நிலவிசைக்கேற்பப் பொதுவான கட்டுமான ஒழுங்குகளைக் கொண்டவையாகவும் உள்ளன.

13. பக்கச்சுவர்கள் கூரையின் உட்புறம் முதலியவை இருவகைக் களிமண் பூச்சுப் படிவங்களைக் கொண்டு ஒரே அளவான பரப்பாகக் காணப்படுகின்றன.

14. முட்டுத்திருப்பங்களை ஒட்டிய மூலைப் பகுதிகளில் துளை அல்லது காடி அடிக்கப்பெற்ற கருங்கற்துண்டுகள் சுவரிடையே பதிக்கப்பெற்று, அக்காலத்தில் தீவட்டிகள் செருகப்பெற்று ஒளிதரும் வகையில் அருமையுற அமைந்துள்ளன.

15. மேற்கூரை ஒருக்களித்த சப்பைச் செங்கல் அடுக்குகளைக் கொண்டு மிகுதியான காரைப்பற்றுடன் உருவாக்கப் பெற்றுள்ளன.

இவையன்றிச், சுருங்கை வழித் தொடரின் சுருக்கம் கட்டுமானப் பொருள் பெறும் வாய்ப்பு, சுற்றுப்புறச் சூழலமைவு, இயற்கையின் கொடை இவற்றின் அடிப்படையில் கருங்கல்துண்டுகளைக் கொண்டு கட்டப் பெற்றும், பாறை நிலப்பகுதியைக் குடைந்தும், முன்னரே உள்ள மலைப் பிளவு, குகைகள் இவற்றைத் தேவைக்கேற்பச் சிறுமாற்றம் அல்லது ஒழுங்குறச் செய்து, தப்புகை வழியாகப் பயன்படுத்துவதும் உண்டு. இத்தகு பாதைகளைத் தமிழகத்தில் சித்தண்ணவாசல் மலைப்பகுதியிலும், திருச்செந்தூர் வள்ளிகுகைப் பகுதியிலும், திருநெல்வேலி கழுகுமலைக் குன்றுப் பகுதியிலும், வீரசிகாமணி குன்றகப் பகுதியிலும் காணலாகும். மதுராந்தகத்திற்கணித்துள்ள வடதிருச்சிற்றம்பலப் பகுதியிலும் இவ்வகைத் தப்புகை வழி உண்டு என்பர்.

இத்தப்புகை வழியின் கூடிய சிறப்பு இதன் வளைவு முகட்டு முகப்பு உருவாக்கமேயாகும். இது இயற்கை அளித்த வடிவாக்கம். கருங்கல் மலைப் பகுதிகளில் மனிதனால் உருப்பெற்ற ஓரிரு குகை முகப்புகளைத் தவிர பிற இயற்கைமாற்றம். கட்டப்பெற்ற சுருங்கைகள் யாவும் இவ்வளைவுகளை முகடாகப்பெற யாது காரணம், காணப்பெறும் வளைவின் உண்மை நீளம் அதன் இரு முனைப் பகுதிகட்குமிடைப்பட்ட சரியான அகலத்தை விடக் கூடுதலாகும். மேலும் இச்சரியான அகலம் நிறைவுற நிற்கும் செவ்வக அல்லது சதுர சந்து வழிக்கும், கூரையின் உட்பரப்பிற்கும் இடையே ஒரு வெற்று அறை அல்லது கால் வட்டக் கூடு உருவாவதை உணரலாம். இரு சுவர்க்கால்களில் இருபுறமும் பதிவு கொண்டு ஒரு அகலத்திற்கு உட்பட்டு ஓர் குறிப்பிட்ட ஆர அல்லது விட்ட அளவினை இடைவெளியாகக் கொண்டு எழுகின்ற இவ்வளைவு மேலுள்ள சுமையினைப் பல கோணங்களில் பகிர்ந்து ஏந்தித் தாங்கிப்புறப்படுத்தும் இயல்புடையதாகும். மேலும், இயற்கையின் காற்றுவிசை, ஒளித்தாக்கம், ஈர அரிப்பு, உதிர்தல் இயல்பு, ஆகியவற்றின் இயல்பிற்கேற்ப இயற்கை, இயற்கையோடு முரணாமல் இயைபுகாட்டி, தம்மைக் காத்துக் கொள்ளும் குணத்தின் வடிவாக இயற்கைப் பாழிகள், குகைகள் இவற்றது முகப்பு மற்றும் உருவாக்கம் இத்தகு வளைவுகளைக் கொண்டிருப்பதே, இவ்வகை வளைவுகளில் கொள்வகை அடிப்படை எனலாம். இவ்வளைவுக் கூரைகளுள் கூர்வளைவு, கூரை வளைவு, பிறை வளைவு முதலிய வடிவங்கள் மேற்பகுதியில் உள்ள தரையியல்பிற்கேற்ப மாறுபடும். மேலும் கூரையின் மேற்பரப்பைக் கூர்முகடாகவும் உட்பரப்பை வளைவு, அல்லது நெறிமுகடாகவும் தேவை மற்றும் தோற்ற வனப்புக் கருதி அமைத்துக் கொள்ளல்

உண்டு. ஆகக் கூடுதலில் ஒரு சுருங்கை என்பது முகப்பு எத்தோற்றத்ததோ அதன் அடுக்கு நீட்சியாகவே பெரும்பான்மை தொடர்க்கட்டுமானத்தில் அமைய அதன் வடிவாக்கம் முட்டுத் திருப்பங்களாலேயே வேறுபாடு பெறுகிறது.

கூடை வளைவுமுகடுகள், மணற்சாரியான மண்திணிப்பு அற்ற நிலப்பகுதியில் உருவாக்கப் பெறும் சுருங்கைகட்கு அமைந்து கூரை மீது போட்டு நிரவப்பெறும் மணற் பரப்பைக் கீழ்ச்சரியாது காப்பதற்கும் ஏதுவாக உள்ளது.

சுவர்க்கட்டுமானத்தொடர் நீட்சியுடையதாயின், தேவைக்கேற்ப நடுநடுவே கட்டிடத் தூண்களைச் சில்வாய் அமைப்பின் பக்கச்சுவர்களைப் பதிவு கொண்டவையாகவே உருவாக்கும் மரபும் காணப்பெறுகிறது. இத்தூண்களின் இருபுறப் பிதுக்கம் சுருங்கையில் இயற்கையாக இருக்கும் இருளில் ஒரு ஆள் தன்னைச் சுவரோடு சுவராக மறைத்துக்கொண்டு, தப்பிக்கும் வழிவகையாகவும் அமைகிறது. இது கருதியே சுருங்கை வழிகளில் முட்டுத்திருப்பப் பகுதிகளிலேயே ஒளிக்கீற்றுகளையும் காற்றோட்டத்தையும் தரும் நேர்முக ஒட்டைகள் புறத்தோற்றத்திற்கு வேறொரு கட்டிடப் பகுதியைச் சார்ந்தது போலமைந்து மெல்லிய குறைவான ஒளிதந்து நேர்த்தொடர்ச்சிப்பாதையின் இருளைச் சிதைவுறாமல் காக்கும் வகையில் அமைக்கப்பெறுகின்றன. காற்று வழங்கும் துளைகளும் இவ்வாறே வேறொரு கட்டிடப்பகுதியில் வெளிப்புறத்தே திறப்புப்பெற்றுச் சுவர்களிடையே மடக்கு நிலையில் அமைக்கப்பெற்றுக் காற்றை வழங்குகின்றன. இவற்றின் புறமுகப்பு காற்றை மிகுதிகொண்டு விசையுடன் வழங்கும் வகையில் *6* அங்குலம் அகலம் *2½* அங்குலம் உயரம் கொண்ட செவ்வக வடிவு அல்லது *3 x 3* சதுர வடிவ இவற்றைக்கொண்டு அமைக்கப் பெறுகின்றன.

குடிநீர்ப்புகழைத் தொடர்களாகத் தஞ்சையின் *16*-ஆம் *17*-ஆம் நூற்றாண்டுக் குடி நீர்வழங்குத் திட்டம் அளித்துள்ள ஆழ்புழைத் தொடர்கள் இன்றளவும் செயலாக்கம் புரியத்தக்க சீர்மையுடன் உள்ளன. இப்புழைத் தொடரை மராட்டியர் காலத் தஞ்சை “ஜலசூத்திரம்” எனக் கண்டு அவ்வவப்போது சீருற மேலாண்மைபுரிந்து *1960*வரை இவையாவும் மிகச் சரியாக இயங்கின. இன்றும் சில இடங்களைத் தவிர பிற, செயல்புரியும் தகுதியுடன் உள்ளன. இவையாவும் செங்கல் சுண்ணக்காரை கொண்டு உருவாக்கம் பெற்ற புழைத்தொடர்களாகும். ஆங்காங்கே இவை சில கேணிகள் அல்லது குளங்களில் திறப்புப்பெற்று மீளவும் அந்நீர்த்தடத்தின் பிற பகுதியில் கிளைத்துத் தொடரும் தகுதியுடன் உள்ளன. இவற்றது முகப்பு, சிவகங்கைக் குளத்தின் கீழ்க்கரையில் படிக்கட்டுகளை ஒட்டிய தனிப்பகுதியில் உள்ளது. சதுர முகப்பாக உள்ள இப்புழைத் தொடர் முகப்பு மேற்புறத்தே கருங்கல் உத்திரங்களைக் கொண்டுள்ளது. கோட்டைக்குள்ளிருக்கும் வீடுகள், குளங்கள் யாவற்றுக்கும் தண்ணீர் வழங்கும் தகுதியில் விசையுடன் தண்ணீர் இப்புழைத் தொடருள் புகுத்தப்படுத்தற்கான வேறு சில எளிய ஆனால் சிறந்த நீர்த்தள்ளு

பலகைகளை இயக்கும் நெடுங்கால் கம்பங்களே இன்றும் இங்கு விளக்குவாரின்றி வெறுமனே நின்றகல் மன்றத்தைப் படைத்துள்ளன. பராமரிப்பு இன்றியும் பாழ்படுத்தும் போக்கினாலும் இவ்வரிய நீர்ச்சுருங்கைகள் விரைவில் காணாமற் போகும் போக்கில் உள. சாய்க்கடைப் புழைகளைப் பொறுத்தவரை தஞ்சை நகரமே கி.பி.16-ஆம் நூற்றாண்டிலேயே புதைவடிவ சாய்க்கடைகளைக் கொண்டிருந்த முன்னோடி நகராகத் திகழ்ந்துளது. இது கருதியே தஞ்சையின் நால்வகைச் சிறப்புகளுள் சாய்க்கடையையும் ஒன்றென்பர்.

நகர மக்கள் அப்புறமாக்கும் கழிவுகளை, வீடுகள், சிறு சிறு சந்துகள், தெருக்கள் இவற்றில் உள்ள திறப்புச் சாய்க்கடைகள் வழியாகப் பெற்று, ஒருசேரத் தம்முள் கொண்டு நாற்புறபெருவீதிகள் வழியாகக் கடந்து. கோட்டையின் கிழக்குப்புறத்தே அகழியையும் கடந்து, தரிசுப்புறம் போக்கில் பாய்ந்து வளம் சேர்க்கும் வகையில் உள்ள இச்சாய்க்கடைச் சுருங்கைகள் அற்புதமான தஞ்சைப் படைப்பெனலாம். ஏனெனில்,

*1.* தஞ்சைக் கோட்டை நகரின் நிலப்பரப்பின் தகுதிக்கேற்ப இச்சாய்க்கடைச் சுருங்கைகள் அளவுற “வாட்டம்” கொண்டவையாக அமைக்கப்பெற்றுள்ளதால் இன்றளவும் ஏன் எதிர்காலத்திலும் நன்கு பயன்படத்தக்கவையாக உள.

*2.* சாலைகளை ஒட்டியிருப்பதாலும், மக்கள் கழிவு செய்யும் பொருட்களை அப்புறப்படுத்தும் கருவியாதலானும் எப்போதும் அடைப்புகட்கு உள்ளாவது சாய்க்கடை இயல்பு. எனவே இச்சுருங்கைப் புழைகளின் கூரை பற்றாசுக் கற்கூரைத் தொடராக இருப்பின், பழுது அல்லது அடைப்பு நீக்குவது கடுமையாயும் இயலாததாயும் ஆகிவிடும். மேலும், அடுத்தடுத்த இடைவெளியில் நேரும் காற்றழுத்தம் தண்ணீரை விசையுடன் அப்புறமாக்கும். எனவே, ஆங்காங்கே கட்டை வளைவுக் கூரைகளைப் பற்றாகக் கல்கூரையாக ஓரளவான இடைவெளியில் ஒன்றடுத்து ஒன்றாகப் படைத்து இடைவெளியைத், தாற்காலிக மூடு அமைப்புகளைக் கொண்டு மூடி, நகரியம் பேணியது பழந்தஞ்சை அரசு. போற்றத்தக்கத் தொழில்நுட்ப மேலாண்மையன்றோ அது. இத்தகு சாய்க்கடை அமைவை இன்றும் தஞ்சைக் கோட்டை நகர்ப்புறத்தில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழக அரண்மனை வளாகத்தை ஒட்டியதாகக் காணலாகும்.

இனி நிலவறைச் சுருங்கைகளாக உள்ளவை நிலமட்டத்திற்குக் கீழே செவ்வக அல்லது சதுர வடிவில் அமைக்கப்பெற்ற நிலவறைகட்குச் செல்லப் பயன்படும் இடைவெளியேயாகும். கீழ்நோக்கி இறங்கும் படிகள் ஒவ்வொன்றும் கூரைக்கு இடையேயுள்ள இடைவெளியை மாறாத அளவில் பெறும் வகையில் மேற்கூரையும் படிமுறையும் ஒரே அளவில் இறக்கக்கோண அளவீட்டில் அமைக்கப்பெறுவதில்லை.


இத்தகு சுருங்கையொன்றைப் புன்னை நல்லூர்மாரியம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள பாழ்மண்டபத்தில் இன்றுங்காணலாம்.

பிரிவு: அ. நகரியல்.


## பண்டைய கிராம, நகர வடிவாக்க வரைவுகள்.

### கேடம்: நகரமைவு.

### ஆற்றங்கரை.






1. துறைமுகம் ௨ அங்காடி ௩. வைப்பறைகள்
4. சூத்திரர் இருக்கை 5. காவல்மாடம்.



௨. சதுர்முகம்: நகரமைவு.


3. நந்தியாவர்தம் : நகரமைவு.






3.அ. நந்தியாவர்தம் : பிறிதொரு அமைவு.

4. கர்வடம்: நகரமைவு.






1. கோயில் 2. அரண்மனை. 3. அமைச்சர் இருப்பு.
4. சான்றோர் இருப்பு, 5. பொதுக் கட்டடங்கள். 6. சத்திரியர் இருக்கை.
7. பூசனையாளர் இருப்பு. 8. கட்டட ஒப்பனைத் கலைஞரிருப்பு.
9. வைசியரிருப்பு 10. காவலரிருப்பு.



5. கார்முகம்: நகரமைவு.


6. தண்டகம்: நகரமைவு.






7. சர்வதோ பத்ரம்: நகரமைவு.


8. சுவஸ்திகம்: நகரமைவு.






9. பிரஸ்தரம்: நகரமைவு.


10. பத்மகம் : நகரமைவு.






10.அ. பத்மகம் : பிரிதொகு அமைவு.

1. உபபீட அதிஷ்டான குறுக்குவெட்டுத் தோற்றம்.




உ. அதிட்டானம் (இடைக்காலச் சோழர் பணி).

தஞ்சை பெரியகோயில்.




3.அதிட்டான வேறுபாடுகள்.




4. பாதபந்த அதிட்டானம் (சோழர்பணி).

(பஞ்ச வர்கம்) (காஸ்யபம்)




5. பிரதிபந்த அதிட்டானம் (பிறிதொரு வழிவாக்கம்)

(காஸ்யபம்)





அப்ஜ பந்தம்.

6. பிரதி பந்தம் – அதிட்டானம். (காஸ்யபம்)




பிரதி – சுந்தரம்.

7. பல்வேறு சாத்திரங்கள் காட்டும் அஷ்டாங்க உபபீடம்.



٢

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113

அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2 | 110.00 |
| எட்டையபுரப் பள்ளு | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| நானும் என் எழுத்தும் | 50.00 |
| தமிழர் கொடிகள் | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி-2 | 55.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |

Pub.No. 417 **தமிழர் கட்டிடக்கலை** **30.00**